69

உ

திருச்சிற்றம்பலம்.

# சிவஞான போத விளைவிடை.

கோவிற்பட்டி,
சாமி விருதை. சிவஞான யோகிகள்,
இயற்றியது.

தூத்துக்குடி,
சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

Copy Right.] [விலை ரூ. 1

1930.

உ

சிவனார்பாற் கேட்டு நந்தியங் கடவுள்
இயற்றியருளிய போத சூத்திரமாகிய

# சிவஞானபோத வினாவிடை.

இஃது

தமிழ்ப் பிரமசூத்திராசிரியரும்,
சென்னை மாகாண சித்தவைத்திய சங்க அமைச்சரும் ஆகிய
கோவிற்பட்டி,
சாமி. விருதை, சிவஞான யோகிகளால்
இயற்றப்பட்டது.

தூத்துக்குடி. சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

Registered Copy right.

1930.

உ

சிவமயம்.

# சிறப்புப் பாயிரம்.

## மறைத்திருவன் சுவாமி வேதாசலம் அவர்கள்,

"ஞானசாகரம்" பத்திராதிபர், பல்லாவரம்.

அருட்டிருவாளரான சுவாமி வி. சிவஞான யோகிகட்கு வணக்கம்பல.

அடிகாள் !

தாங்கள் அருள்கூர்ந்துவரைந்த கடிதமும், அதனுடன் உய்த்த 'சிவஞானபோத வினவிடை'யின் அருமையுங் கண்டு வியந்து இது மாணுக்கர்க்கும் பிறர்க்கும் மெய்யறிவு புகட்டும் பயனுடைத்தாமெனை மகிழ்ந்தேன். இந்நூலின்கட் டமிழ்ச் சங்கங்கட்குத் தாங்கள் செய்திருக்குங் காலக் கணக்கும் "மாணிக்கவாசகர் வரலாறுங்காலமும்" என்னும் எனது நூலில் யான் அவைகட்குச் செய்திருக்குங் காலக் கணக்கும் முரணுமாயினுந் தமிழ்வேத ஆரிய வேதங்களைப் பற்றியும், சிவாகமங்கள் 'சிவஞானபோதம்' முதலியவை களைப்பற்றியுந் தாங்கள் ஆராய்ந்து கூறியனவெல்லாம் எனக்கு முழுதும் உடன்பாடேயாகும். இச்சிறந்தநூல் நீடு நின்று நிலவுக. பிறபின், நலம்.

தங்களன்புள்ள

மறைமலையடிகள்.

மணிவாசகமன்றம்,
திருநெல்வேலி டவுன்.
18—7—1930.

மறைத்திருவன்

**கா. சுப்பிரமணியபிள்ளை**, எம். ஏ. எம். எல்.

அன்பிலும், அறிவிலும் தலைசிறந்த அடிகட்குவணக்கம்.

தாங்கள் எழுதிய 'சிவஞானபோத விளுவிடை' பாடசாலை மாணவர்க்கும் பிறர்க்கும் சிவஞானபோத அரிய நுண்பொருளை அங்கைநெல்லிபோல் சுவைமிக்க எளியசெந்தமிழ் நடையில் தெளிவுபடுத்துவதால் அது அளவற்ற பெருமையுடையது. தமிழிலேயே சிவபெருமான் மறைகளையும் ஆகம அருள் நூல்களையும் ஆதியிலே அருளிச்செய்தாரென்ற அரிய உண்மையை நிலைநிறுவுதற்குப் போதிய ஆதாரங்கள் இதில் காணப்படுகின்றன. சிவஞானபோதம் நந்திபெருமானால் அருளிச்செய்யப்பட்டதென்பதற்குத் திருமூலர் திருமந்திரத்தில் ஆதாரங் காட்டிய சிறப்புத் தங்கட்கேயுரியது. தமிழர் நாகரிகமும் சிவநெறியும் உலகெங்கும் பரவியிருந்தனவென்பதற்குந் தக்க ஆதாரங்கள் காட்டிய பேருதவிக்குத் தமிழுலகமும் சைவ உலகமும் தங்கட்குப் பெரிதும் கடப்பாடுடையன. இந்நூலினைத் தமிழ் மக்கள் யாவரும் வாங்கிப்படித்துப் பெரும்பயன் துய்க்கும்படி திருவருளை வழுத்துகின்றேன்.

இங்ஙனம்,
கா. சுப்பிரமணியன்.

மறைத்திருவன்.

சாமி, விருதை சிவஞான யோகிகளுக்கு வணக்கம் பலப்பல!

அன்பார்ந்த அடிகாள் !

கடவுளுண்மை, தமிழின் பெருமை, தமிழ்மறையாகமங்கள், வடசொல்மறையாகமங்கள், அவற்றின் காலவரையறை, சிவநெறி பரவிய நாடுகள் முதலியவற்றின் தெளிவு பெறாமல் இம்மண்ணுலகம் மயங்கத், தான் றோன்றிகள் கொக்கரித்துலவு மிக்காலத்தில் சைவ உலகஞ்செய்த நற்றவப்பயனே தங்கள் சிவஞானபோத விஞவிடை வெளிவரப்பெற்றனம்.

நாங்களிரண்டாண்டுகளாய் முயன்று சிவஞானபோதத் தெளிவுரை யொன்றெழுதிமுடித்த வமையம், இச்சிவஞான போதவிஞவிடை கண்ணுறக்கிடைத்துப் படித்துப்பார்த்து எங்கள் கருத்துக்களெல்லாம் இதிற்கண்டு இந்நூல் வெளிப்படலால் நம் கருத்து முற்றுப்பெறுகின்றதென்று கருதிமிக அகமகிழ்ந்து களிப்பெய்தினம்.

சிவஞர்பாற் கேட்ட பொருளை நந்தியங்கடவுள் உலகம் நன்குணர்ந்துய்யச் சூத்திரமாக இயற்றியருளிய சிவஞான போத நூலையும், சிவஞானவடிவராகிய மெய்கண்ட தேவர் ஏதுகாட்டுகளோடு உரைத்த பொழிப்பையும் தாங்கள் எழுதி வெளியிட்ட விஞவிடை வடிவாகிய தெளிவுரை நன்கு விரித்து விளக்குகின்றது.

இந்நூலை நல்லாசிரியர்பாற் கேட்டுத் தெளியும் சைவ நன்மக்களனைவரும் முப்பொரு ளுண்மையை ஐயமறத் தேர்ந்து ஞானமுதிர்ச்சிபெற்றுய்வரென்பது தெங்கள் துணிவு.

சு. செல்லப்ப முதலியார்,
தென்னிந்திய ரெயில்வே ரிட்ட
யர்டு ஆபீசர், திருசிரபுரம்சைவ
சித்தாந்தவவை முன்னமைச்சர்,
மெய்ப்பொருள் ஆராய்ச்சி நிலையம்
பனையூர் (திருவையாறு)

அண்ணாத்துரை முதலியார்,
மிராசுதார்,
மெய்ப்பொருள் ஆராய்ச்சிநிலையம்
பனையூர்,
(திருவையாறு)
12—8—30

மறைத்திருவன். தி. இலக்குமணப்பிள்ளையவர்கள்,
பி. ஏ. பென்ஷன் டிப்டி கலெக்டர்,
திருவனந்தபுரம்.

**சாற்றுகவி.**

1. ஏர்சால்தனித்தீந்தமிழ்மொழியுமிறையின்ஞானச்சுவைகெழும்பும்
பேர்சால்தமிழினிலக்கியமும் நலங்கள்பிறங்கும் பலதுறைக்கண்
சீர்சால்தமிழாருங்கலையுஞ் சிறக்கவுழைக்குந்திட்பமதி
லார்சால்புடைய சிவஞானயோகிதனைப்போ லாவாரே.

2. அள்ளக்குறையா வறிவாழிச் சைவசமயக்குளிர்முத்தை
யுள்ளக்கமலமதிற் சொரிந்திவ்வுலகோருய்ய வுதவிநின்றான்
தெள்ளத்தெளிந்த வுரைநடையிற் சிவஞானஞ்சேர்யோகியந்த
வள்ளற்குலகநலங்கருதிவாய்ப்பச்செயுங் கைம்மாறுளதோ.

தி. இலக்குமணப்பிள்ளை,
1—9—1930.

மறைத்திருவன்.

S. T. பொன்னம்பலநாத முதலியாரவர்கள்,
வழக்கறிஞர், பெரியபண்ணை, ஸ்ரீவைகுண்டம்.

ஆரியமுந் தமிழும் ஆய்ந்த நற்றவ!

தங்கள் திருமுகமும் 'சிவஞானபோத வினாவிடை'யும் வரப்பெற்று அதில் தமிழ்மறை யாகமங்களின் தொன்மையையும் பெருமையையும், ஆரிய மறையாகமங்களின் பொருள் உண்மையையும் கூறியிருத்தலைப் படித்துப்பார்த்து மிகமகிழ்ச்சி யடைந்தனன். உயிர்க்குயிர்போலுணவளிக்கும் இந்நூலை யூன்றி முறை முறை படிக்கப் புதிதுபுதிதாயூறியெழும் அறிவென்பதொருதலை. "எங்ஙனிருந்ததென்றெவ் வண்ணஞ்சொல்லுகே னங்கனிருந்ததென்" றமைதலே என் கருத்தாம். தமிழையும் தமிழ் மக்களையும் பீடித்துவருமறியாமை நோய்க்கு இந்நூலோரருமருந்தாம்.

தங்களன்புக்குரிய
தீ. பொன்னம்பலநாதன்.

# FOREWORD.

This edition of 'Sivagnana Botham' by Viruthai Sivagnana Yogigal is distinguished from the others published hitherto by its learned introduction which quotes chapter and verse from the Preface to that work, fromSivagnana Siddhiar Parapaksham and from Tirumular's Tirumantram to prove convincingly that Nandhi was the author of the dozen sutras transmitted to posterity through Sanarkumarar and others and that Meikandar was but the first expositor and paraphraser thereof with 'Varthika Polippu'. The catechistic form which the present Editor has adoped to bring out clearly the meaning and significance of each sutram with a worldof quotations andillustrations from Upanishads Devaram, Tirumantram etc., will be found very useful by the students of the Saiva Siddhanta Philosophy, which is the most precious inheritance of the Tamil race and which every oriental scholar admires as the cream of the Tamilian thought, culture and civilisation. The catechism covers 122 pages and is full of valuable matter which is fit food for thought and reflection. For these reasons it deserves to be read and patronized by every Tamilian born and bred and by every lover and admirer of the Tamilian Philosophy.

M. S. Purnalingam Pillai, B.A. L.T.,
Prof. of English (Retired.)

The Model School,
Munnirpallam
1st Aug. 1930.



SAMI, VIRUDAI, SIVAGYANA YOGIGAL.

# முன்னுரை

உலகெல்லாம் ஆக்கிக்காத்தழித்து மறைத்தருளும் கடவுள், எங்குஞ் சிவணியிருத்தலாற் சிவனென்றழைக்கப் படுகின்றனன். அவன் தன்வயத்தனுதல், முற்று முணர்தல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை முதலிய உயர்வொப்பற்ற குணங் களுடைய பெரும்பொருள் (பிரமம்). அவ்வொருவனே பதி. ஆணவம், மாயை, கன்மங் (வினை) களையுடைய உயிர் கள் பசுக்கள். அவை அளவிறந்தன உயிர்கள் பிறப்பிறப்பு முதலியவற்றை யடைதற்குரிய உடல், (தனு) கருவிகள் உலகம் துய்ப்பு (போகம்) களாக ஆவதுபாசம். பசுக்கள் மும்மலநீங்கி வீடுபேறடையும் வழியை உணர்த்தியருள வல்லவன் முற்றறிஞனுகிய சிவனொருவனே. இப்பொழுது இந்து மாக்கடலுள் மூழ்கியிருக்கும் தமிழகத்திருந்த தென் மதுரையில் வீற்றிருந்த முதற்கழகம் 16000 ஆண்டுகளுக்கு முன் துவக்கி நிகழ்ந்தது. அம்முதற்கழக காலத்திலேயே சிவனுர், நந்தியங்கடவுளுக்குத் தமிழ் மறையாகமங்களை அருளிச்செய்தார். திருமூலர் திருமந்திரத்தில் "நந்தியருள் பெற்ற நாதரை நாடிடில், நந்திகளுல்வர் சிவயோக மாமுனி, மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரம, ரென்றிவ ரென்னோடெண்மருமாமே." என்று தன்னோடொத்த மாணுக்கரையும் "மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன், இந்திரன் சோமன் பிரமனுருத்திரன், கந்துருக்காலாங்கி கஞ்சமலையனே, டிந்தவெழுவருமென் வழியாமே" என்று தன் மாணுக்கரையும் விளக்கினுர். நந்திகளுல்வர் ஆவார்: சனகர், சனந்தனர், சனுதனர், சனற் குமாரர் எனப்படு வோர். சனற்குமாரர் மரபில் வந்தவர் மெய்கண்ட தேவர்.

தாயுமானவரும் "மூலன் மரபில் வருமௌன குருவே" யென்றுதன் குருவைக்கூறித், தான் திருமூலர் மரபென்றுணர்த்தினர். திருமந்திரம் "சதாசிவந்தத்துவமுத்தமிழ்வேதம்" "மாலாங்கனே யிங்கு யான் வந்தகாரணம், நீலாங்கமேனி நேரிழையாளொடு, மூலாங்கமாக மொழிந்த திருக் கூத்தின், சீலாங்கவேதத்தைச் செப்பவந்தேனே" "இருந்தேனிக் காயத்தே யெண்ணிலிகோடி." "அண்ணலருளாலருளுஞ் சிவாகமம், எண்ணிலிருபத்தெண்கோடி நூறாயிரம், விண்ணவரீசன் விழுப்ப முரைத்தனர், நண்ணிநின்றப்பொருளேத் துவனே" என்றும்,

"விளங்கிய பரமாகு மெய்ஞ்ஞானச் சோதி, யளப்பில் பெருமைய னானந்த நந்தி, துளக்கறுமாநந்தக் கூத்தன் சொற்போந்து, வளப்பிற்கயிலைவழியில் வந்தேனே" என்றும்,

"செப்புஞ் சிவாகமமென்னுமப்பேர் பெற்று, எப்படி நல்கு மருணந்திதாள் பெற்று, தப்பிலாமன்றிற் றனிக்கூத்துக் கண்டபின், ஒப்பிலெழுபதுகோடி யுகமிருந்தேனே" என்றும்,

தமிழ்வேதம் சதாசிவத்தினின்று தோன்றியதென்றும், சிவத்தினைந்தொழில் நடனத்தைக் கூறவந்தேனென்றும், இவ்வுடலில் எண்ணில் கோடிகாலமிருந்தேனென்றும், சிவனார் கூறிய ஆகமங்களின் பொருளைக் கூறுகின்றேனென்றும், நந்திசூழும் கூத்தன் சூழும்பெற்று கயிலைமரபில் வந்தேனென்றும் கூறி, சிவனாருளிய வேதாகமங்களின் பொருளைத்தான் கூறுவதாகக் குறிப்பித்துப் பின்னர் "சந்திப்பது நந்தி தன்றிருத்தாளிணைச், சந்திப்பது நந்தி செய்ய திருமேனி, வந்திப்பது நந்தி நாமமேயன் வாய்மையாற், புந்திக்குள் நிற்பது நந்தி பொற்போகமே."

"போதந் தருமெங்கள் புண்ணிய நந்தியைப், போதந் தனில்வைத்துப் புண்ணியராயுளார், நாதன் நடந்தா நயனங் களிகூர, வேதந் துதித்திடப்போ யடைந்தார் விண்ணே."

என்று, போதமென்ற நூலை யெமக்கருளிய நந்தியை தமது போதந்தனில் (அறிவில்) வைத்துப் புண்ணியராயுளார்; சிவனார் நடம்கண்டு வீடுபெற்றார்; என்று போதம் என்றநூலை நந்தியங் கடவுளருளியதாயும், அதைப்பற்றி யொழுகியவர் முத்தியடைவ ரென்றும் அதன் பயனையும் விளக்கியுள்ளார்.

## சிவஞானபோதம் கடைப்பாயிரத்தில்

எந்தை சனற்குமா ரனேத்தித் தொழவியலாய், நந்தி யுரைத்தருளு ஞானநூல்—சிந்தைசெய்து, தானுரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாமுணர, வேதுதிருட்டாந் தத்தாலின்று" என்று

சனற்குமார முனிவர் ஏத்தி வணங்க அவர்க்கு, நந்தி யுரைத்தருளிய ஞானநூலை (சிவஞானபோதமென்ற நூலை)ச் சிந்தித்து உலகினர் (தெளிவாய்) அறிந்துகொள்ளும் பொருட்டு மெய்கண்ட தேவர் ஏது திருட்டாந்தங் (காரணம், காட்டு) களோடு உரைத்தருளினார் என்றும், நந்திசனற்குமாரர்க்குப் போதநூலைக் கூறினார், அதைத் தெளிவாய் அறிந்துகொள்ளும்படி மெய்கண்ட தேவர் ஏதுகாட்டுகளோடுரைத்தார் என்றும் விளக்கப்பட்டுளது.

திருவாசகம் கீர்த்தித் திருவகவலில்.

"மன்னுமா மலை மகேந்திர மதனிற்,சொன்னவாகமந் தோற்றுவித்தருளியும்" "மாவேட்டாகிய வாகமம்

வாங்கியும்" என்றவுரைகள் தென்மதுரை சார்ந்த மகேந்திர மலையிற் சொன்ன ஆகமம் என்று விளங்கலால், தமிழாகமங்கள் முதற்கழக காலத்திலிருந்தன வென்றும், மா வேடு (மகாதந்திரம்) என்ற பெயரோடு தமிழகத்தில் ஆகமமிருந்ததாயும்விளங்குகின்றது.

வடமொழிக் காமிகாகமத்தில், தந்திராவதார படலம் 11, 12-வது சுலோகத்தில்.

"சாதுப்பிருஷ்டம் ஹியுஷ்மாபிஸ் சுருணுத்வம்,ஸம்சிதவ்ரதா காமிகாக்யாந் மஹாதந்திராதுத்ருதம்ஸாஸ்த்ர முத்தமம்." அரிய விரதத்தையுடையவர்களே! உங்களால், நன்முகக் கேட்கப்பட்டது, காமிகம் என்ற பெயருடைய மகாதந்திரத்தினின்றும், எடுக்கப்பட்ட உத்தமமான இந்தச் சாஸ்திரத்தைக் கேட்பீர்களாக" என்று கூறப்படுவதால் இப்போது வடமொழியிலுள்ள காமிகாகமும் மாவேடு (மகாதந்திரம்) என்ற தமிழாகமத்தினின் றெடுக்கப்பட்டதாக வெளிப்படுகின்றது.

இப்போது வழங்கும் வடமொழிச் சிவஞானபோதம் 12-வது சுலோகத்தில்,

"ஏவம் வித்யாத் சிவஜ்ஞானபோதே சைவார்த்த நிர்ணயம்" "சைவப்பொருளின் முடிவை (சித்தாந்தத்தை) இவ்வாறு (இந்தப்பன்னிரண்டு சுலோகங்களிற் கூறியவாறு) சிவஞானபோதம் என்ற நூலில் அறிவாயாக" என்றுகூறப் பட்டிருக்கிறது. அதனால் இப்பன்னிரு வடமொழிச் சுலோகங்கள் சிவஞானபோதம் என்ற நூலன்று; அதுவேறு, இச்சுலோகங்கள் அதன்பொருளைக் கூறுவன என்று விளங்குகின்றது. ஆதலால் இப்போதுள்ள வடமொழிச் சுலோ

கங்கள் மொழிபெயர்ப்பு. தமிழ்ச் சூத்திரநூல் திருமூலர் "நந்திபொற்போதம்" "போதந்தருமெங்கள் புண்ணிய நந்தி' என்றும், சிறப்புப் பாயிரம் "நந்தி முனிகணத் தளித்த உயர்சிவஞானபோதம்" கடைப்பாயிரம் "நந்தியுரை த்தருளு ஞானநூல்" என்றும், விளக்கிய சிவஞானபோதம் என்பது தெளிவு. இனி அப்போதம் என்ற நூலை நந்திப் புத்தேள் யார்பாற் கேட்டுரைத்தனர் என்றாராயில் சிவ ஞானசித்தியார் பரபக்கம் "போதமிகுத்தோர் தொகுத்த பேதமைக்கே பொருந்தினோ ரிவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல, வேதநெறி யெனுமவர்கட்கறியமுன்னாளிறைவனரு ணந்தி தனக்கியம்ப நந்தி, கோதிலருள்சனற் குமாரற்குக் கூறக் குவலயத்தி லவ்வழியெங் குருநாதன் கொண்டு, தீத கல வெமக்களித்த ஞானநூலைத் தேர்ந்துரைப்பன் சிவஞா ன சித்தியென்றே" என்று போதம் என்ற ஞானநூல் முற் காலத்தில் சிவனார் வீடுபேறடையும் வழியை நந்திக்கருள, நந்திமுனிவர்க்குக் கூறிய நூல் என்றும்,

## சிவஞான போதச் சிறப்புப்பாயிரம்.

"மலர்தலையுலகின் மாயிருடியப்
பலர்புகழ் ஞாயிறு படரினல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போலீண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற்கண்டு கண்ணிருடீர்க்
தருந்துயர்க் குரம்பையினான்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத்தளித்த
உயர்சிவஞானபோத முரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண்டகன்ற மெய்கண்டதேவன்
பவநனிவன் பகைகடந்த, தவாடிபுனைந்த தலைமையோனே."

என்றவாசிரியப்பாவில், பெரியது என்ற பெயருடைய கட

ளிடத்திலிருந்து பெற்று, நந்தி முனிவர் கூட்டத்திற்கூறி யருளிய சிவஞான போதமென்னும் நூல்என்றும் நன்கு விளக்கலால், இறைவன் (கடவுள்) சிவஞானபோதம் என்ற நூலை நந்திக்கருள,நந்திமுனிவர்க்குரைத்தமை தெளிவாகின்றது. "சனகற்கும் அகத்ய புலத்ய சனற்குமாரர்க்கும் அனுக்ரகமெய்ப்பலகைச் சதுபத்து நவப்புலவர்க்கும், விபத்தியில் ஞானபடலத்தாறு லக்கணலக்ய தமிழ்த்த்ரயமத்திலகப் பொருள்விர்த்தியினைப், பழுதற்றுணர்வித்தக சற்குருநாதா"

(திருப்புகழ் 151)

திருப்புகழ் 533. சகல வேத சாமுத்ரியங்கள் சமய மாறு லோகத்ரயங்கள் தருமநீதிசேர் தத்துவங்கள்—தவ யோகம்—தவறிலாம லாளப்பிறந்த—தமிழ்செய்மாறர்கூன் வெப்பொடன்று தவிரவாலவாயிற் சிறந்த பெருமாளே.

என்று சனகர் முதலிய முனிவர்க்கு முருகபிரான் தமிழ் நூல்களுணர்த்தினமையையும், எல்லா வேதங்களுந் தமிழிலுள்ளமையையும் விளக்குகின்றன.

முற்காலத்து வேதம் ஆகமம் கருவிநூல்கள் அனைத்தையும் இறைவனே தமிழில் அருளிச்செய்தனன். முதற் கழகமிருந்த தென்மதுரையும், இரண்டாவது கழகமிருந்த கவாடபுரமும் கடல்கொள்ளப்பட்ட பொழுது இறைவனருளிய பல நூல்களும் அவற்றின் வழி நூல்களும் சங்க நூல்களும் பலகடல் கொள்ளப்பட்டொழிந்தன. போதம் ஞாஞசிரியர் உயர் பரிபாகிகட் குணர்த்தும் நூலாதலால் கைலைமரபில் தொன்றுதொட்டு அழிந்தொழியாது உயிர்த்திருக்கின்றது. திருமந்திரம், சிவஞான போதச்சிறப்புப் பாயிரம், கடைப்பாயிரம், சித்தியார் முதலியவற்றுக்கும், உண்மைக்கும் மாறாகவும் வடமொழிச் சிவஞான

போதக்கடைச் சுலோகத்துக்கும் பலவடமொழி உரைகளுக்கும் முற்றும் மாறாகவும் தமிழ்ப்போதத்தை மொழிபெயர்ப்பென்று கூறல் சிறிதும் பொருந்தாததே. தொல்காப்பியம் மரபியல் சூத்திரம் 94.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும்."

என்ற சூத்திரம் முற்றறிஞனாகிய இறைவன் செய்தது முதனூல் என்று விளக்குகின்றது. ஆதலால் தமிழகத்தில இறைவனாற் செய்யப்பட்ட வேதம், ஆகமம், அங்க நூல்கள் முற்காலத்துவழங்கிவந்த உண்மையைப் பலநூல்களும் தேவார திருவாசக முதலியனவு முணர்த்துகின்றன.

சம்பந்தர்— தேவாரம், தொகுத்தவனரு மறையங்கமாகமம்-வகுத்தவன்,

"ஆலதன்கீழிருந்து நால்வர்க்கறம்பொருள் வீடு இன்பம்
அறங்கம வேதந் தெரித்தானை,"

"தூய நானமறைகளான்கும் பாடினொருவர் போலும்,
"சைவவேடந் தானினைந் தைம்புலனு மடங்க
சிந்தை யந்தணாளர்க் கறம்பொருளின்பம வீடு
மொழிந்த வாயான்" என்றும், திருவாசகம்,

" அருந்தவருக் கன்றாலின்கீழ் அறமுதலா நான்கினையும்
இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடி
அருந்தவருக் கறமுதனூன் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ"

என்றும் வேதம் ஆகமம் அங்கங்களைச்சிவனார் அருளிச்செய்து, அறம்பொருளின்பம் வீடுகளடை நெறியை விளக்கினாரென்றும், சம்—தேவாரம். திருச்செங்காட்டங்குடி

" மறையிலங்கு தமிழ் வல்லார் "
சம்—தே—பெரும்புலியூர்.

" மறைவளருந் தமிழ் மாலை "
கல்லாடம்.

" தெய்வமறைத்த செழுந்தமிழ்ப் பாடலும் "
என்று தமிழில் மறையிருந்ததென்றும்,
தொலகாபபியம நான்மரபு 33.

அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப விசையொடு சிவணிய
நரம்பின் மறைய வென்மனார் புலவர்,

என்று தமிழில் நரம்பின் மறை (காந்தர்வ வேதம்) இருந்த தென்றும்,

தொல்காப்பியம் செய்யுளியல் 178.

நிறைமொழிமாந்தராணையிற்கிளந்த
மறைமொழிதானே மந்திரமென்ப

என்று தமிழில் மந்திரமுளதென்றும், திருமந்திரம்போலசிவஞா கூறிய வேதாகமங்களின வழிப்பட்டு முனிவர் கூறிய நூல்கள் மந்திரமெனப்பட்டு வழங்கினவென்றும்,

திருமந்திரம்.

சித்த சிவலோக மிங்கே தெரிசித்தோர்
சுத்தமுஞ் சுத்தமணமுந் தமிழ்கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர் முத்தி முதல் முப்பத்தாரே,

என்று சைவ முடிவுபற்றியவரும் தமிழரும் இவ்வுடலொடு வீடுற்றோரும் (சீவன் முத்தர்) ஆகியவரே சித்தரெனப்படுவோர் என்றும் விளக்குகின்றன.

தமிழில் சிவனாருளிய வேதம், ஆகமங்கள் கடல்கொள்ளப்பட்ட பின்பு அவற்றின் வழி நூல் சார்பு நூல்கள் பல வழங்கிவந்தன. அப்பொருள்களை வடவர் வடமொழியி லெழுதிப் பலநூல்களாக்கினர். பைசாச பாடையென்று வடவர் கூறிய தமிழினின்று பிரகத் கதை, (கதாசரித சாகரம்) வடமொழியில் மொழிபெயர்க்கப்பட்டிருத்தலும் அநேக பலபுராணங்களும் கலைகளும் கூறப்பட்டிருத்தலும் அவ்வுண்மையை விளக்கும். இடைச்சங்கக் கடைக்காலத்தில் தமிழகத்துக்கு வந்து குடியேறிய வடவர் இயற்றிய வேதங்களில் "அவிசொரிந்தாயிரம் வேட்டலி னொன்றன், உயிர்செகுத்துண்ணாமை நன்று" என்று தமிழ் வேதங்களிலொதுக்கப் பட்ட வேள்விகள் கூறப்படினும், சிவ வணக்கங்கூறும் ஸ்ரீ ருத்ரம்முதலிய மந்திரங்களும், ஈசாவாசியம், பஸ்மஜாபாலம் ருத்திராக்ஷஜாபாலம்முதலிய உபநிடதங்களும், சிவத்திருப்பதி மாட்சிகூறும் புராணங்களும் கூறப்படலாலும் அவ்வேதங்களை ஓதியுணர்ந்தமறையவரிற் பெரும்பாலார் சைவநெறி சார்ந்தொழுகலானும், உபநிடதங்கள் இறைவனிலக்கணங்களையும் வழிபாட்டையும் திருமந்திர முதலிய சைவாகமங்களை ஒத்துக் கூறுதலானும், வடமொழி வேத உபநிடத அங்கங்களை அபாவித்தை (பூர்வபக்கம்) எனவும், இறைவன் கூறிய ஆகமங்கள், பராவித்தையாகிய (சித்தாந்தம்) எனவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

அதை. முண்டகோபநிடதம் 1—5.

" தத்ராபராரிக்வேதோயஜுர்வேதஸ்ஸாமவேதோ,
தர்வவேதசிக்ஷாகல்போவ்யாகரணம் நிருக்தம்,
சந்தோஜ்யோதிஷமிதி, அதபராயயாததக்ஷாபதிகம்யதே
அவற்றுள் அபாவித்தைகள் இருக்குவேதம், யசுர்வேதம்,

சாமவேதம். அதர்வவேதம, சிக்ஷை, கல்பம் வியாகரணம், நிருக்தம், சந்தசு, ஜோதிடம் என்பன. எதனுல் அந்த அக்ஷரமாகிய பிரமம் அறியப்படுகின்றதோ அதுபாவித்தை என்றும்

## காமிகாகமம்.

பதிபர்த்ததர்சகம்ஜ்ஞானம், காமிகாதிபரம்பவேத்—வேதாத்யம அபரம்ஜ்ஞானம், பசுபாசார்த்ததர்சகம்.

பதிப்பொருளை யுணாத்துகின்ற காமிக முதலியன பாவித்தை, பசுபாசங்களை புணர்த்துகின்ற வேதமுதலியன அபாவித்தையாம். என்றும் விளக்குகின்றன.

தமிழ்வேத முதலிய நூல்கள், கடல் கொள்ளப்பட்டமையை.

ஏரணமுருவம்யோகமிசை கணக்கிரதஞ்சாலந்
தாரணமறமே சந்தந்தம்பநீர் நிலமுலோகம்
ஆரணம் பொருளென்றின்னமான நூல்யாவும்வாரி
வாரணங்கொண்டதந்தோ வழிவழிப்பெயருமாள.
என்றமுதுமொழியுணர்த்தினமை காண்க.

இறைவன் அறம்பொருள் இன்பம் வீடுகளைப் பொதுப்படக்கூறும்தமிழ்மறைகளும், பசுபதிபாச இலக்கணங்களையும்சிவவழிபாட்டையும்சிறப்பாய்க்கூறும்தமிழாகமங்களும், கடல்கோள்களிற்பட்டொழியினும் வழிநூல்சார்புநூல்கள் பலஎஞ்சியிருந்தன. அவற்றில் இப்போதிருக்குந்தமிழ்மறை வழிநால். திருக்குறள் முன்னிருந்த தமிழாகமங்கள் கடல்கோட்பட்டமையால் உயிர்கள் உண்மையறிந்துய்தற்பொருட்டுக் கைலையில் எண்ணில்கோடியுகம்தவமிருந்த திருமூலதேவர்மூலம இருக்குமுதலிய வடமொழிவேதங்கள்தோன்றிய பின் இடைச்சங்க காலத்தில் வெளியிட்ட தமிழாகமம், திருமந்திரம் **3000**. சிவனுர் நந்திக்கருளிக் கைலாயபரம்பரையில்

சூழ்மறையாய் (உபதேச மந்திரமாய்) உணர்த்தப்பட்டுவரு வது போதம் (சிவஞானபோதம்). இம்மூன்றுடன்தேவார திருவாசகங்களாகிய திருமந்திரங்களும், சித்தியார் முதலிய சித்தாந்த நூல்களும் ஓதியுணரத்தக்கனவாம். திருமந்திரம்,

"வேதமோடாகம மெய்யா மிறைவனூல்
ஓதுஞ்சிறப்பும்பொதுவுமென்றுள்ளன
நாதனுரையவை நாடி லிரண்டந்தம்
பேதமதென்னிற் பெரியோர்க்கபேதமே"

"முதலாகும் வேதமுழுதாகமப்
பதியானவீசன் பகர்ந்ததிரண்டும்"

என்று தமிழ்வேதம், ஆகமம் இரண்டும் இறைவன் கூறிய பொருளொற்றுமையுடையன, பொது சிறப்பென்றவேற்று மையன்றிப் பிறவேற்றுமையின்று. வடமொழிவேதம் முனி வர் கூறியன; வேள்வி முதலியன கூறுவன ஆதலால் திருமந் திரம் கூறும் வேதாகமங்கள் வடமொழியனவன்று என்று விளங்குகின்றது. திருமந்திரம்.

என்னை நன்றாக இறைவன்படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறே.

என்று அண்ணல் சிவாகம முரைத்தனன்; அப்பொருளை நூலாகவியற்றத் திருமூலனைப் படைத்தனன் என்று விளக்கியது.

அவ்வுண்மையை சிவஞான சித்தியார் சுபக்கம் 8-ம் சூத்திரம். பா. 11.

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச்சிரம
வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள்படித்தும்

சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றாற்சைவத்
திறத்தடைவரிதிற் சரியை கிரியாயோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற்சிவனடியைச்சேர்வர்."

(இதன்பொருள்) புறச்சமயங்களி லிருந்தும், அகச்சமயங்கள்பற்றியும், மிருதி வழியிலுமுன்றும், வைதீகநெறி பற்றிப் பிரமசரியம், கிருகத்தம், வானப் பிரத்தம், சந்நியாசம்என்ற நெறிகளை யடைந்தும், அரிய தவங்களைப்புரிந்தும், அரிய கலைஞானங்கள் பல பயின்றும், இருகு எசுர் சாமம் அதர்வம் என்ற வேதங்களை ஓதியும், புராணங்களை யுணர்ந்தும், உபநிடதங்களை யோதி ஆராய்ந்தறிந்தும், பரிபாகமுதிர்ந்து மேற்சென்றாற் சைவநெறியிற் சார்ந்து சரியை கிரியை யோகங்களிற் றேர்ந்தபின் ஞானத்தாற் சிவனேடிரண்டறக்கலப்பர்.

என்று பாவித்தையாகிய சித்தாந்த நெறியே மிகச் சிறந்ததென்றும், வீடுபேறு தரத்தக்கதென்றும நன்குவிளக்குகின்றது.

தமிழில் வேதம், ஆகமம், போதம் என்பன இறைவன் வாக்காற்றரப்பட்டன வென்றும், முனைவன் கண்டதே முதனூலென்றும் மேற்கோள்கள் பலவற்றால் வலியுறுத்தப்பட்டது. ஆனால் வடமொழியிலுள்ள வேதங்கள் உபநிடதங்கள் ஒன்றும் இறைவன் மொழியன்று, அவை பல இருடிகளாற் கூறப்பட்டனவென்று அவ்வேதம் உபநிடதங்களிலேயே கூறப்பட்டுள்ளன. அத்தகைப் பெருமைவாய்ந்த உயர்ஞான முணர்த்தும் இறைவன் மொழியாகிய சிவஞான போதப் பொருளை என்னறிவுக்கெட்டியவாறு சுருக்கி வினாவிடையாக வியற்றித். "திருஞான முரைத்த படலம்" மெனப் பெயரிட்டு உரைக்கின்றனன். அதில் உளஞ்செலுத்தலும் சிவபெருமான் சிந்தனையாமென்பது தெளிவு.

சிவஞான போத வினாவிடை
முன்னுரை முற்றிற்று.

உ
சிவம்.

# சிவனாருளிய போத சூத்திரம்.

## (சிவஞானபோதம்)

---

### பொது அதிகாரம்.

அளவையியல் (பிரமாணவியல்)

பதியுண்மை.

௧. அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதா
மந்த மாதியென்மனார் புலவர்.

பாசவுண்மை.

௨. அவையேதானே யாயிருவினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்கமின்றி நிற்கு மன்றே.

பசுவுண்மை.

௩. உளதில தென்றலி னெனதுட லென்றலி
னைம்புல னொடுக்க மறிதலிற் கண்படி
லுண்டிவினை யின்மையி னுணர்த்தவுணர்
தலின், மாயாவியந்திர தனுவினுளான்மா.

இலக்கணவியல்.

பசுவிலக்கணம்.

௪. அந்தக் கரண மவற்றி லொன் றன்றவை
சந்தித்த தான்மா சகசமலத்துணரா
தமைச்சர சேய்ப்ப நின் றஞ்சவத்தைத்தே.

பாசவிலக்கணம்.

௫ விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தளந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

பதியிலக்கணம்.

௬ உணருரு வசத்தெனி லுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத்தாமென
விரண்டு வகையினிசைக்குமன் னுலகே.

சிறப்பதிகாரம்.

சாதனவியல்.

பசுவின் சிறப்பியல்பு.

௭ யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா.

ஞானமுணர்முறை.

௮ ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்த
விட்,டன்னியமின்மையின ரன்கழல்செலுமே

உயிருவளிப்பு (ஆன்மசுத்தி)

௯ ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத் துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதியெண் ணுமஞ்
செழுத்தே.

பயனியல்

பாசநீக்கம்

௰ அவனே தானே யாகிய வந்நெறி
ஏகனாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே

சிவப்பேறு

௰௧ காணுங்கண் ணுக்குக் காட்டு முளம்போல்
காணவுள்ளத்தைக் கண்டுகாட்டலி
னயரா வன்பி னரன்கழல் செலுமே

அணைந்தோர் தன்மை

௰௨ செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
வம்மலங்கழீஇ யன்பரொடு மரீஇ
மாலறநேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே.

உ

திருச்சிற்றம்பலம்.

# சிவஞானபோத வினா விடை

## பொது அதிகாரம் அளவையியல்

### பதியளவை.

### முதற் சூத்திர வுள்ளக்கிடை.

**ஆசிரியர் உரை.**

இவ்வுலகனைத்தையுந் தோற்றி நிறுத்தி ஒடுக்குபவன் கடவுள். அங்ஙனம் ஒடுக்குபவனே மீண்டுந் தோற்றுவிப்பன். ஆதலால் அவனருளை நினைந்து வணங்குக.

**மாணாக்கன் வினா.**

இவ்வுலகம் கிளிஞ்சில் வெள்ளிபோலும், பழுதையிற் பாம்புபோலும் தோன்றி மறைவதன்றி, உண்மையில் இல்லாதது. ஆதலால் இவ்வுலகத்தைத் தோற்றுவித்தல் முதலியன செய்தற்குக் கடவுள் வேண்டற்பாலனல்லன்.

**ஆ. உரை.**

செய்மையிலுள்ள கிளிஞ்சிலின்மேற் கதிரவன் ஒளிபட அது வெள்ளிபோற் றோன்றி அடுத்துச்சென்று உற்று நோக்குங்கால் மயக்கத் தோற்றமாகிய வெள்ளி காணப்படாமல் உண்மையிலுள்ள கிளிஞ்சில்மட்டும் காணப்படுகின்றது. கிளிஞ்சிலை வெள்ளியாகக் காண்டல் மயக்கக் காட்சி. மாலையிருளிற் பழுதையைப் பார்க்குங்கால் அது

பாம்பாகத் தோன்றும். விளக்கொடு நோக்குங்கால் பாம்பு காணப்படாமல் உண்மையில் உள்ள பழுதை மட்டும் காணப்படுகின்றது. பழுதையைப் பாம்பாகக் காண்டல் மயக்கக் காட்சி. மயக்கத்தால் உள்ளனவாகத் தோன்றிய வெள்ளி பாம்புகள் இல்லாதன (பொய்). இல்லாதது தோன்ருது. மயக்கக் காட்சியால் தோன்றுவது ஒரு பொருளாகாது. மயக்கக் காட்சிக்கு ஆதார (நிலைக்கள) மாயிருந்த கிளிஞ்சில் பழுதைகள் உள்பொருள்கள். அவை மயக்கமற்ற பார்வையுடையவரெல்லவர்க்கும் ஒருபடித்தாய்க் கிளிஞ்சில் பழுதைகளேயாகத் தோன்றும், இருக்கும், தொழிற்படும். அவைபோலவே அவன், அவள், அதுஎன்று குறித்தறியப்படும். ஆண்பெண்களாகிய உயர்திணை உயிர்களும், ஊர்வன, நீர்வாழ்வன, விலங்கு, பறவை, மரம், செடி, கொடி முதலிய அஃறிணைப்பொருள்களும் ஆகிய உலகத்தை நாம் நேரிற் காண்பதால் உலகம் இது என்று சுட்டியறிகின்ரும். ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு பொருளும் முன்னும் பின்னும் இன்றும் உண்மைக் காட்சியி லொருபடித்தாய்த் தோற்றநிலை ஒடுக்கங்களுடையனவாய் விளங்கலால் உலகம் உள்பொருளேயாம். உலகம் பொய்யெனில் நம் முடலும் வீடும் பிறவும் பொய்யாகவேண்டும். பாறைக்கல் நம்மீது விழுந்தாற் நசுக்குருமல் இருப்போமா? கத்தியால் வெட்டினல் வெட்டுருதிருப்போமா? நஞ்சையுண்டாற் சாவாமலிருப்போமா? நெருப்பில் இட்டால் வேகாமலிருப்போமா? உணவின்றி உயிர்த்திருப்போமா? இரோம்! இரோம்!! ஆதலால் உலக உயிர்களும், உலகப் பொருள்களும் இல்பொருள்கள் அல்ல. உள்

பொருள்களே யாமென்பது தெளிவு. சட்டி பானை முதலி யனவனைதற்குக் குயவனும், வீடு முதலியன கட்டுதற்குக் கொற்றன் தச்சன் முதலிய வினைஞரும் வேண்டப்படுதல் போல மிக்க வியப்பான உடலுயிர்களைப் புணர்த்தற்கும், உலகங்களையும்பொருள்களையும் ஆக்குதற்கும் எல்லாம் வல்ல கடவுளொருவன் வேண்டற்பாலனே.

(2) மாணாக்கன் வினா.

உலகம் உள்பொருளெனில், அதற்கு (உள்பொருளுக்கு)த் தோற்ற வொடுக்கங்கள் எங்ஙனம் பொருந்தும்? உலகத்திற்குத் தோற்ற ஒடுக்கங்கள் உளவேல், உலகம் எங்ஙனம் உள்பொருளாம்? உள்பொருளை நிலையுறுத்தல் என்பதும் பிழையாமன்றோ?

ஆ. உரை.

மண்ணிற் குடம் தோன்றுதலும், நிலைத்திருத்தலும் ஒடுங்குதலும் (மண்ணினின்று குடம் வினையப்பெற்றுத் தோன்றிப் பயன்பட்டு நிலைத்திருந்து உடைந்து மண்ணே யாய் ஒடுங்குதலும்) போல உலகம் மாயையினின்று தோன்றி நிலைபெற்றிருந்து ஒடுக்ககாலத்தில் மாயையி லொடுங்கும். ஆதலால் உள்பொருளாகிய உலகுக்கு தோற் றம் நிலை ஒடுக்கங்கள் கூறல் பொருத்தமேயாம்.

(3) மாணாக்கன் வினா.

(உடலோடு கூடிய) உயிர்கள் தோன்றுதலும் வளர்த லும் அழிதலும் கண்கூடாய்க் காண்கின்றோம். உயிரில்லாத பொருள்கள் அவ்வாறு தோன்றிநின்று அழிதலைக் காண்கி லோம். ஆதலால் உலகந் தோன்றி நிலைத் தழியுமென்று பொதுப்படக்கூறல் எவ்வாறு பொருந்தும்?

ஆ. உரை.

தமிழ் முதற்கழக காலத்துத் தென்மதுரையைத் தலைமையாகக்கொண்ட தமிழகம், தென்பாலி முகத்துக்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னு மாற்றிற்கும் குமரியென்னுமாற்றிற்குமிடையே எழுநூற்றுக் காவதவாறும்ஏழ்தெங்கநாடு முதலிய நாற்பத்தொன்பது நாடும் கடல்கோட்பட்டன. நாவலந் தீவின் நாற்பாலுங் கடல்சூழ்ந்திருந்து முதலூழியிற்றமிழகங் கடல் கோட்பட்டபொழுது வடக்கிருந்த கடல் தென்பாற் சென்று பரவக் கடலிருந்தவிடத்து மலையெழுந்து இமயார்மலையாயிற்று. ஜப்பானில் அண்மையில் பல ஊர்களும் மலைகளும் பூநடுக்கத்தாலும் எரிமலையாலும் அழிந்தன. பசுபிக்கடலில் பலதீவுகள் புதிதாய்த்தோன்றின. ஆதலால் (உடல்களோடு கூடிய) உயிர்கள்போல, உயிரில்லாத கடல், மலை, பூ, நீர், தீ, கால் முதலியனவும் தோன்றி நின்றழிதலைக் கண்கூடாகக் காண்கின்றோம். நூல்களிலும் புதினத்தாள்களிலும் படித்தறிகின்றோம். ஆதலால், உயிர்களும் உயிரில் பொருள்களுமாகிய உலகம் தோன்றி நின்றழியுமென்று பொதுப்படக் கூறல் பொருந்தும்.

(4) மாணாக்கன் வினா.

உயிரோடு கூடிய உடற்றொகுதிகளும், நிலம், மலை கடல் முதலியனவும் ஒருபால் அல்லது பலபால் தோன்றவும், நிற்கவும், அழியவும் பெறுவதன்றி எல்லாம் ஒருங்கு அழிதல் உண்டோ ?

ஆ. உரை.

பலவகைப்பட்ட வித்துகளெல்லாம் கார்காலத்தில் ஒருங்கே முளைத்து இடைக்காலத்தில் ஒருங்கே வளர்ந்துவேனிற்காலத்தில் ஒருங்கே அழிகின்றனபோல், உயிர்களும் உயிரில் பொருள்களுமாகிய உலகம் படைப்புக் காலத்தில் ஒருங்கே தோன்றி இடைக்காலத்தில் ஒருங்கேநிலைத்து ஒடுக்க

காலத்தில் ஒருங்கே ஒடுங்கும் ஆதலால், உலகம் தோற்றல் நிலைத்தல் ஒடுங்கல் என்ற முத்தொழிற் படுகின்றது. செய்வோனையின்றிச் செய்தொழிலின்மையால் அம்முத்தொழில் செய்யும் இறைவன் ஒருவன் வேண்டும்.

(5) மாணாக்கன் வினா.

இறைவன் எதற்காக இவ்வுலகைத் தோற்றி நிறுத்தி ஒடுக்குகின்றனன்?

ஆ. உரை.

உயிர்கள் பயன்கொள்ளுமாறு இறைவன் உலகைத் தோற்றி நிறுத்தி ஒடுக்குகின்றனன்.

(6) மாணாக்கன் வினா.

உலகம் தோன்றி நின்றொடுங்குவதால் உயிர்களுக்குப் பயன்யாது?

ஆ. உரை.

உயிர்களின் ஆணவமலம் பாகமாதற்பொருட்டு உலகம் தோன்றி, உயிர்கள் தம் அறம் மறம் (புண்ணியம் பாவம்) என்றவினைப்பயன்களை துய்த்தொழித்தற்பொருட்டு உலகம் நிலைபெற்று நின்று, உயிர்களின் கருமமலம் பாக மாதற் பொருட்டு ஒடுங்கிமீண்டுந்தோன்றும். ஆதலால் உலகம் தோன்றி நின்றொடுங்குதல் உயிர்களின் மலம் பாகப்படுதற்கும், வினைகள் ஒழிந்து தூய்மை யெய்தற்கும் ஆம்.

(7) மாணாக்கன்வினா.

உலகம் படைப்புக்காலத்தில் தோன்றிக்காப்புக் காலத்தில் நின்று, ஒடுங்குகாலத்தில் ஒடுங்குமென்றல் ஒருவாறு பொருந்தினும் முன் ஒடுங்கிய காலத்திலிருந்த உயிர்களே தோன்றி நின்றழியு மென்பதெங்ஙனம் பொருந்தும்?

ஆ. உரை.

கார்காலத்து முளைத்தனவே, இடைக்காலத்து வளர்ந்து, காய்த்து, வேனிற்காலத்தழிவடைந்தொடுங்கும் போது மண்ணிற்றங்கியிருந்த வித்துக்களே மறுபடி கார் காலத்து மழைபெய்தழி முளைக்கின்றமை போல, படைப்புக்காலத்தில் உடலொடுதோன்றி ஒடுக்க காலத்தில் மாயையிலொடுங்கியிருக்கும் உயிர்களே திரும்பவும் படைப்புக் காலத்தில் தத்தம் வினைக்குரிய உடல்களோடு சார்ந்து பிறந்து தோன்றுகின்றன.

(8) மாணுக்கன் வினு.

மண்ணிற்குடம் போல, மாயையினுலகம் தோற்ற காலம் ஒடுக்ககாலங்களில்தோன்றி யொடுங்குகின்றதெனில் உலகத்தோற்ற வொடுக்கங்களுக்குக் காலமே காரணமாவதால் வேறொரு கடவுள் வேண்டியதில்லை எனில்,

ஆ. உரை.

தோற்ற வொடுக்க காலங்களில் உலகம் மாயையிற் றோன்றி யொடுங்குதற்குக் காலந் துணைக்காரணமாயினும் காலம் அறிவிலது (சடம்) ஒன்றையும் அறிந்தியக்காது. உயிர் சிற்றறிவது. அவ்வறிவும் உடல்கருவிகளோடு கூடியே லன்றி விளங்காது. ஆதலால் உயிர்களின் வினைகளையறிந்து அவற்றுக்குரிய உடல் முதலியவற்றோடு கூட்டித்துய்ப்பிக்கவும் காலத்தை யியக்கவும் முற்றறிவும் எல்லா வல்லமையும் உடைய கடவுள் வேண்டும்.

(9) மாணுக்கன் வினு.

குடமுதலிய வனைதற்கு மண் முதற்காரணம்; திரிகை துணைக்காரணம்; குயவன் இயக்கு (நிமித்தம்)காரணம் என மூன்று காரணங்கள் வேண்டப்படுகின்றன. மிக்க வியப்பான மிகப்பெரிய உலகத்தைப் படைத்தற்கும் மூன்று காரணங்களுளவோ, எனில்

ஆ. உரை.

உலகைப்படைத்தற்கும் மூன்று காரணங்களுள். மாயை (மண்போன்ற) முதற்காரணம்; சிவசத்தி (திரிகைபோன்ற) துணைக்காரணம்; முற்றறிஞனாகிய சிவன் (குயவன்போன்ற) இயக்கு (நிமித்த) காரணமாயிருந் துலகனைத்தும் படைக்கப்படுகின்றன.

(10) மாணாக்கன் வினா.

மாயை பருப்பொருள் (சடம்) ஆதலால் அது எந்த ஆதாரத்தினின்று தொழிற்படுகின்றது.

ஆ. உரை.

முற்றுமழி (சருவசங்கார) காலத்தில் உலகம் மாயையிலும், மாயை சிவசத்தியிலும் சிவசத்தி சிவனிடத்தும் ஒடுங்கும். அனைத்துக்கும் நிலைக்களம் (ஆதாரம்) ஆகிய சிவமே தனித்திலங்கியிருக்கும். விரியுங்காலத்தில் அனைத்தையும் தன்னிடத்தொடுக்கியவாறே தோற்றுவித்துலகைப்பகுத்து விரிப்பன். அங்ஙனம் பகுத்து விரிக்குங் கடவுள் பகவன் (பகு + அவன்) என்னப்படுகின்றனன். ஆதலால் மாயையும் அதனிற்றோன்றிய அண்டகோடிகளும் சிவத்தையே நிலைக்களமாகக் கொண்டு நின்று தொழிற்படுகின்றன.

(11) மாணாக்கன் வினா.

குயவன் மண்ணால் குடத்தை வனைகின்றமைபோல் கடவுள் மாயையினின்று உலகைத் தோற்றுவிக்கின்றனன் எனின் குயவன்போல வேறாய்நின்று தோற்றுவிக்கக் காண்கிலமே யென்னில்

ஆ. உரை.

சிலந்தி (ஊர்ணநாபி) தன்னுடல் முதற்காரணமும், தன்நா கால்கள் துணைக்காரணமும்; தானே (தன்னுயிர்) இயக்கு காரணமும் ஆகி நூலைத்தோற்றுவித்து வேண்டுழி

நாலையுட்கொண்டு தன்னுளடக்கலும் வேண்டுழி மறுத்தும் தோற்றுவித்தலும்போல, கடவுளும்தன்னுடலாகிய மாயையை முதற்காரணமாகவும் தன் சத்தியைத் துணைக்காரணமாகவும் படைப்புக் காலத்தில் உலகைத் தோற்றுவித்து ஒடுக்க காலத்தில் தன்னுள் ஒடுக்கிக்கொள்வன்.

பண் வேறு குயவன் வேறு காணப்படல் போலச் சிலந்தி நூல்நூற்றலில் உடல்வேறு சிலந்திவேறு காணப்படவில்லை. சிலந்தியுடல் முதற்காரணமும் அவ்வுடலில் நிறைந்துள (அருவாகிய) உயிர் இயக்கு காரணமுமாதலின், அங்ஙனமே தன்னுடலாகிய மாயை முதற்காரணமும் அதில் நிறைந்துள அருவாகிய உயிரிறை இயக்குகாரணமுமாதலின் வேறு நின்று தோன்றாது.

இதன் கருத்து பகுதிமாயை (பிரகிருதிமாயை) தூய்தல் மாயை (அசுத்தமாயை) தூய்தாமாயை (சுத்தமாயை)களிற்றோன்றிய புவனமனைத்தையும் அப்புவனங்களிலுள்ள உயிர்களையும் தன்னுடலாக்கொண்டு (தானுயிராயும் உயிர்க்குயிராயும்) நிறைந்து தனது சத்திகளால் அணுக்கள்தோறும் பிரிவின்றி நின்றறிந்து தொழிற்படுத்திப் படைப்புக் காலத்தில் அளவில் கோடி புவனங்களையும் தன்னிடத்தினின்று தோற்றுவித்து வளர்ந்து நிலைபெறச்செய்து, ஒடுக்ககாலத்தில் தோன்றியவாறே தன்னிடத்தொடுக்கி உயிர்களின் மலங்கள் பாகமெய்தித் தூய்மையடைந்து பேரின்பந்துய்க்கவருளும் பொருள்வடிவன் கடவுள். அவன் உயிர்க்குயிராயும் அணுவுக்கணுவாயும் மாநுண் ஒளி(அதிசூக்குமசித்த)யாய் நிறைந்து நின்றியக்கியாள்பவனாதலால் குயவனைபோல் ஒருவடிவுடையவனாகி வேறாய்நின்றியக்குவானல்லன் என்க.

(12) மாணாக்கன் வினா

சிலந்தி உடலில், உயிர்நிறைந்து நின்று செயல்நிகழ்த்தலை நிகழுஞ் செயலால் நாமுணர்தல்போலக் கடவுள், உலகிற் செய்செயலை நாம் காண்கிலமே யெனில்

ஆ. உரை

மலையில் தீயுண்மையைப் புகையுண்மையாற் கருதல் போலவும், தீ நீர் புகையின்றி இயந்திரம் இயங்கில் அது உருவில் மின்சாரத்தாலியங்குகின்றதென வறிதல்போலவும், உலகவுயிருடல்களும் பொருள்களும் மிக வியப்பான உறுப்புகளோடு உண்டாகி வளர்ந்து பயன்படுதலை நாம்கண்டு, செய்வோனையின்றிச் செய்வினையின்மையின் அவற்றை அறிந்து செய்வோன் அருவமாயொருவனுளன், அவனே கடவுளென்றறிகின்றோம்.

காட்டுக்கூறில், மக்களுடலில் ஒரு பழத்தைச்செய்மையினின்று காணக் கண்ணும், அடுத்துச் செல்லக் காலும், குனிய இடுப்பும் முதுகெலும்பும், எடுக்கக் கையும், பற்ற விரல்களும், முகர மூக்கும், கடித்து மெல்லப் பற்களும், வெளியில்விழாது காக்க உதடுகளும், சுவைத்தறிய நாவும், விழுங்க மிடறும் அவ்வுணவு தங்கக் குக்கியும் அமைந்துள்ளன- அவ்வுணவு செரித்துத் தாதுக்களை வளர்க்கும் சாரங்களாகி அவற்றால் அத்தாதுக்கள் வளர்ந்து உடல் பருத்து உலகிலுயிர்களுயிர்த்திருக்கின்றன. உயிர் இவ்வுறுப்புகளை ஒன்றுக்கொன்று இன்றியமையாத பயனுடையதாயறிந்தியற்றியதா, இயக்குகின்றதா, பெற்றோரறிந்தியற்றினரா, இல்லை. கடவுள் எங்கும் நிறைந்து ஒவ்வோரணுவையும் பயன்கருதி உருப்படுத்தித் தனது சத்தியால் உயிர்கள் வினைகளைத்துய்க்க நடாத்துகின்றனன். நம்மொவ்வொருவ

ருடலினும் நாமறியாது பல செயல்கள் நிகழக்காண்கின்றோம், உணர்கின்றோம். அச்செயலனைத்தும் இறைவனுடையன வாதலால் ஊன்றிநோக்கில் அவன் செயலும், நாம் கருதி யறிவாற் காணத்தக்கதே

(13) மாணாக்கன் வினா.

உலகைத் தோற்றுவிக்கின்றனன் என்றது ஒடுங்கிய வாறே தோற்றுவிக்கின்றனன் என்பதெற்றுக்கு எனில்

ஆ. உரை.

கார்காலத்துத் தோன்றி வேனிற்காலத்து மாய்ந்து மண்ணிற் பதிந்துகிடந்த விதைகளே மறுபடி கார்காலத்து முளைத்துத் தோன்றுதல்போலப் படைப்புக்காலத்துப்பிறப் படைந்த உயிர்கள்காப்புக்காலத்துப் பலபிறவிகளையடைந்து வினைகளை நுகர்ந்து ஒடுக்க லாலத்தில் மாயையி லொடுங்க மாயை சிவசத்தியி லொடுங்கச் சத்தி சிவத்தி லொடுங்கியிருந்து படைப்புகாலத்தில் ஒடுங்கியாகிய இறைவன் என்றுமுள்ள உலகுயிர்களை யொடுங்கியவாறேபகுத்துச்சத்தியாற் படைப்பன் அன்றி இல்லாததைப் புதிதாய்ப் படைக்கின்றனனில்லை. உலகமுதலின்றி யென்றுமுளது (அநாதிநித்யம்) ஆதலின் முற்றும் அழித்துத் தன்னிடத்தொடுக்கவல்ல ஒருவனே மீட்டும் அவற்றைப் படைப்பன். இறைவன் உயிர்களின் கன்மமலம் பாகப்படவொடுக்கியும், ஆணவமலம்பாகப் படமீட்டும் படைத்தும், முதலின்றியென்றும் விளங்கலால் உலகைத் தோற்றுவிக்கின்றனனென்றது உலகம் ஒடுங்கியினின்று தோற்றுகின்றது என்னப்படுகின்றது. "இது அந்தம் ஆதி" என்ற உரையளவையால் ஈறே முதலாகின்றதென்றுணர்த்தும் பொருட்டு ஒடுங்கியவாறே தோற்றுவிக்கின்றனன் எனப்பட்டது என்க.

(14) மாணாக்கன் வினா.

கடவுள் உலகுயிர்களைப் படைத்து நிறுத்தி அழித்தல் செய்கின்றமையால் விற்று அடைந்து (விகாரப்பட்டு) கட்டடைவான் (பந்தமடைவான்) எனில்

ஆ. உரை.

கதிரவன் முன் கதிர்க்காந்தக்கல் தீயைக் கக்குகின்றது, தாமரை மலர்கின்றது, மண்ணில் நீர் சுவறுகின்றது. அவற்றால் கதிரவன் விகாரமடைகின்றனனில்லை. அதுபோல் முற்றறிவும் அளவிலாற்றலும் எல்லா வல்லமையுமுடைய இறைவன் உயிர்களின் கரும்மலம் பாகமடைதற் பொருட்டும், உயிர்களிளைப்பாறுதற் பொருட்டும், உலகைமாயையில் ஒடுக்கியும், ஆணவமலம் பாகமாதற் பொருட்டு உலகைத் தோற்றுவித்தும், உயிர்கள் தம்வினைகளைத் துய்த்தொழிற் தற்பொருட்டு நிறுத்தியும் அருட்செயல்கள் பல தனது சத்தியாற் புரிதலால் தான் விகாரப்பட்டுப்பாந்தமுறான் என்க.

(15) மாணாக்கன் வினா.

கடவுள் அறிவா (சித்தா) அசித்தா (அறிவிலதா) அருவா? என்னபயன்கருதிஉலகைப்படைத்தழிக்கன்கின்றனன் அவனுக்குச்சிவனென்றுபெயர் கூறுவானேன் எனில்

ஆ. உரை.

கடவுள் அறிவுக்கறிவாய் நின்றுணர்த்தலால் அறிவல்லன் (சித்தல்லன்) அசித்தும் (அறிவிலதும்) அல்லன், எல்லா உருவினும் உருவருவினும் அருவினும் நிறைந்து நிற்லால்உருவல்லன். உருவருவல்லன், அருவுமல்லன், அவன் வேண்டுதல் வேண்டாமையிலான், முற்றறிவும், அளவிலாற்றலும்எல்லாவல்லமையும் பேரின்பமும் முதலியனவுடைய தனக்குவமையில்லாத பெரியன் ஆதலால் தற்பயன் கருதியொன்றும் புரிவானல்லன், கதிரவன்முன் தாமரை அலர்தல்

ஆம்பல் குவிதல் முதலிய தொழில்கள் நிகழினும் அவற்றால் கதிரவன் விகாரமடையாமைபோல இயல்பில்மலங்களுடைய உயிர்கள் அவற்றை யொழித்துப் பேரின்பம் எய்தற்பொருட்டு இறைவன் சான்றாய் நின்று தன் சத்திகளால் முத்தொழில் நிகழ்விப்பன். அவன் சுத்தமாயை அசுத்தமாயை பகுதிமாயைகளாற் றோன்றிய புவனகோடிகளிலும் அவற்றிலுள்ள ஆன்மகோடிகளிலும் சிவணி (பொருந்தி—நிறைந்து) இருத்தலால் சிவன் என்ற பெயராலழைக்கப்படுகின்றனன்.

---

## பாசவுண்மை.

### இரண்டாவது சூத்திர வுள்ளக்கிடை.

---

(16) மாணாக்கன் வினா.

உயிர்கள் மலத்தாற் கட்டுண்டன. முதல்வன் மலமில் முற்றறிஞன். இவ்விருதிறத்தினரும் எவ்வாறு சார்ந்திருக்கின்றனர் எனில்,

ஆ. உரை.

உடலில் கைவிரல், கால், கண், நா, மூக்கு, காது முதலியன இருக்கின்றன. உயிர் உடல் முழுதும் நிறைந்துநின்று உடற்கிட்ட பெயராலழைத்தழி உயிர் உடம்பெனத்தானெனவேற்றுமையின்றி இயைந்து நின்று என் என்கின்றது. கண்ணால் காண்கின்றது; நாவாற் சுவைக்கின்றது; மூக்கால் மணமறிகின்றது; காதாற் கேட்கின்றது. அவ்வாறொட்டி நின்றபொழுதும் உயிர் உயிரே, உடம்பு உடம்பே. உயிர் உடம்பாயொழியாது உடம்பு உயிராகமாட்டாது. அவ்வாறாயினும் உயிர் உடம்பாயும் அதனின் வேறாயும் நிற்கும். உடம்பு அங்ஙனம் நில்லாது. அதுபோல் முதல்வன்

முதல்வனே, உயிர் உயிரே. முதல்வன் உயிராயொழியான்; உயிர் முதல்வனாகமாட்டாது. முதல்வன்உயிராயும் அதனில் வேறாயும் நிற்பன். இவன் ஒருவன் உளன் என்று ஒருயிரை யும், உயிர் நிறைந்திருக்கும் உடலையும், உடலுள்ளிருக்கும் ஆயிரக்கணக்கான புழுக்களையும் ஒன்றுபடுத்தி உணர்கின் றோம். அதனால் உயிரும் உடலும் பொருண்மையால் வேறா யினும் கலப்பினால் ஒன்றேயாய் இரண்டற்றதாயிருக்கின் றன. அதுபோல இறைவன் அறிவில் பொருளாகிய அளவி லுலகங்களும், அறிவுடையனவாகிய அளவில்உயிர்த் தொகு திகளும் ஆகிய அறிவு அறிவில் (சேதனாசேதன) பொழில் களனைத்தும் உடலாயும் தானுயிராயும் ஒன்றாய் இரண்டற் றிருக்கின்றனன். அதாவது முதல்வன் கலப்பினால் உடலின் உயிர் போல் அவ்வுயிர்களேயாய், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போலவற்றின் வேறுமாய், உயிர்க்குயி ராதற் றன்மையாற் கண்ணொளியின் ஆன்மபோதம்போல (உயிருணர்வு) உடனுமாய் விளங்குகின்றனன். * உலகெலா மாகிவேறாயுடனுமாய் என்ற உரையளவையுமிதை விளக்கு கின்றது. ஒன்றே இரண்டற்றது பெரிது (ஏகமேவாத்வி தீயம் பிரம்ஹ) என்ற (பிரஹ் 4-4-20) உரையும் இதை ஒத் துரைக்கின்றது.

இவ்வியைபுபற்றியே எல்லாஞ் சிவமாக எண்ணலும், எல்லாம் என்பவற்றுள் அடங்கிய தன்னை (உயிரை) அது வாக (சிவமாக) எண்ணி ஆணவமொழிந்து பேரின்பமெய்த லும், அவன் வடிவம் எல்லாமாய் நிற்றலும் ஆகிய பேறெய் தவுமியலுமென்க

---

* உலகெலாமாகி வேறாயுடனுமாய் — சிவஞானசித்தி யார் சூ. 2. பக்கம் 1

(17) மாணாக்கன் வினு.

உயிர்கள் தம் வினைக்குரிய பலன்களைத் துய்த்து அவற்றிற்குரிய பிறப்புகளைத் தாமேயடையாவோவெனில்;

ஆ. உரை.

உயிர்கள் பிறவிகளைத் தாமேயடையா. உயிர் சிற்றறிவும் சிறிதொழிலுமுடைமையாலும் மாயையும் வினைகளும் சடமாயினமையாலும் இறைவன் உயிர்களேயாய் அவற்றின் வேறுமாய் உடனுமாய் நின்று (அவற்றின்) இரு வினைகளால் இறத்தல், பிறத்தல்களைப் புரியும் வண்ணம் தன் சிற்சத்தியில் நீக்கமின்றி நின்று நடாத்துவன் என்க.

(18) மாணாக்கன் வினு.

உயிர்களுக்கு மலங்களெப்போது வந்தன ? அவை யாராற் றொழிற்படுகின்றன ?

ஆ. உரை.

நெல்லிற் குமியும், செம்பிற்களிம்பும் அவை உளவாயின வன்றே உண்மை போல ஆணவம், கன்மம், மாயை, ஆகிய மும்மலங்களும் உயிர்க்கு என்றும் உள்ளனவாம். மலங்கள் அறிவில்லன (சடம்)வாதலால் தன்முன்னுள்ள தாமரைபபூ அலரவும் கூம்பவும் ஞாயிற்றிறுற் செய்யப்படுமாறு போல அவை (மலங்கள்) தத்தங் காரியங்களைச் செய்ய முதல்வனுலே (தன்சத்தியால்) தொழிற் படுத்தப் படும். மூலமலத்தின் காரியம் மோகம், (மயக்கம்) அகங்கரித்தல் முதலியன. இருவினையின் காரியம், இன்பம், துன்பம், முதலாயின. மாயையின் காரியம் உடல், கருவி, புவனம், துய்ப்புகள்.

(19) மாணாக்கன் வினு.

உயிர்களுக்கு அவரவர் வினைப்பயனை அறிந்தூட்டுபவர் யாவர்?

ஆ. உரை.

உயிர்களால் முற்பிறவிகளில் ஈட்டப்பட்டு மாயையிற் கட்டுப்பட்டுக் கிடந்த அறம்-மறங் (புண்ணிய-பாவம்) களாகிய பொதிவினை (சஞ்சிதகன்மம்) தன் பயனாகிய இன்ப துன்பங்களையும் அவை நுகர்தற் குரிய நிலைக்களமாகிய உடம்பினையும் தோற்றுவிப்ப அவ்வுயிரே அவ்வுடம்பிற் சார்ந்து துய்வினை (பிராரப்தகன்மத்தை) யை நுகரும். அதை நுகரும் பொழுதுவரும் வினை (ஆகாமியகன்மம்)உண்டாகும். பொதிவினை தானியக் களஞ்சியத்தையும், துய்வினை உணவுக் கெடுத்துவைத்த தானியத்தையும், வரும்வினை வித்தினையும் போன்றனவாம். வினைசடமாதலால் வினையே பலனைவிளைவிக்க மாட்டாது; தானறிந்து பொருந்தாது. உழவர் செய்யும் தொழிலுக்குத் தக்க பயனை விளைநிலம் விளைவிப்பது போல முற்றறிஞனாகிய முதல்வனே அவ்வினைகட்குரிய பலனை அறிந்து கூட்டுவன்.

(20) மாணாக்கன் வினா.

உயிர்கள் எவ்வாறு எடுத்தவுடலை விட்டு எவ்வாறு சென்று மறுபிறப்பையடையும் ?

ஆ. உரை

உயிர் இவ்வுடம்பு கெட அதையிட்டு நீங்கிப் படைப்புக்கால முதல் ஒடுக்ககாலம் வரை கேடின்றி நிலைத்திருக்கும் நுண்ணுடலோடு பொருந்தி அது பூதச்சாரவுடம்பு முதலியனவாய்க் காரியப்பட அவற்றோடு துறக்க நிரயங்களிற் சென்றனுபவித்து நனவிற்கண்டவற்றை கனவில் மறப்பது போல முன்னிகழ்ந்தவற்றை மறந்து, முன்னுடல் நீங்குங்கால் நினைந்தகதிக்கு சூக்கும வுடலோடு சென்று அதற்குரிய கருவிற்பொருந்தி மறுபிறப்பையடையும்.

(21) மாணாக்கன் வினா.

மக்கள் உடல்பற்றி நின்ற உயிர் மறுபிறப்பில் அச்சு (யோநி) மாறிப்பிறக்குமா? மாறாது பிறக்குமா?

ஆ உரை.

உயிர் பூதச்சார உடலோடு துறக்கம் நிரயங்களிற் சென்றின்ப துன்பங்கள் நுய்த்து மறுபடி பிறப்படையுங்கால் அவ்வுயிர் வினைகருரிய பிறவியில் அச்சுமாறிப் பிறக்கும். பிறக்குமுயிர் முகில் மண்டலம், நிலம், தந்தை, தாய் இடங்களை அடைந்து கருவிற் புகுந்து பிறக்கும்.

(22) மாணாக்கன் வினா.

உயிர் உடலை விட்டுப் போதற்கு யோகி தன்னுடல் விட்டு வேற்றுட லடைதல் போலும் என்றும், குடாகாயம் குடமுடைந்தவழி மகாகாயத்தோடுகூடுதல் போலும் என்றும் உவமைகூறல் ஒன்றுக்கொன்று ஒவ்வாதிருப்பதேன்?

ஆ உரை.

உயிர் உடலை விட்டு நுண்ணுடலோடு சென்று வேற்றுடலிற் சார்ந்து மறுபிறப் பெய்தற்கு யோகி வேற்றுடல் சாருவமையும், உயிர் இருவினை யொப்பு மலபரிபாக மெய்தி இறைவனொடு சாருங்கால் உயிர் நுண்ணுடல் விட்டுப் போவதற்குக் குடவாகாயம் குடமுடைந்தவழி மகா ஆகாயத்தோடு கூடுதல் உவமையும் கூறப்படுகின்றது. ஆதலால் ஒவ்வாமை சிறிது மின்று என்க.

(23) மாணாக்கன் வினா.

இறைவன் எங்குமுள ஒருவன் என்ப தெங்ஙனம் பொருந்தும்.

ஆ உரை.

அகரவுயிரின்றேல் எல்லாவுயிர்களும் மெய்களும் இன்றாதல் போல (எங்கும் நிறை) இறைவனிலனேல் எல்லாவுயிர்களும் எல்லாவுயிரில் பொருள்களும் அமையாவாம். முதல்வன் ஞாயிறும ஒளியும் போல சிவமுஞ் சத்தியு மென்றியைந்து உலகுயிர்களில் நிறைந்து நிற்பன். ஞாயிறு நிறையிடமும் (வியாப்பியமும்) ஒளி நிறைபொருள் (வியாபகமும்) ஆதல் போல எல்லா உயிர்களும உலகங்களும் வியாப்பியமும் இறைவன் வியாபகனும் ஆம். உலகம் அவனுடைமை, உயிர்கள் அவன் அடிமை ஆதலால் இறைவன் ஒருவனே எங்கும் நிறைந்துள்ளவன் என்க.

---

## பசுவுண்மை.

## மூன்றும் சூத்திரவுள்ளக்கிடை.

---

(24) மாணாக்கன் வினா.

முன்னர் நாம் இருப்பதும், காண்பதும் துய்ப்பதும் ஆயவை உலக மென்றும், உலகத்தைப் படைத்துக் காத் தொடுக்குபவன் முதல்வனென்றும் அறிந்தோம்.

இனி உயிர்கள் எத்தன்மையன? எவை? எனில்.

ஆ. உரை.

உயிர் அறிவது ஆதலால் ஆன்மா (உயிர்) யாதென்று ஆராய்கையில் இவ்வுடல் ஆன்மாவன்று, பொறி முதலியன ஆன்மாவன்று என்றறிந்து நிற்பதொன்றுளதாகலின் அதுவே ஆன்மா (உயிர்) ஆம் என்க.

**மாணாக்கன் வினா.**

பிரம சைதன்னியப் பிரதிபிம்பம் (இறை நிழல்) எனப் படும், சிதாபாசன் (அவித்யாப் பிரதிபிம்பன்) என்னும் உண்மையில் இலது உயிர் எனில் உண்டாகும் இழுக்கென்னை!

ஆ. உரை.

கிளிஞ்சிலில் வெள்ளி போலத் தோன்றிய மூலப்பிர கிருதியில் பிரதி பிம்பித்த பிரம சைதன்யம் சிதாபாசன் (அவித்யாப் பிரதிபிம்பன்) என்கின்றனர். கிளிஞ்சில் வெள்ளி இல் பொருள். கண்ணாடியில்லாத பொழுது பிரதிபிம்பம் (சாயை) உண்டாகாதது போல உண்மையில் மூலப்பிர கிருதியிலாத பொழுது, பிரமசை தன்னியப் பிரதிபிம்பமும் (சிதாபாசனும்) உளவாகாது. ஆதலால் சிதாபாசன் உண்மை யில் இல்லன், சித்தும் பிரதிபிம்பமும் (ஆபாசமும்) மனிதனை யும் நிழலையும் ஒத்தன. மனிதன் அறிவன்; நிழல் அறிவிலது நிழலுக்கு நல்வினை, தீவினைகளும், பிறப் பிறப்புகளும் பந்த மும வீடும் நனவு முதலிய அவத்தைகளும் உளவாகா. அது போல் சிதாபாசனுக்கும் அவையில வாதலால் அஃது உயி ரன்று. அஃதுயிரன் றென்றறிந்து நிற்பதொன்றுள வாக லின் அதுவே உயிர்.

(26) **மாணாக்கன் வினா.**

உயிரறிவை விளக்கும் மாயை உயிராகாதோ வெனில்,

ஆ. உரை.

மாயை உடல் பொறி கருவிகளாகிக் கண்ணுக்குக் கண் ணாடிபோல் உயிர்க்கறிவை விளக்குதல்மட்டுமன்றித் தானே அறிவதன்றாதலால் அது ஆன்மாவன்று.

(27) மாணாக்கன் வினா.

ஐம்பொறிகளை உயிரென்னலாகாதோ வெனில்.

ஆ. உரை,

உறக்கத்தில் ஐம்பொறிகளறியா வாதலானும், நனவில் ஐம்பொறிகள் ஒன்றறிந்த தொன்றறியா வாதலானும் ஐந்தையுமறிந்தவற்றின் பயன்கொள்வ தாயிரொன்றே யாதலானும் ஐம்பொறிகளுயிரல்ல.

(28) மாணாக்கன் வினா.

நுண்ணுடலை (சூக்கும தேகத்தை) உயிரெனலாகாதோவெனில்,

ஆ. உரை.

புறவுடலும் ஐம்பொறிகளும் செயலற்றுக்கிடப்ப உள்ளுடம்பிற் (சூக்கும தேகத்தில்) சார்ந்து அக்கருவிகளால் கனவில் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து மீண்டும் தூலவுடல் சார்ந்து நனவுபெற்று கனவுகண்டதுங் காணாததும் மயங்கியறிவது உயிர். சூக்குமவுடலறிவதெனில் கண்டபடியறியும். ஆதலால் உள்ளுடம்பு (சூக்கும தேகம்) உயிரன்று

(29) மாணாக்கன் வினா.

பிராண வாயுவை உயிரெனலாகாதோ எனில்,

ஆ உரை.

கருவிகளொடுங்கி இன்பத்துன்ப நுகர்ச்சியுமில்லாத உறக்கக் (சுழுத்தி) காலத்தும் பிராணவாயு (உயிர்ப்பு) இயங்கிக்கொண்டிருப்பதால் உயிர்ப்பு உயிரன்று. உயிர்ப்பினை வேறாய் உண்டி வினைகளையுடைய உயிர்வேறுளது.

(30) மாணாக்கன் வினா.

பேரறிவுடையமுதல்வனேஉயிரெனலாகாதோவெனில்

ஆ உரை.

உயிர் (ஜீவான்மா) கருவிகளோடு கூடிய கனவின் கண்ணும் ஒருங்கேயறியாது ஒன்றொன்றாயறிந்து மறந்து அவத்தைகளிற்பட்டும், அதீதாவத்தையில் அறிதலின்றியும் வினை வயப்பட்டுப் பிறந்திறந்து சார்ந்ததன் வண்ணமா யறிந்து நிற்பது, கட்டுவீடுகளுடையது, உணர்த்த உணருஞ்சிற்றறிவது. முழுமுதல் (பிரமம்) பிறப் பிறப்புகளிலது, மறந்து மறந்தறிதலின்றி எக்காலத்துந் திரிபின்றி அறிந்தவாறே அறிந்திலங்கும் எங்கும் நிறை முற்றறிவது. ஆதலால் முழுமுதல் உயிரன்று என்க.

(31) மாணாக்கன் வினா.

மாயா இயந்திரமாகிய உடம்பே உயிர்க்கு விளக்காதலின் அவ்வுடம்பே உயிராம் எனிற்படு மிழுக்கென்னை?

ஆ. உரை.

மாயா காரியமான தத்துவங்களின் கூட்டமாகிய உடல் தோன்றி அழியுந் தன்மையது.

உடலாகிய தத்துவக்கூட்டம் கண்ணுக்கு விளக்குப் போல் உயிருக்கு விளக்கு கருவிகளாம். ஆதலால் கண் விளக்கின் வேறாயினாற்போல உயிர் அவ்வுடம்பின்வேறாம்.

---

## நான்காஞ் சூத்திரம்.

---

## இலக்கண இயல்.

### பசுவிலக்கணம்.

(32) மாணாக்கன் வினா.

அந்தக்கரணங் (உட்கருவி) களையன்றி அறிதல் முதலியன நிகழாமையின் அவற்றினொன்று உயிர் ஆகாதோ? வெனில்,

ஆ உரை

உயிர்க்கு புறப்பொருள்களைக்காண்டல் முதலியவற்று க்கு கண் செவி முதலியன புறக்கருவிக ளாதல்போல மன முதலிய அந்தக்கரணங்கள் உட்கருவிகளாகின்றன. உருவம் வேறு-அதைப் பார்க்கும் கண்வேறு. கண்ணினும் அதைக் கவரும் மனம்வேறு. அம்மனத்தால் நினைக்கும் உயிர்வேறு. அதாவது மனம் (உளம்) புத்தி (அறிவு) சித்தம, ஆங்காரம் என்ற உட்கருவிகள் வேறு. அவற்றைச்சார்ந்தறியும் உயிர வேறுதலால் அந்தக்கரணங்களில் ஒன்று உயிராகாது.

(33) மாணுக்கன் வினு.

சேதனனுகிய (அறிஞனுகிய) உயிர்தானே அறியாம லிருப்பதேன்?

ஆ. உரை.

உயிர் இயல்பிலறிஞனுயினும செம்பிற் களிம்புபோல மூலமலத்தினுல் அவ்வறிவு மறைப்புண்டு அம்மறைப்பால் தானே அறியாது மாயையாலாகிய உள்ளுடல் புறவுடல் களோடு கூடியறிகின்றது அவற்ளுேடு கூடும் நிலைகள் ஐந்துவகைப்படுகின்றன. ஆதலால் உயிர் தானே தனித்து நின்று அறியாது

(34) மாணுக்கன் வினு.

உயிர் ஐந்து நிலைகளை (அவத்தைகளை) அடைவதெப்படி?

ஆ. உரை.

மூலமலத்தால் அறியாமையுற்ற உயிர் (1) உடலில் நுதலில் சுரு தத்துவங்களைப் பொருந்தி நின்று நனவு (சாக் கிராவத்தை) நிலையடைகின்றது. (2) கண்டத்தில் உரு தத் துவங்களோடு பொருந்து நின்று கனவுநிலை (சொப்பனுவஸ் தை) யடைகின்றது, (3) நெஞ்சில் உயிர்ப்பு (பிராணன்)

சித்தம், ஆளன் (புருடன்) என்ற ௩ தத்துவங்களோடு பொருந்திநின்று உறக்கம் (சுழுத்தி) நிலையடைகின்றது (4)நாபியில் (கொப்புழில்) பிராணன் புருடன் என்ற இரண்டு தத்துவங்களோடு பொருந்திநின்று துயில் (துரியம்) நிலை அடைகின்றது (5) மூலத்தில் புருட தத்துவம் ஒன்றோடு பொருந்திநின்று ஆழ்துயில் (துரியாதீதம்) நிலை அடைகின றது. அவ்வாறின்று திருமபி விழித்து நனவு நிலையடைந்து உலகில் நடமாடுகின்றது

ஐந்தவத்தைப்படும் பொழுது கருவியும் உயிரும் அமைச்சும் அரசும் ஒப்ப நின்று தொழிற்படுகின்றன.

---

## ஐந்தாஞ் சூத்திரம்.

---

### பாச விலக்கணம்.

(35) **மாணக்கன் வினு.**

கண் முதலிய ஐம்பொறிகள் ஒளி முதலிய ஐம்புலன் களைத் தாமே அறியுமோ? வெனில்,

**ஆ. உரை.**

கண் முதலிய ஐம்பொறிகளோடு உயிர் ஒற்றுமைப் பட்டு நின்றறிந்தாலன்றி அவை ஒளி ஊறு ஓசை சுவை நாற்றமென்ற ஐம்புலன்களையும அறியமாட்டா. உயிர் நனவு நிலையிற்றொழிற்பட்டு நிற்கும்பொழுதும் ஒரு ஒலியை யூன்றிக்கேட்குங்கால் முன்னிற்கும் உருவைப்பற்றி

நோக்காமல் போவதுண்டு இவ்வாறே பிறவும் ஆதலால் ஐம்பொறிகள் உயிரானே ஒளி முதலியவற்றை யறிகின்றன. தாமேயறியா என்க.

(36) மாணாக்கன் வினா.

உயிர் தானே ஐம்புலனையறியுமோ? வெனில்:—

ஆ. உரை.

உயிர் மூலமல மறைப்புடைமையால் தானேயுணராது. முதல்வன் உணர்த்த உணர்ந்து ஐம்பொறிகளை ஒற்றித்தறிகின்றது.

(37) மாணாக்கன் வினா.

உயிர் ஐம்பொறிகளை ஒற்றித்தறியுமின்ப துன்பங்கள் உயிர்க்காதல்போல, உயிரை யொற்றித்தறியும் இன்ப துன்பங்கள் முதல்வனுக்கு முளவாமோ? வெனில்

ஆ. உரை.

காந்தத்தின் முன் இருப்பு தொழிற்படினும் இரும்பின் விகாரம் காந்தத்துக்கில்லாமைபோல இறைவன் முன் அவனது சிற்சத்தியால் உயிரறிந்து துய்க்கும இன்ப துன்பங்கள் இறைவனுக்காகா, ஆதலால் இறைவன் அவற்றால் விகாரியுமாகான் என்க.

(38) மாணாக்கன் வினா.

இறைவன் தனக்கென ஒரு பயனுமின்றி உயிர் உணர்ந்து துய்க்கச் செய்வதெதனால்? எனில்.

ஆ. உரை.

முற்றறிவும் அளவிலாற்றலும் உடைய இறைவன் சத்தியாகிய பேரருளுடையன். உயிர்கள் மூல மலத்தால் இயைந்துள்ள பசுத்துவத்தை நீக்கி சிவத்துவத்தை விளக்கி வீடுபேறடைவிக்க ஐந்தொழில நடாத்தும் இறைவனும். அருளும் (அருட் சத்தியும்) குணியும் குணமும் போன்றன ஞாயிறுதன்னொளியொடு தாதான்மியமாய் (அதுவதுவாய்) இயைந்து நிற்குமாறுபோல முதல்வன் அவ்வருளொடு தாதான்மியமாயியைந்து நிற்பன். அருள் அவனியல்பு. தன் வயத்தனும் வேண்டுதல் வேண்டாமையிலனுமாகிய இறைவன் தற்பயன் கருதியொன்றுஞ் செய்வானல்லன். உயிர்களை வீடுறுவிக்கும் பயன் கருதியே ஐந்தொழில் நடாத்துகின்றனன் என்க.

---

## ஆறஞ்சூத்திரம்

---

## பதி இலக்கணம்

(39) **மாணாக்கன் வினு.**

அசத்துப் பொருள் (மாறுவது)கள் எவை:—

ஆ. உரை

மாறாது என்றும் ஒருபடித்தாய் உள்ளது சத்து. (உளது மாறாதது) பாசவறிவு பசுவறிவுகளால் அறியப்படும் பொருள் அசத்து (மாறுவது). அதாவது உயிர்-பொறி முதலிய புறக்கருவிகளாலும் உள்ள முதலிய உட்கருவிகளாலும் அறியும் அறிவு பாசவறிவு. யோகப்பழக்கத்தால் மூல மலங்குறைந்து பசுவறிவு சிறிதுவிளங்க அதனாலறியும் அறிவு பசுவறிவு. இவ்விருவகை யறிவுகளாலும் அறியப்படும்

பொருள் அனைத்தும் தோன்றியழியும் மாறுதலுடையன ஆதலாலவையனைத்தும் அசத்து (மாறுவது)

(40) **மாணாக்கன் வினா.**

பாசவறிவு பசுவறிவுகளானறியப்படுவது அசத்து (மாறுவது). எவற்றானும் அறியப்படாதது இல்லாதது (இல் பொருள்) எனில் சத்து (உளது-மாறாதது) எனப்படுவது யாது.

**ஆ. உரை.**

சத்து பாசவறிவு பசுவறிவுகளாலறியப்படில் உலகம் போல்மாறுபொருளாம் (அசத்தாம்). எவ்வாற்றானும் அறியப் படாதெனில் இல்பொருளாம். அவ்விருதிறனுமில்லாதது சிவசத்து. காற்றும் விண்ணும் கண்ணுக்குத் தோன்றாமை யால் இல்பொருளாகாமைபோல உண்மையில் சத்து அவ்வ றிவுகளுக்கெட்டாததால் அசத்துமன்று இல்பொருளுமன்று பசு ஞான பாச ஞானங்களா லறியப்படாததும், பசு சிவ த்தோடொற்றுமைப்பட்டு நின்று பதிஞானத்தால் துய்த் தறியப்படுவதும் சத்து ஆம்.

அதாவது பசுபாச ஞானங்களுக்கு (வியாபகமில்லறிவு களுக்கு) எட்டாதது சிவம்.-(வியாபகச் சித்துச்சத்து). பதிஞானத்தாலறியப்படுவது சடமாகிய (சத்தல்லாத) சித் துச்சத்து. எங்கும் நிறைந்ததாயும் ஞானவடிவாயும் மாறு தலற்று என்றுமுளது சிவசத்தாமெனலாம். அதுவேசத்து.

---

## ஏழாஞ் சூத்திரம்.

### சிறப்பதிகாரம்

### பயிற்சி இயல். (சாதன இயல்)

(41) **மாணாக்கன் வினா.**

சிவசத்து அசத்தை யறியுமா? அல்லது அசத்து (சடசத்து) சிவசத்தையறியுமா? எனில்

ஆ. உரை.

வியாப்பிய (நிறைவிடம்) மான பசுபாசங்களோடு வேற்றுமையின்றி உடனாய் வியாபித்துள்ள முதல்வனுக்கு வேறொருபொருளின்மையின், அவன் அசத்தை அறிந்தாங்கறிவனன்றி நம்மனோர்போல வேறாகச்சுட்டியறியான். அன்றியும் சிவசத்தின்முன் அசத்து கதிர்முன்னிருள்போல் விளங்கித்தோன்றாதாதலால் சிவசத்து அசத்தை அறியாது.

கண்ணாடி கண்ணோடு சார்ந்தொன்றை நோக்கும். சாராதபொழுது கண்ணாடிக்கு நோக்குமறிவின்மை போல் அசத்து அறிவிலது (சடம்) ஆதலால் அது (அசத்து) சிவசத்தையறியாது.

(42) மாணாக்கன் வினா.

உயிர் (சீவான்மா) சத்தா அசத்தா? எனில்,

ஆ. உரை.

உயிர் சொல்லுணர்வுகளுக்கெட்டாத-(வாக்கு மனாதீதமான) முற்றுணர்வும் எல்லாவல்லமையுமுடைய சிவமாகிய சத்துமன்று; மாறுதலடையும் மாயையாலாகிய உடல் கருவி புவனம் துய்ப்புகளாம் சடமாகிய அசத்துமன்று, ஆனால் சிவமாகிய சத்தைச் சாரும்பொழுது சத்தாயும் மாயையாகிய அசத்தைச் சாரும்பொழுது அசத்தாயும் விளங்கும் சதசத்தாம் -மாறாதது மாறுவதுமாம்.

ஞாயிறும் விடயமும் (அறியப்படுபொருளும்) ஒன்றொன்றறியப்படாது. கண் ஞாயிற்றைச்சார்ந்து அதனையறியும், விடயத்தையும் சார்ந்து அதையும் அறியும். அதுபோல சத்தும் அசத்தும் ஒன்றொன்றறியப்படாது. உயிர் சத்

தைச்சார்ந்து சத்தையறியும் அசத்தைச் சார்ந்து அசத்தையறியும். ஆதலால் உயிர் சத்தும் அசத்துமன்றிச் சதசத்தாமென்க.

---

## எட்டாஞ் சூத்திரம்.

## ஞானமுணர் முறை

(43) **மாணாக்கன் வினா**

உயிர்களுக்கு எப்பொழுது பிறந்திறந்துழலல் ஒழியும்?

**ஆ. உரை.**

பாச அறிவால் பிறப்பிறப்புகள் பெருகும். மெய்ஞ்ஞானம உண்டானபொழுது பிறப்பிறப்புகளொழியும்.

(44) **மாணாக்கன் வினா.**

மெய்ஞ்ஞானம உயிர்கட்கெவ்வாறு வரும்?

**ஆ. உரை.**

உயிர் ஒழுக்கம் (சரியை) நற்செயல் (கிரியை) யோகம ஆகிய தவத்தைச்செய்து கடவுளுலகம முதலிய பதங்களை யடைந் தின்பம் துய்த்து, முன்னுடம் பிறக்குநாள் அடுத்த அவாவினைத் துய்த்தற் பொருட்டு மீளத் தவஞ்செய்தற் குரிய நற்சார்பிற் பிறந்து தவம்புரிதலால் உளத்தூய்மை யடைந்து அறம்மற மிரண்டும் ஒத்தகாலத்து ஞானாசிரிய னையடைந்து மெய்ஞ்ஞானமெய்தும் என்க.

(45) **மாணாக்கன் வினா.**

ஆசிரியன் உயிர்க்குணர்த்துவது யாது?

ஆ. உரை.

ஞானாசிரியன், இறைமுதல்வன் வேடர்பாற் சிக்குண்டு தன்னிலைமறந்து மயங்கினமை போல, உயிராகிய நீ ஐம்புல வயப்பட்டு வளர்ந்து இறைவன்பேரின்பப் பெருஞ்செல்வந் துய்த்தற்குரிமையுடைய அறிவு (சித்து) இனத்தினன் நானென்றுணராது மயங்கித்துன்புறுகின்றனை யென்றுயிர்க் கறிவுறுத்தி, ஐம்புலவேடரை விட்டுநீங்கிச் சிவத்தொடு வேறின்றி நிற்கு முறையை உணர்த்துவன் என்க.

(46) மாணாக்கன் வினா.

உயிர்களுக்கு ஞானாசிரியனாய் வந்துணர்த்துவது யார்?

ஆ. உரை.

உயிர்கள் ஒருமலமுடையர், இருமலமுடையர், மும்மல முடையரென முத்திறப்படுவர் அவர் பரிபாகமெய்திய காலத்தில் (அன்புமுதிர்ந்த காலத்தில்) மூலமலமாகிய ஒரு மலமுடையர்க்கு உண்ணின்றும், மூலமலம் கருமமலமிரண் டுடையர்க்கு அவனருளிய நாற்றோள் முக்கண் கறைமிட றுடைய வடிவாய் முன்னர்த் தோன்றியும், மும்மலமுடைய மக்கள் தேவர் முதலியார்க் கவ்வவர் வடிவுடை ஆசிரியரைச் சார்ந்தும் இறைவனே மெய்ஞ்ஞான முணர்த்தியருளுவன் என்க.

(47) மாணாக்கன் வினா.

ஒரு வடிவும் குணங்குறியும் அற்ற வாக்குளங்கட்கெட் டாத இறைவன் ஒருவடிவிற்றாய் எங்ஙனந் தோன்றுவன்?

ஆ. உரை.

குழவியின்பாலுள்ள அன்பால் தன்னிடத்து முன்னில் லாத முலைப்பாலும், கண்ணீரும் அன்னைக்குண்டாவதுபோல

எல்லாவல்லமையுமுடைய இறைவன் தனக்கென வடிவொன்றுமிலனாயினும் அருளால் அன்பர் நினைத்த வடிவாய்த் தோன்றியருளுவன் என்க.

(48) **மாணாக்கன் வினா.**

உயிர் தன்னியலை ஏன் அறிவதில்லை?

**ஆ. உரை.**

படிகத்தைச் சார்ந்த பலவேறுவகைப்பட்ட நிறங்கள் அப்படிக வொளியைக் கீழ்ப்படுத்தித் தத்தம்மியல்பினையே விளக்கி நிற்குமாறுபோல, உயிரைச் சார்ந்த ஐம்பொறிகள் உயிரினியலைக் கீழ்ப்படுத்தித் தம்மாற் காட்டப்பட்ட காட்சிகளையே உயிர்க்குக் காட்டி நிற்கின்றமையான் இவ்வுயிர்கள் ஐயுர்ணவுகளான் மயங்கித் தம்மையுணரா.

படிகம்-பளிங்கு.

(49) **மாணாக்கன் வினா.**

உயிர் தன்னை யுணர்ந்து, தலைவன் அடி எவ்வாறுகூடும்?

**ஆ. உரை.**

படிகம்போல் ஐம்பொறிகளினியல்பைத் தன்னியல்பென மயங்கி நின்ற உயிர், முதல்வனாகிய ஆசிரியன் மொழியால் அறிவுருவாய்ப்-பரவுவதாய் (சித்தாய்-வியாபகமாய்) உள்ளதான், பருப்பொருளாய்-ஓரிடத்ததாய் (சடமாய்-ஏகதேசமாய்) உள்ள ஐம்பொறிக்காட்சிகளின் வேறென்று தெளிந்து, தடையுற்ற ஆற்றுநீர் சிறை நீங்கிய பொழுது சென்று கடல்புக்கொன்றுதல்போலக், கருவிகளாயபாசஞானத்தடையுற்ற உயிர் அத்தடை நீங்கியவழி முதல்வன் றிருவடியைக் கூடி அதன் கண்ணடங்கும்.

உயிர் ஐம்பொறிக் காட்சிகளையும், உட்கருவிகளையும் சாரல் பாசஞானம். அவற்றை நீங்கி முதல்வனை யெண்

ணித் துளக்கமின்றி நிற்றல் அவன்றிருவடி கூடல். அது உயிர் புறக்கருவியுட்கருவிகளிற் செல்லாதொரு முகப்பட்டு முதல்வனை நினைந்து அதுவேயாய் நிலைத்து நிற்றல் ஆம்.

(50) **மாணுக்கன் விஞ.**

உயிர் முதல்வனை எவண் சென்று கூடுவன்?

**ஆ. உரை.**

முதல்வன் உயிரோடு இரண்டறக்கலந்து வேறற்றுளோன் (அநந்நியன்). ஆதலின் உயிர் வேற்றிடஞ்செல்லாது இருந்தவழியிருந்து முதல்வனை நீங்காது அவனருளாலறிந்து கூடுவன்.

(51) **மாணுக்கன் விஞ.**

உலகாசிரியர்பாற் சூழ்பெற்ருேரும், கடலிலடைந்த ஆற்றைப்போலச் சிறிதும் திரும்பாரோ?

**ஆ. உரை.**

பரிபாக முதிர்ந்தகாலத்தில் முதல்வன் உண்ணின்றும் முன்னின்றும் சார்ந்து நின்றும் சூழ் அருளப்பெற்ருேர் உடனே ஞானமெய்தித், தீய்வினை தீரில் முதல்வனேடிரண்டறக் கலந்து வீடுபேறெய்துவர். அங்ஙனமின்றி முறையே ஒழுக்கம் நற்செயல், யோகம்பயின்று உலகாசிரியர்பாற் சூழ்பெற்ருேர் நீர்ப்பாசி கல்லெறிந்தவழி நீங்கிப் பின் பரவுதல்போல் ஐம்பொறியுணர்ச்சிகளினின்று நீங்கி முதல்வனடிகூடி நின்று யோகுபயிலுங்கால், மலம் கன்மம் மாயைகளின் வாதனையால் (முன் பழக்கத்தால்) மீண்டும் ஐம்பொறிவழியிற் சேரினும், அயரினும் மறுத்தும் முதல்வனை எண்ணி நின்று பயின்று திருவடி கூடுவர். ஆதலால் உலகாசிரியர்பாற் சூழ்பெற்ருேர் யோகமுற்றும் வரை திரும்பவும் பயில்க

உயிர் இறைவனோடு கூடச்செய்யும் பயிற்சி ஓகம் (யோகம்) எனப்படும். ஓகம்-கூடல். ஓகம் யோகம் என்றாதல் ஆறு-யாறு, ஆனை-யானை, ஆடு-யாடு, முதலியன போன்ற போலி.

## ஒன்பதாஞ் சூத்திரம்.

### உயிருவளிப்பு (ஆன்மசுத்தி)

(52) **மாணாக்கன் வினா.**

உயிர் எந்த ஞானத்தில் முதல்வனைக்காணும்?

**ஆ. உரை.**

உயிர் பதி ஞானத்தால் பதியைக்காணும்.

(53) **மாணாக்கன் வினா.**

உயிர் எவ்வாறு பதிஞானத்தை யடைந்து பதியைக் காணும்?

**ஆ. உரை.**

உயிராற் காட்டப்பட்டு ஒரு பொருளைக் காணும் கண் தன்னைக்காணாது; அப்பொருளைக் காண்பித்து நிற்கும் உயிரையும் காணாது. அதுபோல முதல்வனா லுணர்த்தப்பட்டு ஒன்றனை உணரும் உயிர் தன்னியல்பை உணராது, தன்னை யுணர்த்திநிற்கும் முதல்வனையுமுணராது. இத்தகைய உயிர் ஆசிரியன் கூறுமால் தான் பொறிபுலன் கருவிகளாகிய அசத்தன்று; தன்னையுணர்த்தும் முதல்வனாகிய சத்துமன்று என்றோர்ந்து புறக்கருவிகளோடும், உட்கருவிகளோடும் புணராது அசைவற நின்று சிவன நான் (சிவோகம்) என முன்னி நிலைக்கில் கலுழன் முன்னலால் (கருட பாவனை யால்) விடம் நீங்கி நலம் பிறத்தல்போல மூலமலவிருள்

மறைப்பு நீங்கிப் பதிஞான வொளிதோன்றும். தோன்றவே கதிராற்கதிரவனைக் காணல்போல உயிர் அப்பதி ஞானத்தால் பதியை அறிவன் என்க.

(54) **மாணுக்கன் விஞ.**

உலகிற் பாசந்துய்த்த பழக்க வீர்ப்பு (லோகவாசனை) உயிருக்கு எவ்வாறு நீங்கும் ?

**ஆ. உரை.**

வேம்புதின்ற புழு அதைவிட்டுக் கரும்பைத்தின்னத் துவக்கி யதன் சுவையறிந்தும் பழக்கமிகையால் மறுத்தும் வேம்புதின்ன அவாவல்போல, உயிரைத் துன்புறுத்தும் பாசத்துய்ப்பை அசத்தெனவறிந்து, சிவனென்னும் முன்னலால் பதிஞான மெய்திப் பதியின் காட்சி யெய்திய பின்னும், அக்காட்சி நழுவிப் பாசத்துய்ப்பிற்செல்ல ஆர்வமெழில், ஆசிரியன் சூழ்பெற்றுப் பயில்வோன் தானுங் கட்டையில் ஐந்தெழுத்தாம மத்தால் முன்னலாகிய கடைதல் நிகழ்த்த அதில் பதிஞானமாகிய தீ யெழும். அத்தீ, பயில்வோனுகிய இரும்பைத் தன் வடிவாகரும். ஆகவே உயிர்க்குப் பாசந்துய்த்த பழக்கவீர்ப்பொழியும். ஆதலால் அந்நிகழ்ச்சியுண்டாதற்குரிய ஐந்தெழுத்தின் முன்னலே பாசந்துய்த்த பழக்க ஈர்ப்பை நீக்கும் மருந்தாமென்க.

---

## பத்தாஞ் சூத்திரம்.

### பயனியல் (பாச நீக்கம்.)

(55) **மாணுக்கன் விஞ.**

உயிர்சிவனென்னு முன்னலில் (சிவோகம் பாவனையில்) நிலைத்த பின்செயற் பாலதியாது? எனில்.

ஆ. உரை

ஞானக்கண்ணுற் காணத்தக்க முதல்வன் உயிரொடு தானுடனுய் நின்றறியவும், வேறு காணப்படுமாறின்றி யானே அறிந்தேனெனும்படி உயிர் தானேயாய் ஒற்றுமைப் பட்டு உயிரின் வழிநின்ற அப்பெத்த நிலைபோல் (அதாவது பெத்தகாலத்து முதல்வன் உயிர் தானேயாய் நின்ற முறை மை போல்) உயிர் அம்முதல்வனேடுடனுய் நின்றறியினும் தானென வேறுகாணப்படுமாறின்றி அவனேடொற்றுமைப் பட்டு அவ்விறை பணியின் வழுவாது நிற்றல் வேண்டும்.

உயிர் சிவத்தோடொற்றுமைப்பட்டு நிற்றல் என்பது விளக்கொளியைக் கண்காணுங்கால் அதுவதுவாய் நின்றுகாணும் பெற்றித்தாய், முதல்வனை உயிர்காணுங்கால் தன்னையும் முதல்வன் வண்ணமாய்க்கண்டு நிற்றல்.

(கருத்து) முதல்வன் இவ்வுயிராய் நின்றபடி உயிர் அவனிடத்தொன்றுபட்டு அவனுய் நிற்க என்க.

(56) மாணுக்கன் வினு

உயிர் உடம்பொடு நிற்குங்காறும் அது நுகர்தற் கேற்பட்ட துய்வினை (பிராரத்த கருமம்)யும் அதுபற்றி யேறும் வரும்வினை (ஆகாமியவினை)யும், துய்வினை துய்ப்ப தற்குத் துணைக்காரணமாய் உடனிற்கும் முயற்சியும் இன்றி யமையா துண்மையின், அவை உயிர் முதல்வனேடேகனுகி நிற்றற்குத் தடையாகாதோவெனில்.

ஆ உரை.

வினைகளை நுகர்தற்கும் ஈட்டுதற்குங் கருவியாகிய பொறிகளும், உட்கருவிகளும் மாயையின் விகாரமாயின வன்றி உயிரன்று. அவைதொழிற்படலும் முதல்வன் வயத்

தனவன்றி உயிர்வயத்தனவன்று; வினை நிகழ்ச்சிக்கு வாயிலாகிய காட்சிப்பொருள்களும் மாயையின் விகாரமாயினவன்றி உயிரன்று. அவற்றோடியைந்து நின்று வினைகளை நுகர்தற்கும் ஈட்டுதற்கும் வினைமுதலாகிய உயிர்களும் ஞானச்செய்திகளை முதல்வன் விளக்கியவழி விளங்கி அல்லுழி விளங்காமையின் உயிர்கள் அம்முதல்வன் வயத்தராவரன்றித் தன்வயத்தராகார், என்றிவ்வாறு பசுபாசங்களதியல்பை யுள்ளவாறுணர்ந்து யான் எனதென்னுஞ் செருக்கற்றுச் செய்வனவெல்லாம் அவனருள் வழிநின்று செய்யுஞ் செயலாகக் கண்டுகொண்டிருப்பாராயின், முதல்வன் அவர்க்கு வெளிப்படத்தோன்றுவன். அவ்வடியவர் எவ்வுடலிலிருந்து எவ்வினைகளைப் புரியினும் அவை அவர்க்குக் கட்டு (பந்தம்) ஆதலில்லை.

முதல்வன் யான் எனதென்னும் செருக்குடையாருக்கு வினைப்பயனை ஊட்டி வருவினையுஞ் சாரப்புரிவன். யான் எனதென்னும் செருக்கற்று இறைபணி நிற்பவர்க்கு நலஞ்செய்பவர்க் கவர் நல்வினைகளும், தீங்குசெய்பவர்க்கவர் தீவினைகளுஞ் சார்ந்து பலன்றர அவன் புரிவன்; அடியவரைத் தீவினை சார்ந்து பயன்றராது ஆதலால் ஏகனாகி நிற்றற்கவை தடையுமாகா என்க.

(57) **மாணாக்கன் வினா.**

பெருங்காயம் வைத்திருந்தபானை அது நீங்கியபொழுதும் முன்மணம் வீசுதல்போல, ஞானிக்குமுற்செய்வினை பயிற்சி வயத்தால் வந்தேறுதோவெனில்;

**ஆ உரை.**

ஞானிக்கு இங்குளி வாங்குங்கலம்போலப் பயிற்சி வயத்தான் ஓரோவழி உலகவாசனைபற்றிப் பிறழுவரினும்

பெருங்காயத்தின் மணத்தோற்றமேயன்றி அஃது கறிக்குதவாமைபோல வினைவாசனைத் தோற்றமன்றி இருவினை சென்றணைதலும அதனால் வரும்வினை வந்தேறலும் உண்டாகாது. சிறிதுவந்தேறினும தீத்தடை (அங்கித்தமபனம) கைவந்தார்க்குத் தீச்சுடாமலும் மருந்தருந்தித் தேர்ந்தவாக்கு விடமேறாமலுமிருத்தல்போலவருத்த மாட்டாது என்க.

(58) **மாணாக்கன் வினா.**

ஏகனாகியிறைபணி நிற்பார்க்கு மும்மலங்களெவ்வாறொழியும எனில்.

**ஆ. உரை.**

உலகிலென்செயலெல்லாம் உன் ஆணையே-நீயே யுண்ணின்று செய்வித்தும் செய்கின்றாய் எனக்கெனவொரு செயலுமின்றென்றுன்னியேகனாகியிறைபணியினிற்பார்க்கு நானென்ற முனைப்பின்மையால ஆணவமலமும, பொறிபுலன் வழியிற் சாராமையால் மாயை மலமும, ஞானி சிவமேயாய் நிற்றலானும் சிவம ஞானியைத் தானாக்கிக்கோடலானும் மூவினைகளும் ஒழிகின்றன. அதாவது ஆசிரியன் ஞானதீக்கை செய்த பொழுதே வறுத்தவித்துப்போல் பொதிவினையும, நான் எனதென்னும் செருக்கற்று ஏகனாகி நிற்றலால்துய்வினையும, நான் எனதென்னும் செருக்கொழிதலால் வரும்வினையும் ஒழிகின்றன. எடுத்தவுடலொழியுங்கால் மலவாசனையும் ஒழிந்து மறுபிறப்பிலதாம் என்க.

(59) **மாணாக்கன் வினா.**

புண்ணியங்கள் செய்வாரும், துறந்து தவஞ்செய்வாரும் பிறப்படைதலும், இறைபணி நிற்பார்செய்யும் பாதகங்கள்புண்ணிய மாதலும், எங்ஙனம பொருந்தும்? எனில்,

ஆ. உரை,

புண்ணியப்பதிகள் கண்டும், தீர்த்தங்களாடியும் காடுகளிற்றிரிந்தும் கிழங்கு கனிகளருந்தியும், மலைக்குகைகளிற் போயிருந்தும, பசி நீர் வேட்கை முதலியன வொழிந்தும், நீண்டநாள் சாவின்றி யிருந்தும் தவம்புரியினும, ஏகனுகி இறைபணியினில்லாதார் பிறவியிற் படுவர். இறைபணியியினிற்கும ஞானிகள் பெண்களோடுகூடி இன்பந்துய்த்திருக்கினும், இறைவன் பொருட்டுப்பாதகங்களைச் செய்திடினும், இறைவன் அவற்றைத் தன்பணியாகக் வீடு பேறருள்வன். ஆதலால் புண்ணியங்கள், தவங்கள் புரியினும் ஏகனுகி யிறைபணி நில்லார், மீட்டும் பிறந்து பரிபாகமெய்தி வீடுபேறடைவர். ஏகனுகி யிறைபணிநிற்கும ஞானிகள் உலகின்பில் வீழினும், இறைவன்பொருட்டுக்கொடுவினைபுரியினும் செருக்கும், பற்றுமின்மையால் அவை புண்ணியமாய்ப் பிறப்பின்றிச் சிவத்தோடிரண்டறக் கலக்கும வீடுபேறடைவர் என்க.

---

## பதினேன்றஞ் சூத்திரம்.

---

## சிவப்பேறு—சிவத்தின்பால் அயராவன்பு செலுத்தி நிலைத்தல்:

60 மாணக்கன் விஞ

இவ்வுலகிற் பற்றுடையாருக்கும், இவ்வுலகும், இதிலுள்ள மண், பெண், பொன்னென்ற ஆசைப்பொருள்களும் நிலையற்றனவெனவவற்றின்பால் வெறுப்படைந்த துறவிகட்கும் குணங்குறியற்ற இறைவன்பால் அன்புண்டாவதற்குக் காரணமென்னை ?

**ஆ உரை.**

(1) உயிர்கள் உடலோடுகூடிச் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்பற்றி நுகர்தல், இன்பந்துய்த்தல், அறிதல் முதலியனபுரிய அவற்றோடொன்றுபட்டு நின்றுணர்த்தலும், (2) உயிரறியாதும், புரியாதும் நிகழும் உடலிற் செயல்களும், உலகிற் செயல்களும் நிகழ்த்தலும், (3) மலங்கள் பாகப்படப் படைப்பாதி நிகழ்த்தலும் ஆகிய கைம்மாறு கருதாத நன்றிகளை இறைவன் இடைவிடாதுசெய்தலை ஆழ்ந்து கருதியறியுந் தோறும் அவன்மாட்டு அன்பு பெருகுமாதலால், அவன் செய்ந்நன்றியைக் கருதியறிதலே அவன்பால் அன்புண்டாதற்குக் காரணமாம்.

காட்டக்காணும் கண், உருவத்தைக் காணும்படி அதனோடொன்றுபட்டு நின்று காட்டும் உயிர்போல, அறிவிக்க அறியும் உயிர், காணப்படுபொருளை (விடயத்தை)க் காணும்படி முதல்வன் உயிரோடொன்றுபட்டு நின்றுகாட்டுகின்றனன். இவ்வாறே சுவை ஊறு ஓசை மணம்பற்றி நுகரவும், இன்பந்துய்க்கவும், அறியவும் முதல்வன் புரிதல் கண்கூடாதலின் அதனை இச்சூத்திரத்து "காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம்போற்-காணவுள்ளத்தைக்கண்டு காட்டலின்" என்று கூறப்பட்டுளது. காட்டலின் என்பது அறிவித்தற் பொதுமையைக் குறித்தலாகக்கொண்டு எல்லாவகை அறிவித்தலையும் கொள்ளினும் பொருந்தும். உயிரறியாது உடலில் நிகழும் செயல்களும், மலங்கள் பாகப்பட நிகழும் படைப்பாதி செயல்களும் ஆகிய நன்றிகளும் கருதலளவையானும் உரையளவையானும் அறியத்தக்கனவாதலால் அவற்றை இச்சூத்திரத்து விரித்துக்கூறாது உய்த்துணரவைத்தோதப் பட்டதென்க.

(61) **மாணாக்கன் வினா.**

முதல்வனால் உயிர்காணல் எவ்வாறு நிகழ்கின்றது?

**ஆ. உரை.**

விளக்கொளி கண்ணொளியோடு கலந்து, கண்ணொளியோடுகூட உருவத்தினும் கலந்து கண்ணவ்வுருவத்தைக் காணுதல்போல, அறிவிக்க அறியுமியல்பினவாய உயிர்களும் முதல்வனுணர்வு தம்முணர்வொடு விரவி நின்று தமமோடு கூடச்சென்று விடயத்தினும (காணப்படு பொருளினும்) விரவி நின்றால் விடயவறிவு விளங்கி அதனை அறிகின்றன.

(62) **மாணாக்கன் வினா.**

உயிர்க்கறிவு விளங்குதற்கன்றி, விடயத்தை (காணப்படுபொருளை)ப்பற்றுதற்கும் முதல்வன் துணைவேண்டுமோ வெனில்?

**ஆ. உரை.**

வேண்டும். விளக்கொளி கண்ணொளியோடுகலந்தபொழுது கண்ணிற் காணுமறிவு விளங்கலும், விளக்கொளி கண்ணொளியோடு சென்று (அறியாமை போக்கி) உருவத்தையறியும்படி அதிற் பற்றுவித்தலும்போல, முதல்வ னுணர்வு உயிருணர்வொடு விரவி நின்று அதனோடுகூடச் சென்று (அறியாமைபோக்கி) உருவத்திற் பற்றுவித் துடனின்று உயிர்க்கறிவித்தலும முதல்வனே யாதலின் அவன்றுணையின்றி அறிதலும் பற்றலும் நிகழாவென்க.

(63) **மாணாக்கன் வினா.**

கண்ணுக்குக் காட்டித் தான் காண்கின்ற உயிர்போல, உயிருக்குக் காட்டித் தான் காண்கின்ற முதல்வன், உயிரை அறிவு இச்சைசெயல்களிற் செலுத்தி உயிருடனின்று அறிதல் வேட்டல் செய்தல்புரிதலால அவற்றாலுண்டாம அறம மறங் (புண்ணியம பாவம்)கள் முதல்வனைப் பற்றாவோ எனில்?

ஆ. உரை.

உயிர்களின் அறம் மறங்கள்முதல்வனைப் பற்ரு. கட்டில் (பெத்த நிலையில்) முதல்வன் உயிராய் நின்று காண்டலின் விடயங்கள் உயிருக்காயின வீடுபேற்றில் உயிர் முதல்வனாய் நின்று காண்டலின் விடயங்களெல்லாம உயிருக்கின்ருயின; விடயங்களின் பயன் முதல்வனுக்கு மினருயின. எங்ஙன மெனில், கண்ணுக்கொளிதரும் கதிரவனைக் கண்ணுக்குண் டாம் இன்பதுன்பங்கள் பற்ருமைபோல, ஒன்றினும பற்றின்றி அனைத்தையும் பொதுவகையாலுணர்த்தி யுண ரும் முதல்வனையும் உயிரின் அறம் மறங்கள் பற்ருவென்க.

(64) மாணாக்கன் வினு.

இறைவன் உயிர்களைப் பலவகைச்செயல்களிற் செலுத்தி இயக்கலால் விகாரி (மாறுபாடடைபவன்) ஆகானே வெனில்?

ஆ. உரை.

காந்தத்தாலியக்கப்படும் இரும்பின் விகாரங்கள் காந் தத்துக்கின்ருதல்போல, இயக்கப்படும் உயிர்களின் விகாரங் கள் இயக்கும் இறைவனுக்கின்ரு மென்க.

(65) மாணாக்கன் வினு.

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றங்களை உயிர் உணர்தற் கும், முதல்வனுணர்தற்கும் வேற்றுமை யாதோவெனில்?

ஆ. உரை.

உயிர் ஐம்பொறிகளையும் ஒவ்வொன்ருகப் பற்றியது வதுவாய் நின்றுணரும். ஒன்றைப்பற்றியுணரும் பொழுது பிறிதொன்றை யுணராது. அன்றியும் உயிர் நான் காண் கின்றேன், நான் சுவைக்கின்றேன் என்றிவ்வாறு அகங்

கரித்துத் துய்வினை (பிராரப்தகருமத்தை) யைத்துய்த் தொழிக்கின்றது. முதல்வன் எங்கும் நிறைந்தவனாதலால் எல்லாவற்றையும் பொது வகையால் ஒருங்கே யுணர்ந்து, அவ்வுயிர்களுடனின்று சிறப்பு வகையானு முணர்ந்து, உயிர்கள் துய்வினைகள் துய்த்தொழித்து வினைகள் நீங்கிப் பரிபாக மெய்திப்பேரின்ப மடைந்துய்யச் செய்கின்றனன். ஆதலால் முதல்வனுணர்த்த வுணர்ந்து தானென்றகங் கரித்துத்துய்க்கும் உயிரின் சிற்றுணர்வுக்கும், எல்லா மொருங்குணர்ந்துணர்த்தும் முதல்வன் பேருணர்வுக்கும் வேற்றுமை பெரிதுளதென்க.

(66) **மாணாக்கன் வினா.**

உயிர் முதல்வனை நோக்குழி முதல்வனுணர்வு உயிருணர்வொடு கலந்து தன்னை நோக்குதல, எல்லாமாய்வேறற்று ஒன்றாய் விளங்கும் அவனுக்கு * தற்காண்டல் (ஆன்மாச்சிரயம்) என்ற குற்றத்துக்குட் படாதோ வெனில் ?

**ஆ. உரை.**

படாது. கண் கண்ணாடியினின்று தன்னைப்பார்த்தாற் போல முதல்வன் உயிரினின்று தன்னைப்பார்த்தல் தற்காண்டற் (ஆன்மாச்சிரயம) குற்றமாகாது கண்ணாடி உள்ளவடிவத்தையே எதிர்காட்டுவதன்றிப் பிறவடிவத்தைக் காட்டுதலின்மையின்.

(67) **மாணாக்கன் வினா.**

உயிரறியாதும், புரியாதும் உடலிற் செயல்களும் உலகிற் செயல்களும் பல நிகழ்கின்றன. அவை யாரால் நிகழ்த்தப்படுகின்றன எனில் ?

* தற்காண்டல் = தன்னைப்பற்றுதல்.

## ஆ. உரை. உடலிற் செயல்கள்.

உயிர்கள் உணவுகளை யுட்கொள்கின்றன. உண்டவுணவு இரைப்பையிற்சென்று மசிக்கப்பட்டுப் பலவகைகளாகப் பாகப்பட்டுச் சாரம் செந்நீர் ஊன் கொழுப்பு என்பு மூளை வெண்ணீர் என்ற எழு தாதுப்பொருள் களாக்கப்பட்டு அவை உடலெங்குஞ் சென்று அவற்றால் தோல் நரம்பு பலவகைச்சதை பலவகை யென்பு மூளை மயிர் முதலியன அமைக்கப்பட்டு அவற்றால் எல்லாத் தொழில்களும் நிகழ்கின்றன. அவை ஒவ்வொன்றும் தொழிற்பட்டமைதலை, உயிரறிகின்றதா அல்லது புரிகின்றதா? இச்சாரப்பொருள்கள் போக உணவில் எஞ்சுகின்றவை மலம் சிறுநீர் அழுக்கு எச்சில் கவண் சளி கண்ணீர் வியர்வை கரிவாயு முதலிய கழிபொருள்களாகக் கழிகின்றனவே. உயிர் அவற்றைப் பகுத்து அமைத்துத் தொழிற்படப் புரிகின்றதா?

புகைவண்டி இயந்திரத்தில் அமைந்திருக்கிற குழாய்கள் சக்கரங்கள் தண்டுகள் கம்பிகள் அறைகள் முதலியவற்றில் ஒவ்வொன்றும் அதில் நிகழும் தொழில்களுக்கின்றியமையாதனவெனத் தேர்ந்தமைத்து இயக்குவானொருவனிருந்தியக்கினாலொழிய வவையியங்காமைபோல, மக்களுடலிலுள்ள ஒவ்வொரு சிறுபகுதியும் இஃதிதுசெய்தற்பயத்ததென்று முற்றுமறிந்து செய்து அதையியக்குவானொருவனில்லாவிடில் உடலினுள் வினைகளொன்றும் இயங்காதென பதொருதலை. உயிர் அவற்றை அறியும அறிவும் இல்லதாதலின் அங்ஙனமியக்குவான் உயிரின் வேறாகிய கடவுள் எனப்படுகின்றனன்.

## உடலின் அமைப்புகள்.

உடலிலுள்ள சுவையொளி ஊறு ஓசை நாற்றமாகிய ஐயுணர்வுடைய மெய் வாய் கண் மூக்குச செவி என்ற அறி கருவிகளின் வியப்பான அமைப்பை யாவன் செய்தவன்? அவற்றிலுள்ள சிறுபகுதியையாவது செய்யும் வல்லமையுள் ளானொருவ னுலகிலுளனோ?

சேய்மையிலுள்ள ஒரு மாம்பழத்தைக் காணக் கண்ணும், அடுத்துச்செல்லக்காலும், குனியத்தகுதியாக வளைய இடுப்பும், எடுக்க—பற்றத் தக்க விரல்களோடுள்ள கையும், அதை வாயிலிட மடங்கும் முளங்கையும், உண்ணவாயும், மெல்லப்பல்லும், கீழ்விழாதுகாக்க உதடுகளும், சுவையறிய நாவும், விழுங்க மிடறும், அஃதுட் சென்று தங்க இரைப் பையும், அதின் சாரங்களைப் பகுத்துத் தூய்தாக்கி உடலெங்குஞ் செலுத்தி உடலை வளாக்க ஈரல்-தாமரைக்காய்-செந்நீர்க் குழல்கள்-சிரைகள்-புரைகள் முதலியவற்றை அரிய வன்மையும் இயல்பும் உடையனவாய் அமைத்து நடத்துபவன்யாவன்? அவை தாமே யமையுமா? ஒன்றுக்கொன்றிணங்கி இயங்குதோறும் உண்டாமபயனைக் கருதி நோக்குந்தோறும் அங்ஙனம் செய்பவன்பால் அறிஞர்க்கு நன்றியறிதலும் அன்பும் பெருகுகின்றது.

## உலகிற் செயல்கள்.

உடலிற்செயல்களையும், உடலிற் கருவிகளினமைப்புகளையும் ஆழ்ந்துகருதில் முற்றறிவும் முடிவிலாற்றலும் பேரருளும் உடைய எங்கும் நிறைந்த ஒரு பொருள் அவற்றின் பயனை முற்றுமறிந் தியற்றி யியக்காவிடில், அவை அமைந்தியங்காவென்பது திண்ணம். அவை யிரண்டும், உடல் கருவி (தனு-கரணம்) எனப்படுகின்றன.

அவ்விறைவன் பலவிலக்க வகையான இயங்கியற் பொருள்களாகிய உயிர்கள் தங்கி யிருத்தல், உண்ணல் காண்டல் உயிர்த்தல் உலாவல் இளைப்பாறல்களுக்குரியன வாக மண் நீர் தீ கால்விண் என்ற பூதங்களை யியக்கி, அவற்றின் கலப்பால் உலகங்களைப் படைத்து, உலகங்களிலுள்ள உயிர்களுக்கு உணவு உடை அணிஊர்திகளாகவும், மருந்துகளாகவும், வீடு முதலிய இருக்கைகளாகவுமாய்ப், பயன் றரப்புரிகின்றனன்

மண் நீர் தீ கால் விண் இல்லாவிடில் தவசங்கள, இலை காய் கனி விதைகளுண்டாகா அவை யில்லாவிடில் உயிர்கள் பிறந்து உண்டு வளர்ந்து நிலைபெறா. உயிர்கள் பிறந்து வளர்ந்து அழியாவிடில் அவை துய்வினைகளைத் துய்த்து மல பாகத்தை யடைந்து தூய்மை யெய்தா.

உயிர்களுக்குணவாய் கேப்பை நெல் கோதுமை முதலிய தானியங்கள் புல் பூண்டு செடி கொடி மரம் முதலிய வற்றைப் படைத்தலில் நிகழும் முற்றறிவோடு கூடிய செயற்கரிய செயல்கள் அளவிறந்தன அச் செயல்கள் முற்றறிவும் அளவிலாற்றலுமுடைய வொருவன் அறிந்தியக்கினாலன்றி எங்ஙனம் நிகழும்?

காட்டொன்று கூறில்.

சிறிய ஆலம் விரையில் எவ்வளவு பெரிய மரங் கொப்புக் கிளை இலை பூ காய் கனியுண்டாதற்குரிய வமைப்புகள் நுண்ணிது சுருங்கி யடங்கியிருக்கின்றன. அதன வேர்வழியாய் நீர் பூச்சாரங்களோடு இழுககப்பட்டு அவை மரம் பட்டை இலை பூ பால் காய் கனி விரைகளாயமைபடுகின்றன. உணவுப் பொருள்களில் ஒரு அரிசியிலுள்ள சாரங்க ளனைத்தையும் முற்றும் அறியவாவது. அவற்றிலொன்றை மண் நீர்களிலிருந்தெடுத்து அமைக்கவாவது மக்களால் இயலுமா ?

உலகில் மரஞ் செடிகளும், உடல்களும் உண்டாக்கும் வியப்பான படைப்புகள் இயற்கையென்று கூறல் பொருந்தாது. உடல் செடி முதலியவற்றின் அமைப்புகள் ஒன்றுக்கொன்று இன்றியமையாத பயனுடையனவாய்ப் படைக்கப்பட்டிருத்தலால், மண்ணினின்று பானை வனைவனை யின்றியமையாமைபோல, அவற்றை புணர்ந்துசெய்வானையின்றி உலகில் உடல் செடி முதலியன செய்யப்பெறா.

உலகிலுயிர்களும், நிலையியற் பொருள்களும் தொழிற் படற்குப் பகலையும், ஒளிவெப்பம்நிறம்சாரமுதலியவற்றைச் செய்யக் கதிரவனையும், இளைப்பாறலைச்செய்ய இரவையும், தண்ணொளிசெய்ய திங்கள்முதலியவற்றையும், அவைதோற்றம் வளர்ச்சி அழிவுகளை அடையக் கார்ப்பருவ முதலிய ஆறு பருவங்களையும் அமைத்து, கதிர் மதி உடுக்கள் அண்டங்கள் ஆதாரமொன்றுமின்றிப் பெருவெளியினின்று முறைப்படி சுழன்றியங்க ஒருவனியக்குகின்றனன்.

ஆதலால் உடலிற் செயல்கள், உடலினமைப்புகள், உலகிற் செயல்கள், உலகங்கள் இவற்றை ஆழ்ந்து கருதிப் பார்க்கில் செய்வோனை யின்றிச் செய்வினை யின்மையால் செய்வோன் உளன். அவன் கடவுளெனப்படுகின்றனன்.

(68) **மாணாக்கன் வினா.**

உயிர் வினை (கன்மம்) உடல் இவை ஒன்றுக்கொன்று சார்புடையனவாயிருத்தலால் அவை ஒன்றையொன்று சார்ந்து பிறப்படையாதோ? வெனில்

**ஆ. உரை**

அடையாது. உயிர் உணர்த்த வுணரும் சிற்றறிவது; தானே வினையை யுணர்ந்து அதற்கேற்ற வுடலைச்சாரும்

வலியுடையதன்று. வினை அறிவிலது (சடம்) ஆதலால் தன்னைச் செய்தாரைச் சார்ந்து பயனளிக்க வலியதன்று. உடலும் அறிவிலதாதலால் தானே தோன்றவும், உயிரை யறிந்துசாரவு மாட்டாது என்க

(69) **மாணாக்கன் வினா.**

உயிர் உடல் கன்மம் பயன்றரும் காலமறிந்து சார்ந்து தொழிற்படாவெனில் அவை யெவ்வாறு தொழிற்படு கின்றன?

**ஆ. உரை.**

உயிர்கள் ஆணவம் கன்மம் மாயையென்ற மும்மலங் களுடையன. முற்றறிவும் அளவிலாற்றலும பேரருளு முடைய இறைவன், உயிர்களின் கன்மமலம் பாகப்படுதற் பொருட்டு உலகை யொடுக்கி, ஆணவமலம் பாகப்படுதற் பொருட்டு மீளவுளதாக்கி, அவ்விரண்டுக்குந் துணையாக உடல், கருவி, உலகம், துயப்பு (தனு கரணம் புவனம், போகம்) களை மாயையினின்றுமாக்கித் துய்ப்பித்து ஆணவம கன்மங் களைப் போக்கித்தூய்தாக்கி அருளி யின்பமடைவிக்கின்ற னன். உயிர்கள் பொதிவினை, துய்வினை, வரும்வினைகளையுடை யன. உயிர் ஒருடலைச்சாரும்கால் அவ்வுடலுள்ளவரை துய்க் கத்தக்க பருவமடைந்த துய்வினைகளை யறிந்து இறைவன் உடலொடு புணர்க்கின்றனன். அது துய்வினை துய்க்குங்கால் வந்தேறும் வினைகள் வரும்வினை. முற்பிறவிகளிற்செய்து துய்க்கப்படாமல் எஞ்சியிருக்கும் வினைகள் பொதிவினை.

ஒடுக்க காலத்தில் பூதத்தாக்கப்படுபொருள்கள் (பௌதிகப்பொருள்கள்) அழிந்து பூதங்களாகி அவை யொன்றி லொன்றொடுங்கி கடைசியில் மாயையிலொடுங்கும். அது இறைவன்பாலொடுங்கும். படைப்புக்காலத்தில் இறைவன்

தன்பாலொடுங்கிய உலகுயிர்களை ஒடுங்கியவாறே பகுத்து விரித்து ஒவ்வோரணுவினும் சிவணிநின்று இயக்கிப் படைத்து நடாத்துகின்றனன். ஆதலால் இறைவனொரு வனே உயிர் உடல் கன்மங்களை அறிந்து பொருத்தி நடா த்தி தொழிற் படுத்துகின்றனன்.

(70) **மாணுக்கன் வினா.**

கடவுளன்பென்பது யாது?

**ஆ. உரை.**

இறைவன் உயிர்களை அறியாமை, சிறிதறிகை, தூநிலை (மறைப்பு, சிறுவிளக்கம், பேரறிவு=கேவலம், சகலம், சுத் தம்) என்ற முந்நிலையினும் தாங்கி உடல் கருவி, உலகம், துய்ப்புகளைத்தந்து தாய்போலும், கண்ணிமைபோலும் காத்து உயிரறியாது அளவில் உதவிபுரிந்து, ஆணவங் கன்ம மலங்களை ஒழித்து அறிவை முதிர்வித்துப் பேரின்பம்பெறச் செய்துணைகளை உய்த்துணருந்தோறும், உயிர்க்கவன்பா லன்புபெருகும; அவ்வன்பே கடவுளன்பெனப்படும.கடவுள் உயிர்கட்கு இடைவிடாது துணைபுரிதலால், அவன் மாட் டுயிர்களுக்கிடைவிடாது நன்றியறிதலாலுண்டாம் அன்பே அயராவன்பெனப்படும்.

**காட்டு**

தலையன்புடைய தலைமகன் ஒருவன், தனக்கின்பம் பயந்த தலைமகள் குறித்த இடத்தில் அவள்வருகை நோக்கி யிருக்கும்பொழுது, தனதுசெயல், உறக்க முதலியனவனைத் துந்தாமே மறந்து நீங்க, அத்தலைமகளின்பால் இடைவிடா தன்புசெலுத்தி நிலைத்தல்போல, முதல்வன்பால்உழுவலன்பு செலுத்தும் பேரன்பு அயராவன்பெனப்பட்டது. இதுவே சமாதியென்ப.

(71) **மாணாக்கன் வினா.**

இரண்டற நின்றறிதல் (முதல்வனோடொன்றல்) என்பது யாது?

**ஆ. உரை.**

இரண்டற நின்றறிவது—அத்துவிதமாய் நின்றறிவது. அத்துவிதம் (இரண்டன்மை) என்பது- வேற்றுமைப்பொருள் இரண்டும் தம்முள் ஒற்றுமையாதற்குரிய இயைபு (புணர்ச்சி).

அது, கண் உருவத்தைக் காணுங்கால், உயிரினுணர்வு கண்ணொளியெனத் தானென வேற்றுமையின்றி உடனாய் விரவிநின்று கண்ணுக்குக் காட்டியவதனைக்கண்கண்டதென்றும், கண்ணைவிரவி நின்ற உயிர்கண்டதென்றும் பிரித்தறியவாராது, இரண்டின் காட்சியும் ஒன்றனை யொன்றுவிடாது இரண்டற நிற்றல் (அத்துவிதமாகி நிற்றல்)போல, உயிர் ஒன்றையறியுங்கால் அம்முதல்வனது அறிவலி (சிற்சத்தி) யானது உயிரின் அறிவலி (சிற்சத்தி) யெனத் தானெனவேறின்றி உடனாய் விரவிநிற்க, முதல்வனும் அவ்வாறு விரவி நின்று ஆன்மாவிற்கு அறிவித்த தொன்றனை அவ்வான்மா அறிந்ததென்றும், அதனை விரவிநின்ற தான் அறிந்தானென்றும் பிரித்தறியவாராது, இருவகையறிவும் ஒன்றனை யொன்று விடாது அத்துவிதமாய் நிகழ்வதாம். ஆதலால் முதல்வனோடிரண்டற வொன்றல் என்பது தூநிலையில் உயிர் முதல்வனாய் நின்றுகண்டு அதுவாதல் ஆம்.

(72) **மாணாக்கன் வினா**

முத்திநிலையில் உயிர் சிவத்தோடிரண்டறக் கலக்கின்றதெனில் உயிர்கெட்டு ஒன்றுமோ கெடாது ஒன்றுமோ? எனில்

ஆ. உரை.

உயிர் கெட்டு முதல்வனை ஒன்றுமெனில், உயிர் கெட்ட பொழுது அதற்கிருக்கை யின்மையால் ஒன்றமாட்டாது. கெடாதொன்றுமெனில், கெடாதவழி இரண்டுபொருளாய் நிற்றலால் ஒன்றுதலில்லை. ஆதலால், உப்பு தனது கண்டிப்பு நீங்கியவழி நீரிற்கலந்து ஒன்றுமாறுபோல, உயிர் தனது இயற்கைமலம் (ஆணவமலம் = சகசமலம்) கெட்டொழிந்த வழி சிவன் கழலையொன்றி அவனேயாய் வேறாகப் பிரிப்பிலதாம் என்க.

(73) மாணுக்கன் வினா.

உயிர் அறியாமை, சிறிதறிகை, தூநிலை (கேவலம், சகலம், சுத்தம்) என்ற மூவகை மாறுபா டடைகின்றதோ? வெனில்

ஆ. உரை.

உயிர் மாறுபாடடைதலின்று. அதன் சேர்க்கை மாறுபாடு அதன்மாறுபாடுபோலத் தோற்றுகின்றது. கதிரவன் வைகறையில் முகிற்படலத்துண் மறைந்தும், முகிற்படலம் சிறிது நீங்கிய பொழுது தன்னொளி சிறிது விளங்கித்தோன்றியும், முகிற்படலம் முற்றுமொழிந்தவழி எங்கும் ஒளிபடர்ந்து தோன்றியும் விளங்கல்போல, உயிர் அநாதியே தன்னறிவு மலத்துண்மறைந்து அறியாமை யெய்தியும், பின்னர்க் கருவிகளோடுகூடிப் புலனறிவுற்றுச் சிறிதறிவு விளங்கியும், பின்பு இயற்கை மலத்தை முதல்வனருளாற் பற்றறப் போக்கி விரிந்தவறிவு விளங்கியும் அவன் கழலைப்பொருந்தும் என்க.

(74) **மாணாக்கன் வினா.**

உலகம் இயல்பிலியங்குகின்றது; இயக்குவானொருவன் வேண்டிற்றில்லை? யெனில்

**ஆ உரை.**

செய்வோனையின்றிச்செய்வினையின்மைபோல, உயிரையின்றி உடலிலறிவு செயல்கள் நிகழாவெனினும் உயிர் உடலையறிந்து செய்யவல்லதன்று. ஆதலால் அறிந்து செய்தியக்குவோனையின்றி இயந்திரம் அறிந்தாக்கப்பட்டியக்கப் படாமைபோல உலகை அறிந்து செய்தியக்குதற்கு வல்லானொருவன் வேண்டற்பாலனே என்க.

(75) **மாணாக்கன் வினா.**

எங்கும் நிறைந்து எல்லாமறிந்து அனைத்தையும் நடாத்துங் கடவுளை எப்படிக் காணலாம்?

**ஆ உரை.**

(1) இயந்திரந் தொழிற்படல் கண்டு இயந்திரமியக்குவானொருவ னுளனென்றறிதல்போல, மக்களுடலில் பார்த்தல், கேட்டல், சுவைத்தல், முகர்தல், தொடலறிதல், துய்த்தல் முதலியன நிகழக் காண்டலின், அவற்றை நடாத்தும் உயிர் நம்மைப்புலன்கட்கு முற்படத் தோன்ருவிடினும், அச்செயல்களால் அவற்றைச் செய்யும் உயிர் ஒன்றுளதென்றறிகின்ருேம். ஆயினும் உயிர் கண்ணால் வடிவையன்றி சுவை, ஊறு, ஓசை, நாற்றங்களையும், செவியால் ஓசையையன்றி சுவை, ஒளி, ஊறு, நாற்றங்களையும், நாவால் சுவையையன்றிப் பிறவற்றையும். மூக்கால் நாற்றமன்றிப் பிறவற்றையும், மெய்யால் ஊறன்றிப் பிறவற்றையும் அறிய

வேல்லாது. ஆதலால் உயிர் பொறிகளின் றுணையின்றி யவ்வொன்றையு முணராது. கண் எல்லாவற்றையுங் காணுந் தன்னைக்காணாது; கண்ணாடிசார்ந்தால் தன்னையுங்காணும்.

(2) மின்சாரவலி எங்கும் நிறைந்து பல செயல்களுக்குக் காரணமாயிருந்தும், இயல்பில் புலன்களாலறியப்படாதிருக்கிறது. வெளிப்படுத்து கருவிகளையும், பொருள்களையும் சார்ந்தபொழுது அரிய செயல்வலியும், ஒளிவடிவும் வெளிப்படுகின்றன. அவற்றை அறியாதவன் அவையில்லையென்றுறுதிகூறுவன்.

(3) ஏனைநாற் பூதங்களினும் பரவியுள்ள விண்பூதவியலாகிய பரவொலி எங்கும் நிறைந்து பிரிப்பின்றி (அகண்டமாய்)ப் பரந்துளது. அதனை வெளிப்படுத்தி விளக்குங் கருவி சாரில் பல்லாயிரங் காதத்தில் நிகழும் பேச்சு பாட்டுகளை இவணிருந்தே கேட்கவியலுகின்றது. அஃதறியாதார் ஓராயிரங் காதத்திலொலிக்கும் ஒலியை ஒருவரும் கேட்கவியலாவென்றுறுதி கூறுவர்.

(1) உடலில் நிகழும் செயல் உணர்ச்சிகளால் உயிருண்மை காண்டல்போலவும், (2) மின்சாரவலியாற் செயல்களும் ஒளியுமுண்டாதல் போலவும், (3) பரவொலி விளக்குங் கருவியின் றுணையால் ஓராயிரங்காதத்துக் கப்பாலுண்டாமொலி பாட்டுகளைக் கேட்டல் போலவும், எங்குநிறைந்தெல்லாமறிந்தனைத்தும் நடாத்துங் கடவுளை, உயிர் ஆணவ மலவிருள் நீங்கிக் கதிரொளியாற் கதிரவனைக் காண்டல் போல பதிஞானமாகிய கருவியால் பதியை யறிவன் என்க.

[சிவதத்துவம்-சிவனுக்கிடம் அது பரவொலி (நாதம்) என்றும், சத்தி தத்துவம் அருளுக்கிடம். அது பரவொளி

(விந்து) என்றும் கூறப்படுகின்றன. நாதம் விந்துவிரண்டும் மிக நுண்ணிய (அதிசூக்குமமான) சுத்த மாயையினின்று தோன்றிய தத்துவங்கள்.]*

(76) மாணாக்கன் வினா.

எங்கும் நிறைந்த கடவுளை மக்களனைவரும் காணாமைக்குக் காரணமென்னை?

ஆ. உரை.

உலகிற்பொருள்களைக் காணும் கண் இருளைச் சார்ந்த பொழுது காணாது, ஒளியைச் சார்ந்தபொழுது காண்கின்றதுபோல, உயிர்கள் ஆணவமல விருளைச் சார்ந்து நின்ற பொழுது முதல்வனைக் காணாது, அவ்விருணீங்கி ஞான வொளி சார்ந்தபொழுது முதல்வனைக் காண்கின்றது என்க.

---

* திருநாவுக்கரசர் தேவாரம்.

"அவனருளே கண்ணாகக் காணினல்லால் இப்படியனிந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவனென்றெழுதிக் காட்டொணாதே"

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோனட் டுணர்வுகயிற்றினால்
முறுகவாங்கிக் கடையமுன் னிற்குமே.

## பன்னிரண்டாஞ்சூத்திரம்.

### அணைந்தோர் தன்மை.
### (உண்மையன்பர் ஒழுக்கம்.)

77 **மாணாக்கன் வினா.**

மெய்யன்பர் முதல்வன்பாற் செலுத்தும் இடையறா அன்புக் கிடையூறு எதனால் நிகழும்?

**ஆ உரை.**

உயிர்களின் மும்மலவழுக்கைப் போக்கித் தூயாராக்கிப் பேரின்பமடைவிக்க முத்தொழில் புரியும் முதல்வன்பால் அன்பர் அயராவன்பு செலுத்துழி, அவர் எடுத்தவுடலொழியுங்காறும் உள்ள துய்வினை துய்க்கும்பொழுது ஆணவம் மாயை கன்மமென்ற மும்மலங்களால் இடையிடையே இடையூறுவந்தெய்தும் என்க.

78 **மாணாக்கன் வினா.**

உயிர் அயராவன்பு செலுத்துதற்கு மும்மலங்களால் இடையூறெவ்வா றுண்டாகின்றது?

**ஆ. உரை**

மெய்யன்பர் சிவத்தின்பால் அயராவன்பு செலுத்தி யோகஞ்சார்ந்தும்பழக்க விழுப்பால் நனவு நிலையெய்தியக்கால், அறம்மறங்களின் பயனும் அறம் மறங்களுக்குக்காரணமாயும்பொருந்துகின்ற கன்மமலமும், மண் முதல் மாயையீறாகக்காணப்படுகின்ற உலகனைத்துமாகிய மாயைமலமும், தானென் றகங்கரித்து உலகச்செய்திகளி லுழலப் புரியும் ஆணவமலமும் சார்ந்திடையூறு விளைவிக்கின்றன என்க.

**79 மாணாக்கன் வினா.**

உண்முகப்பட்டு அயரா அன்பு செலுத்தும யோகி, பழக்கவீர்ப்பால் இழுக்கப்பட்டு யோகம் நீங்கி வெளிமுக மெய்தி ஆணவம் மாயை கன்மம் என்ற மும்மலச் சார்பால் உழலின் அதனை நீக்கும் வகை யாது எனில்?

**ஆ உரை.**

மண், நீர், தீ, கால், விண், கதிர், மதி, உயிர் என்ற எட்டையும் தன் வடிவாய்க்கொண்டு அவற்றில் நிறைந்துள்ள முதல்வன் சிவன். உலகிலுள்ள நால்வகைப் பிறப்பும் எழுவகைத் தோற்றமுமாகிய உயிர்ப்பொருள்களும், பூதம் பூதக் கலப்பாலுண்டாகிய உயிரில் பொருள்களும், அவனதுடலும் அவனுயிருமானவன். ஆதலால் கண்முற்படு மனைத்தும் சிவன் என்று கருதி நோக்கும் யோகி, நான்-அவன்-அது என்ற வேற்றுமைகொண்டு உளந்திரியாதொருப்படில் மலச் சார்பால் உழலல் நீங்குவன் என்க.

**80 மாணாக்கன் வினா.**

உலகிற் பொருள்கள், பெயர் வடிவம் செயல் வேற்றுமை பலவுடையனவா யிருக்க, கண்முற்படு மனைத்தையும் ஒருபொருளாம் சிவனாகக் கருதுவதெங்ஙனம் பொருந்தும் எனில்?

**ஆ உரை.**

ஒருவன் பொதியமலையைப் பிறனொருவனுக்குங் காட்டக்கருதி இது பொதியமலை யென்றுகூறி அவன்கண் முற்படும் ஒருபகுதியைக் காட்டில், காண்போன் அவன்காட்டும் ஒருபகுதியைப் பொதியமலையென்று காண்கின்றான். உண்மையில் பொதியமலை ஏறக்குறைய 120 மைல் நீளமும் 40

மைல் அகலமும் 1 மைல் உயரமும் உள்ளது. அதனடங்கலும் ஒரு பார்வையிற் பார்க்கமுடியாது. ஒரு பார்வையில் ஒரு பகுதிதான் காணமுடியும். ஆயினும் காண்போன் கண்ட பகுதி பொதியமலையின் ஒரு பாகமாயிருத்தலால் அப்பகுதியை அப்பொதியமலையென்றறிகின்றான். ஒரு கோபுரம், திமிங்கலம், யானைகளின் ஒரு பகுதியைக்கண்டு அவற்றின் முழுப்பகுதியையும் அவ்வப் பெயராலறிகின்றோம். அது போலவே உலகமடங்கலும் எங்கும் நிறைந்த சிவத்தின் உடலேயாம் என்ற எண்ணம் தடிக்கில் உலகில் எப்பகுதியைக் காணினும் அதைச் சிவமென்றறிந்து பகைவன், நண்பன், நொதுமல், தீயது, நல்லது, சிறந்தது, இழிந்தது என்ற வேறுபாடுகள் ஒழிந்து சிவமுன்னலே தோன்றி நிலைக்கும்.

தெளிவின்பொருட்டுக் காட்டுக்கூறில்:—மலையைப் பார்க்கும்பொழுது மலையின் பகுதிகளாகிய கல், மண் முதலியனவும், அதிலுள்ள மரம், செடி, புல், பூண்டு, விலங்குகள், பாம்பு, பறவை, அருவி, முதலியனவும், கண்ணிற்படினும் அவற்றைத் தனித்தனி அது அதுவாக அறியாது அவையனைத்தையும் அவற்றைத் தன்னிடத்துடைய மலையாகத்தான் காண்கின்றனன்; அவ்வப்பொருளாகக் காண்கின்றிலன். அங்ஙனமே உலகில் எவ்வெப்பொருளைக் காணினும் அவ்வப்பொருளாகக் காணாது அவ்வனைத்தையும்தன்னிடத்துடைய அதாவது தன் வடிவாயுடைய சிவனைக்கண்டு சிவமுன்னல் புரிதல் பொருந்துமென்க.

81 மாணாக்கன் வினா.

உலகிற் கண் முற்படும் பொருளனைத்தையும் சிவவடிவாகக் காணும்படி அறிவைச் செலுத்தும்வழி கூறினும், உயிர்கள் உலகிலுயிர்த்திருக்குங்காறும் வினைதுய்க்குங்கால்

இச்சை செயல்கள் பலவாறு விரிந்து (அயராவன்பு செலுத்தற்கு) இடையூறு விளைத்தலையொழிக்கவும் வழிகளுளவோ? வெனில்,

ஆ. உரை

உயிர் வெளிமுகப்பட்டபொழு தெதிர்ப்படும் மண், பெண், பொன் முதலியவற்றின்சார்பாய் விருப்பஞ்செலுத்தலையும், தெய்வ வுண்மை யுணராதவரிடத்தும் தீநெறியினரிடத்தும் சார்தலையுமொழித்து மண், பெண், பொன் முதலியவற்றைச் சிவனுருக்களாகக் கண்டு, மெய்யன்பர்பாற் கூடிப் பயின்று சிவனடியவர் வேடத்தையும் சிவனிருக்கையாகிய கோயிலையும் உளம் வாக்குடலங்களால் சிவனுகவணங்கில் இச்சை செயல்கள் பலவாறு விரிந்து அயராவன்பு செலுத்தற்கு இடையூறு விளைக்கா வென்க.

82 மாணக்கன் வினா.

தெய்வவுண்மையை யுணராதும் நம்பாதுமுள்ளவரால் வருந்தீங்கென்னை ?

ஆ. உரை.

தெய்வம் இன்றென்பவர்க்கு நன்மை, தீமை, மறுமை முதலியன கோடலில்லை. அவர் தம்மைப் பெரியார், அறிஞர் என்று பாராட்டுவர். முன்னைய அறிவு நூல்களை எள்ளுவர். அக்கொள்கையால் அறமும், அன்பும், ஒழுக்கமும், அடக்கமும், ஒற்றுமையும், பொறுமையும், அரசவன்பும், சட்டநெறியும், பெரியோர் நல்லோர் பாலன்பும் வணக்கமும் இன்றித் தம் மனம்போனவாறு உலகவொழுக்குக்குமாறுன வழிகளில்நடந்து மறமும், ஆணவமும், கொலையும், கலகமும், பகையும், போரும், கற்பொழித்தலும், உல

கெங்கும் பரவுந் தீங்குக்குக் காரணமாவதால் அவரால் எல்லாத்தீங்கும் வருமென்க

83 மாணாக்கன் வினா.

தெய்வம் உண்டென்றுணர்பவர் யார்; அதனாலுண்டாம் பயன் யாது?

ஆ உரை.

புகைவண்டியினரிய கருவிகளினமைப்பையும் செயல்களையும் உய்த்துணரில் அவற்றை அறிந்தியற்றும் அறிஞனொருவனுளனென் றறிதல்போல மக்களுடலி னமைப்பையும் அதில் நாமறியாதும் புரியாதும் நிகழும் அரிய செயல்களையும் நன்கு கருதி நோக்கி அவற்றைப்படைத்து நடாத்தும் முற்றறிவும் அளவிலாற்றலுமுடைய ஒரு பொருளுண்டென்று தெளிபவர் தெய்வம் உண்டென்பவர். அவர்க்கெல்லா நலமும் இன்பமுமுண்டாம். அஃதன்றியும், அவர் உலகில் அமைதி, நன்மை, ஒழுக்கம். ஒற்றுமை, தீங்குக்குப் பயப்படல், தெய்வ வன்பு, அறமுதலிய நலவளர்ச்சிகளுக்குக் காரணமும் துணையுமாவர் என்க

84 மாணாக்கன் வினா.

சிவனடியார்பா லன்புசெலுத்தல் எங்ஙனம் சிவன்பாலன்பு செலுத்தலாகும்.

ஆ. உரை

விருப்பமிக்க ஒருமாதின் உறவினர்பா லன்புசெலுத்தல் அம்மாதின்பா லன்புடைமையை விளக்கல்போல. உடல் பொருளாவி மூன்றையும் சிவன்பொருட் டாக்கிய வடியவர்பாலன்பு செலுத்தல் அவரையாட்கொண்ட சிவன் பாலன்புடைமையை விளக்கும் என்க.

85 **மாணாக்கன் வினா.**

சிவனன்பரைக் கூடிப் பயிலலால் வரும் பயன் யாது?

**ஆ. உரை.**

தெய்வம் இன்றென்பவர், சூதாடிகள், கள்வர், கொலைஞர், கட்குடியர், கொள்ளைக்காரர், வழிப்பறிகாரர், பிறர்மனை வவ்குவார், விலையாதர் வேட்கையர், வஞ்சகமிகுவார், அறங்களை எள்ளுவார் முதலிய தீயரோடு சேர்ந்து பழகில் அவ்வச்செயலினராதல்போலச் சிவனன்பரைக் கூடிப் பயிலில் கடவுளன்பும், அறம், தவம், இரக்கம், அருள் முதலிய நற்குணங்களனைத்தும் பெற்றுய்யும் பயனடைவார் என்க.

86 **மாணாக்கன் வினா.**

உலகில் எல்லாப் பொருள்களிலும், உயிர்களிலும் சிவம் நிறைந்திருக்க மெய்யன்பர் திருவேடத்தைச் சிவமாக வணங்கச்சிறந்து கூறுதல் எற்றுக்கு? என்னில்

**ஆ உரை**

சிவ பரம்பொருள், எங்கும் நிறைந்தெல்லாப் பொருள்களையும் உயிரையும் தன் வடிவாயுடையதாயினும், மெய்யன்பர் திருநீறு கண்டியாகிய சிவவடிவங்கள் பூண்டிருத்தலானும், சிவத்தைத் தம்முளத்தளியிலிடையறாது விளங்கக் காண்டலானும், சிவன் யானெனும் முன்னலினாற் சிவமே யாதலானும், உண்மலரிலொரு குறியிற் சிவத்தைக் கூடலானும், குறியுந்தானும் இன்றாகி நிற்றலானும், சிவமேயாய்நிற்கும் யோகுடைய அடியவர் உளங்கவர்யோகி Mesmeriser) மாணவன் (Subject) உளஞ் செயல்களைத் தன்வயப்படுத்தியியக்கல்போலத் தமக்கன்பு செய்வாரைச் சிவமுன்னலில் முற்றிச் சிவமேயாய் நிலைக்கச்செய்வர். ஆதலால் மெய்

யன்பர் திருவேடத்தைச் சிவனாக வணங்கச் சிறந்து கூறிய தென்க. * 1

87 மாணாக்கன் வினா.

திருநீறு கண்டிகளைச் சிவவேடமாக அணிதல் எதன் பொருட்டு? எனில்

ஆ உரை

'நீறு, என்பது உலகிற் பொருள்களனைத்தும் தம்பிய லும் வடிவும் ஒழிய நீற்றப்பட்ட சாம்பல் ஆதலால் நீறு உலகிற் பொருளனைத்தையும் அழித்து முடிவில் எஞ்சி நிற்கும் பொருள் தீவண்ணனாகிய சிவம் என்ற உண்மையைக் குறிக்கின்றது.

'கண்மணி' (கண்டி) சிவன் எங்கும் கண்ணிற் கருமணி போல் நின்று காண்கின்றனன் என்று குறிக்கின்றது. ஆதலால் அனைத்தையும் அழித்து நிலைத்திருக்கும் சிவத்தை நம்பலைக்குறிக்கும் பொருட்டு நீற்றையும், அவன் எங்கும் கணாய் நின்று கண்டருளலைக் குறிக்கும் பொருட்டு கண் மணியையும் சிவநெறி சார்ந்தார் சிவவேடமாக வணிகின் றனர் என்க.

நீறு பசுமலச் சாம்பல் பசுவாகிய உயிரின் மும்மல வழுக்கை நீற்றியாள்பவன் சிவன் என்றறிதற் கறிகுறியாக நீறணியப்படுகின்றதெனினும் பொருந்தும்.

---

* 1 படமாடக் கோயிற் பகவற்கொன்றீயி
னடமாடக் கோயினம்பர்க் கங்காகா
நடமாடக் கோயினம்பர்க் கொன்றீயிற்
படமாடக் கோயிற் பகவற்கதாமே (திருமந்திரம் 1857)
ஆறிடும் வேள்வியரு மறைநூலவர்
கூறிடுமந்தணர் கோடிபேருண்பதில்
நீறிடுந்தொண்டர் நினைவின்பயனிலை
பேறெனிலோர் பிடிபேறதுவாகுமே. (திருமந்திரம் 1861)
வித்தகமாகிய வேடத்தருண்டவூண்
அத்தனயன் மாலருந்திய வண்ணமாம்
சித்தந்தெளிந்தவர் சேடம்பருகிடின்
முத்தியாமென்று நம்மூலன்மொழிந்ததே. (திரும. 1865)

ஆச்சாணி நீறு, அனைத்தையும் அழித்தீதேவை நினைப்பூட்டி மருந்தாய்க் காக்கின்றது. என்பாருமுளர். *2

88 மாணுக்கன் வினு

சிவத்தளிகளில் சிவக்குறி, அம்மை என்ற இரண்டுவடிவங்கள் சிறந்தன. அவற்ரோடு அடியார்க்குக் காட்சிதந்த இருபத்தைந்து வடிவங்களும் பிறவுமுள்ளன. அவை ஒன்றையுங் குறியாது சிவத்தளியைச் சிவனாகக்கண்டு வழிபடுகவென்றது எற்றுக்கெனில் ?

ஆ உரை

வழிபடுவோர் அறிவுநிலைக்குத் தக்கவாறு உருவ வழிபாடு, அருவ வழிபாடு, உருவருவ வழிபாடு, மீவழிபாடு என சிவவழிபாடு நான்காம். அவற்றில் உருவ வழிபாடு முதல் நான்கும் ஒன்றுக்கொன்றுயர்ந்தன. இவண் உருவ வழிபாடு கூறப்படுகின்றது. அது ஒரு பொருளிற் கருதி வணங்கல் கண்டவழிபாடென்றும், வரையறையற்றுப் பல பொருள்களிற் கருதி வணங்கல் அகண்ட வழிபாடென்றும் இருவகையாகப் பகுக்கப்படுகின்றது.

---

* 2 சமயத்திலுள்ளது நீறு, முனிவரணிவது நீறு,
பத்திதருவது நீறு, அந்தமதாவது நீறு,
சுத்தமதாவது நீறு, பாவமறுப்பது நீறு.
(சம். திருநீற்றுப் பதிகம்)

கங்காளன் பூசுங்கவசத்திருநீற்றை
மங்காமற் பூசிமகிழ்வீரேயாமாகிற்
றங்காவினைகளுஞ் சாருஞ்சிவகதி
சிங்காரமான திருவடிசேர்வரே. (திருமந்திரம் 1666)

பூதியணிவது சாதனமாதியிற்
காதணி தாம்பிரகுண்டலங் கண்டிகை
யோதியவர்க்கு முருத்திரசாதனந்
தீதில்சிவயோகி சாதனந்தேரிலே (திருமந்திரம் 1662)

காட்டு. ஒருடலில் நிறைந்தியங்கும் உயிரையே மனிதன் என்றறிகின்றோம். குட்டை, நெட்டை உயிருக்கில்லாவிடினும் உடல் பற்றிக் குட்டையன், நெட்டையன் என்றறிகின்றோம். அறிவு, அறியாமை உடலுக்கின்றாயினும் உயிர்பற்றி அறிஞன், அறிவிலன் என்று உடலைச் சுட்டியறிகின்றோம். உயிர் மெய்,வாய், கண் மூக்குச் செவி என்ற பொறிகளின் வழியாய்ச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றங்களை அறிகின்றது. உயிர் உடலெங்கும் நிறைந்து நான் பார்த்தேன், நான் சொன்னேன், நான் பேசுகிறேன் என்று ஒற்றுமை பற்றிக்கூறுகின்றது. உயிர் நிறை பொருள் (வியாபகம்). உடல் நிறை யிடம் (வியாப்பியம்). உயிரையின்றி உடல் இயங்காது. உடலையின்றி உயிர் ஒரு தொழிலையுஞ் செய்யாது. ஓர் உயிராகிய ஆசிரியன் காலடிகளை மாணாக்கன் நோக்கிக் கீழே விழுந்து வணங்குகின்றான். மாணாக்கன் பார்த்தது நகம் விரல் தோல் நரம்பு எலும்பு ஊன்களோடு கூடிய காலை. வணங்கியது அதன் வழியாய் ஆசிரியனை. மாணாக்கன் தோலையாவது, நரம்பையாவது,விரலையாவது வணங்கவில்லை. அவற்றில் நிறைந்துள்ள ஆசிரியனாகிய உயிரையே வணங்குகின்றான். ஆசிரியனும் காலிற்றன்னைக் கருதி வணங்கிய மாணாக்கன் தன்பாலன்புடையனாகி வணங்கியதற்கிரங்கி யருள்புரிகின்றனன். மாணாக்கன் ஆசிரியன் முகத்தைப்பார்த்து வணங்கில், ஆசிரியனாகிய உயிர் முகமா, கண்ணா, நெற்றியா, மூக்கா, உதடா, வாயா, கன்னமா? அவைகளொன்றுமல்ல. அவற்றில் நிறைந்துள்ள உயிரே ஆசிரியன். அவன் தான் நிறைந்துள்ள வடிவத்தைத் தன் வடிவாகக் கருதிக் கும்பிட்ட மாணாக்கன் பால் அன்பு வைக்கின்றனன். இத்தகை வணக்கத்தை உலகிலுள்ள எல்லா நாட்டாரும் எல்லாச் சமயத்தவரும்

எல்லா மொழியினரும், எவ்வகைத் தெய்வவணக்கத்தையும் ஒவ்வாத ஆழ்ந்த ஆராய்ச்சியில்லாத தான்றோன்றிகளும், பெரியரைச் சிறியர் காணும்பொழுது புரிகின்றனர். பிறர் புரிதலை யேற்றுமகிழ்கின்றனர்.

அவ்வாறே கடவுள் எங்கும் நிறைந்தவர். மண், நீர், தீ, கால், விண், கதிர், மதி, உயிர் என்ற எட்டு வடிவங்களிலும், ஐம்பூதக் கலப்பாலுண்டா மெல்லா வடிவங்களிலும், நிறைந்து நின்று அவற்றை இயக்குகின்றனர். ஆதலால் எல்லாவுலகங்களும் அவற்றிலுள்ள வெல்லாப் பொருள் களும் கடவுள் வடிவம். கடவுள் உலகனைத்துக்கும் உலகி லுள்ள உயிர்களுக்கும் உயிர். எல்லா வடிவங்களும் கடவுள் உடலாயுண்மையால் அவனை உலகிலெல்லா வடிவத்திலும் வணங்கலாம். நம் கண் முற் காணும் கதிர், மதி, உடுக்கள் மலை, கற்கள், மரங்கள், தீ, நீர், மனிதர், விலங்குகள், பறவைகள், உருக்கள், ஓவியங்கள் முதலியவனைத்தையும் கடவுளாக நினைந்து வழிபடலாம். அவ்வணக்கம் கல்லைச் செம்பை மரத்தை உருவத்தை வணங்கியதாகா. மக்கள் உடலில் எதை நோக்கி வணங்கினும் வணங்குவான் அவற்றினிறைந் துள்ள உயிரைக் கருதிச் செய்வதால் அவ்வணக்கம் உயிருக் கேயாகின்றமைபோல எவ்வடிவத்தில் கடவுளைக் கருதிவ ணக்கஞ்செய்யினும் அவ்வணக்கங் கடவுளுக்கேயாகின்றது.

## * உலகுருவிறை (விராட்பிரமம்)

எல்லாப்புவனங்களையும் தனதுருவாகவும், எண்பத்து நான்கு நூறாயிரம் வகை உடல்களையும் தன்னுறுப்புகளாக

---

* உலகமே யுருவமாக யோனிகளுறுப்பதாக,
விலகுபேரிச்சா ஞானக்கிரியையுட் கரணமாக,
வலகிலாவுயிர்ப்புலன் கட்கறிவினை யாக்கிஐயர்து,
நலமிகுதொழில்களோடு நாடக நடிப்பனுதன்.
(சிவஞானசித்தியார் சுபக்கம் சூ-5 பா-7.)

வும், விருப்பு அறிவு வினை (இச்சாஞானக்கிரியைகளை) உட்கருவிகளாகவும் கொண்டு, அடங்கலுயிர்கட்கு மறிவுக்கறிவாய் நின்றுணர்த்திப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகியவைந்தொழில் புரிந்து உயிர்களின் மலங்களை நீக்கி யின்பருள்கின்ற விறைவனை வணங்கும் கட்டிடத்துக்குக் கோயில் என்று பெயர். கோ = இறைவன், இல் = இருக்கும் அல்லது (வணங்கும்) இடம். கடவுள் எங்கும் நிறைந்தவன். எல்லாமவன் வடிவாததால் திருக்கோயிலும் அவன் வடிவமே.

## சிவன் வடிவம், உறுப்பு, அணி, படைமுதலியன.

பல நூறுவடிவங்களமைந்துள்ள திருக்கோவிலின் சிகரத்தை பருஉக்குறி (தூலலிங்கம்) ஆகவும், கோவிலினுள்ளிருக்கும் சிவக்குறியை நுண்குறி (சூக்குமலிங்கம்) ஆகவும், ஊட்டிடக் குறியை பலிபீடம் (பத்ரலிங்கம்) ஆகவும் வழிபட நூல்கள் கூறுகின்றமையால் சிவனுக்குரிமை வடிவமொன்று மின்றென்று தெளிவாகின்றது.

சிவன் குணங்குறியும் உருவு மற்ற பரம்பொருள். எண்ணி வணங்குதற் பொருட்டு அருளே வடிவாகவும் 1. இயக்கல் (ஈசானன்) 2. ஆளல் (தற்புருடன்) 3. உடன்றோன்றல் (சத்யோசாதன்) 4. நடுக்குவித்தல் (அகோரன்) 5. ஒடுக்கி யாக்கல் (வாமதேவன்) என்ற வல்லமைகளை ஐமுகங்களாகவும், விருப்பம் செயல் ஞான வலி (இசசாசத்தி கிரியாசத்தி, ஞானசத்தி) களுடையானென்பதை முக்கண்களாகவும், ஞானவடிவாதலைச் சிகையாகவும், முற்றறிஞனுதலைமதிசூடலாகவும், ஞான நூற்பொருள் தாமே

என்பதைப் பூணூலாகவும், அறம் பொருளின்பம் வீடுகளைக் கூறும் மறைநான்கின் பொருள் தானென்னலை நாற்கா லுடைய மான்படையாகவும், அமைதி கிளர்ச்சி மடி (சத்வம்ரசசுதமசு) என்ற முக்குணங்களுக்குமப்பாற் பட்டவ னென்பதை முச்சூலமாகவும், நம்பினோரைக் காத்தல், உண்மையென்றுணர்த்தலை மழுத்தாங்கலாகவும், பிறவி வேரையறுப்பவனென்னலை வாளாகவும், ஒருவராலும் அழி க்கப்படாதவனென்னலை வைரப்படையாகவும், ஞானக்கருவி கன்மக்கருவிகள் பத்தும், பருஉப்பூதம், நுண்பூதம் பத் தும் பூதசாரம் ஐந்தும் ஆகிய இருபத்தைந்து தத்துவங் களையும் காட்டி நாடாத்தும் மாயாவடிவன் தானென்னலை நாண் (பாசம்) ஆகவும், தூய்து தூய்தல் தொகுதி (அத் துவா) களை நடாத்தும் இயல்பினன் தானென்பதை உடுக் காகவும், குண்டலிவலியின் விரி வொடுக்கங்களால் பொழிற் றோற்றவொடுக்கங்களைச் செய்வோனென்பதைப் பாம் பணியாகவும், தான்பரவொலி வடிவாயுள்ளவனென்பதைக் கண்டாமணியாகவும், ஓங்காரப் பொருளாயுள்ளவர் தாமா தலைக்கொன்றை மாலையாகவும் கற்பித்து வணங்கியுள மொருப்பட்டுய்யுமாறு சைவநூல்கள் பணித்தன.

அவற்றை யாழ்ந்துணரில் சிவத்தின் உருவம் அருள். அவன் முகம் கை கால் முதலிய உருப்புகள் அருள். அவன் படைகளும், அணிகளும், செயல்களும், இயல்களும் அருள். உண்மையில் அவனுக்கொருவடிவமும் படையும் அணியும் இல்லவே இல்லை. ஆதலால் உலகிற்கண்முற்படும் பொருள் களனைத்தினும் அவனைக் கருதிவணங்கல் உருவவழிபாடே யாம். அதில் பலபொருள் வடிவங்களைத் தன்னிடத்துடை யமலை, வான், பெருங்கட்டிடம், சோலை, பூந்தோட்டம், தேர்,

பூத்துக்காய்த்தமரம், சிவத்தளி முதலியவற்றில் சிவத்தை வணங்கல் அகண்ட வழிபாடாகின்றது. ஆயினும் சிகரத்தைச் சிவப்பரூஉக்குறி (தூலலிங்கம்) ஆகவும், அதனுள்ளிருக்கும் சிவக்குறி (சூக்குமலிங்கம்) ஆகவும் பல்காற்கண்ட பழக்கமிகையால் சிவத்தளியின் பால்மதிப்பும், நம்பிக்கையும், அன்பு மிகுந்திருத்தலும் பிறவற்றில் அவையின்மையும் இயல்பாம். அன்றியும் தளியுள்ளுள்ள சிவக்குறி காண்டலுக்கு இரவு பகல் அமையம் முதலிய விளக்குகளுள்ளன. தளியைச் சிவமாகக் காண்டற்கு அவை சிறிதுமின்றியவருக்கும் எளிது கிடைக்கத்தக்கதாயும், உளம் பற்றற்குரியதாயும் உண்மையால் சிவத்தளியைச் சிவமாக வழிபடுக என்று சிறந்து கூறிய தென்க,

**89 விஞ** சிவவழிபாடு நான்கு. அவற்றில் உருவவழிபாடு—உருவங்களிற் சிவத்தை வணங்கல். அருவ வழிபாடு—வடிவற்றதாகிய கால், விண், விந்துநாதங்களில் வணங்கல். அருவுருவ வழிபாடு பல சிவ வடிவங்களையும் பூசைப்பொருள்களையும் (உள்ளத்தாற்) கற்பித்து வணங்கல். (அந்தரியாகம்) என்ற மூன்று வழிபாடுகளும் பொருத்தமாய்த் தோன்றுகின்ற சிவ வணக்கமாகின்றன. நான் சிவன் என்றுகருதிப் பயிலல் எங்ஙனம் மீவழிபாடாகிய சிவ வணக்கமாம் எனில்?

**ஆ. உரை.** சிவனெங்கும் நிறைந்து எல்லாந் தன்வடிவாயுடைய எண் (நினைப்பு) வடிவனுதலால் முன் வழிபாடுகளில் கதிரை, மதியை, கல்லை புல்லை, உருவைச் சிவமென்றும், காற்றை, விண்ணை, உயிரை, பரவொலியை, பரவொளியை(நாதம் விந்துகளை) சிவமென்றும் உமை தலைவனுக எண்ணவடி

வைச் சிவமென்றும் வணங்கும் அவையெல்லாம் வணங்கும் உயிரில் வேறாகியவற்றையும், பிறவுயிரையும் சிவமாகக் கருதி வணங்கும் வழிபாடாம். சிவம் எங்கும் நிறைந்துளது. உயிரினும் நிறைந்துளது. ஆதலால் வழிபாடியற்றும் உயிரில் (தன்னில்) சிவத்தைக்கருதி உயிரைச் சிவமாக எண்ணி முன்னலும், அதாவது (நான் சிவன்) (அகம்பிரமாஸ்மி) என்று உன்னலும் சிவ வணக்கமேயாம் என்க.

**90 வி௱.** பிறவற்றில் வணங்கல் அதாவது சிவத்தைத் தன்னில் வேறாய் வணங்குதல் வணக்கமாமன்றித் தன்னைச் சிவமாய் எண்ணல் (தியானித்தல்) வணக்கமாகாதாதலின் அதைச் சிறப்பித்து மீவழிபாடென்ன லெங்ஙனம் பொருந்தும்? எனில்

**ஆ. உரை.** சிவவழிபாடு பிறிதில்வணங்குவது, தன்னில் வணங்குவதென இருவகை. உலகிற் பொருளனைத்தினும் தான் சிவத்தைக்கருதி வணங்குவது பிறிதில் வணக்கம். எல்லா வணக்கங்களுக்கும் அறிவிச்சை செயல்களுக்கும் இன்றியமையாத வினைமுதல் தானென்றஉயிர் ஆதலால் உலகில் உயிரிற் சிறந்த பொருளின்று. அவ்வுயிரில் சிவத்தை வணங்குதல் சிறந்ததாகலின் அது மீவழிபாடாம். பிறிதில் வணங்கும் வழிபாடுகள் அளவில் நலந்தருவனவும் மீவழிபாட்டுக்குச்சிறந்தவழிபும்படிகளும் ஆயினும் அஃதியற்றுங்கால் அறிவிச்சை செயல்களின் வீற்றும் அவற்றின் வழியாய் ஆணவாதிகள் பல்கற்கு இடையும் உண்டாகின்றன. மீவழிபாட்டில் உயிர் தன்னில் சிவத்தை எண்ணிவணங்கி நான் சிவன் என்ற முன்னலில் முற்றி அயராவன்பு செலுத்திப் பின் நான் என்பது மொழிந்து உப்பு அப்பிற்கலந்த

பொழுது தன் கண்டிப்பு நீங்கி அப்பாய் அவிர்வதுபோல உயிர் சிவத்தோடு கலந்து தன்னியல் நீங்கிச் சிவமேயாய் நிலைத்துப் பேரின்பந் துய்த்தவிர்கின்றது.

ஆதலால் தன்னைச் சிவமாயெண்ணிச் செய்யும் வணக்கம் மீவழிபாடாமெனபது முற்றும் பொருந்தும் என்க.

19 வினா. சிவனேயாய் பேரின்பந்துய்க்கு முயிர் மேலும் சிவவழிபாடியற்ற வேண்டுங்கொலோ? வெனில்

**ஆ உரை** தன்னியலையும் சிவத்தினியலையும் சிறிதுமுணராது குருடாயிருந்த அளவில் விளியவுயிர்க்கு அளவில் லுடல்தந்து பலவாற்றானும் தெரிவித்துணர்த்தி அளவில் லுயரிய தானும்படி செய்த சிவத்தின் மிகப்பெரிய நன்றியைச் சிவமேயாய்ப் பேரின்பந் துய்க்குமுயிர் முன் மறந்திருந்ததுபோல மறந்து அயராவன்பு செலுத்தாதிருக்குமேல் அதற்குத் தீர்க்கரிய பெருங்குற்றஞ்சாரும்: ஆதலால் சிவவழிபாடியற்றல் அவ்வுயிர்க்குக் கடனும். அவ்வுயிர் சிவந்தானுய்ப் பேரின்பத்துய்க்கினும் தன்வயத்தன தன்றாய் முதல்வன் றணையை யின்றியமையாததாய் உள்ள அடிமையே ஆதலானும் சிவன் தன்வயத்தனாய் அனைத்தையும் இயக்கி யருள்பவனாகலானும் எக்காலும் உயிர் சிவவழிபாடியற்றல் வேண்டும் என்க.

92 வினா. சிவமேயாய்ப் பேரின்பந்துய்க்கப் பெற்றும் உயிர் தன் வயத்தனாகாத தெதனால் எனில்?

**ஆ உரை.** சிவன் அறிவு; உயிர் அவன் அருளைச்சாருமறிவு. சிவன் பிறப்பாதிபோக்கி ஞானம் வீடுதரும் அறிவு; உயிர் அவற்றையடையும் அறிவு. சிவன் தானே அறியும் அறிவு; உயிர் அறிவிக்க அறியும் அறிவு. சிவனெங்கும்நிறைந்தெல்லாமறியு

முற்றறிவன். உயிர்பற்றிய உடலில் நிறைந்து உணர்த்த வுணருஞ சிற்றறிவது.

சிவம் இரதகுளிகையையும், உயிர் செம்பையுமொத் தன. இரதகுளிகை செம்பின் களிம்புபோக்கிப் பொன் ளுக்கியொளிர் விப்பதுபோல, சிவம் உயிரின் ஆணவம் மா யை கன்மமென்ற மும்மலங்களைப் போக்கித் தூய்தாக்கித் தன்னின் பந்துய்ப்பிக்கின்றது.

உயிர் உலகில்வாழும் போழ்தும் சிவயோகம் பயிலும் பொழுதும் உண் முகப்பட்டு ஒன்றுபட்டின்பந்துய்க்கும் பொழுதும் வெளிமுகப்பட் டுயிர்வாழும் பொழுதும் எப் போழ்தும் உடல் அந்தத்து இறையோடொன்றுங் காறும் சிவத்தினைந் தொழிற்குட்படல் இன்றியமையாத தாகலின் தன்வயத்ததன்று. சிவன் தன்வயத்தன். உலகுயிர் சிவன் (கடவுள்) வயப்பட்டன.

ஆதலால் உயிர் சிவத்துய்ப்பு (சிவாநுபவம்) ஒன்றி னுக்கேயுரியது. என்றுந் தன்வயத்தனுகாதது என்க.

**93 வினு** நாம் கொள்ளத்தக்க நூல்கள் எவை?

**ஆ உரை.** வினைக்கட்டில்லாத முற்றறிஞனுகிய முதல் வன் கண்டது முதனூலெனப்படும். 1.

---

1. "வினையின் நீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும்"
(தொல்காப்பியம் மரபியல் சூத்திரம் 94.)

"அவிழுமனமு மெம்மாதியறிவுந்
தமிழ் மண்டலமைந்துந் தத்துவமாமே."
(திருமந்திரம்.)

வேதம் (பொது), ஆகமம் (சிறப்பு) என முதனூல்கள் இருவகைப்படும். அவை முதற்கழக காலத்தில் தமிழி லிருந்தன. சிவனே அவற்றைச் செய்தருளினன். 2

அவற்றில் தமிழ் மறைகள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருள்களும் உலகிலுள்ளாரறிந்து ஒழுகி யுய்தற்குக் கூறப்பட்டன. 3

---

2. "வேதமோடாகமம் மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென் றுள்ளன
நாதனுரையவை" (திருமந்திரம்.)

வேதம் = (மறை) வேவுகூறுவது, வேவு = உளவு.
மறை = மறைவான (இரகசியமான) பொருள்களைக் கூறுவது.

ஆகமம் = ஆ = பசு, க = கடவுள், மம் = மலம் என்ற முப்பொருள்களை விளக்குவது ஆகமம்.

3. "அழிந்த சிந்தையந்தணர்க் கறம் பொருளின்
பம் வீடு மொழிந்தவாயான்"

"தூயநான் மறைகணின்கும் பாடினு ரொருவர்
போலும்"

"மறையிலங்கு தமிழ்வல்லார்"

"மறைவளருந் தமிழ்மாலை"

(சம்பந்தர் தேவாரம்.)

"தெய்வமறைத்த செழுந்தமிழ்ப் பாடலும்"

(கல்லாடம்.)

"சதாசிவந் தத்துவ முத்தமிழ் வேதம்"

(திருமந்திரம்)

"விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்"

"அன்றாலின் கீழிருந்தங் கறஞ்சொன்னானை"

(திருநாவு-தேவாரம்.)

தமிழ் மறைக்கு வழிநூலாக இப்பொழுது வழங்கிவருவன திருக்குறள் மறையும், சமயாசிரியர் மூலம் வெளிவந்த தேவார திருவாசகத் திருமறைகளும் ஆம்—4.

சிவநெறியையும் ஒழுக்கங்களையும் யோகஞானங்களையும் விளக்கச் சிவனார் சிவாகமங்களை வெளியிட்டனர். அதற்கு மாவேடு (மகாதந்திரம்) என்றும் பெயர்.—5

---

4. "நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா [நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த— [நூன்முறையை
வந்திக்கச்சென்னி வாய்வாழ்த்துகநன்னெஞ்சஞ்
சிந்திக்கக் கேட்கச்செவி."
(கடைச்சங்கத்திருந்த உக்கிரப் பெருவழுதியார்.)

"தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானு வறமுதலா வந்நான்கு—மேனோருக்
கூழினுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழி யுலகென்னாற்று மற்று."    (நக்கீரர்.)

"ஆயிரத்து முந்நூற்று முப்பதருங் குறளும்
பாயிரத்தினோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ? மன்னுதமிழ்ப் புலவ
ராய்க் கேட்க வீற்றிருக்கலாம்."  (நத்தத்தனார்)

5. "மன்னுமாமலை மகேந்திர மதனிற்
சொன்னவாகமந் தோற்றுவித்தருளியும்"
(திருவாசகம் கீர்த்தித்திருவகவல்)

"மாவேட்டாகிய வாகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத்திருந்
துற்றவைம்முகங்களாற் பணித்தருளியும்,"
(திருவாசகம் கீர்த்தித்திருவகவல்)

5. " மாலாங்கனேயிங்கு யான்வந்த காரணம்
நீலாங்கமேனி நேரிழையா ளொடு
மூலாங்கமாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந்தேனே "

(திருமந்திரம்.)

" அண்ணலருளாலருளுஞ் சிவாகமம்
எண்ணிலிருபத் தெண்கோடி நூறாயிரம்
விண்ணவரீசன் விழுப்பமுரைத்தனர்
நண்ணிநின் றப்பொருளேத்துவனானே."

(திருமந்திரம்).

" சிவனவன் வைத்ததோர் தெய்வநெறியில்
பவனவன் வைத்த பழவழிநாடி
சிவனவ னென்ப தறியவல்லார்கட்
கவனவ னங்குளதாங் கடனாமே."

(திருமந்திரம் )

" சர்வஜ்ஞ : பரிபூரணஸ்ச சிவோஜ்ஞேயச்சிவாகமே"

(இ-ள்.) முற்றறிஞனு மெங்குநிறைந்தவனும் ஆகிய சிவன் சிவாகமத்திலறியற்பாலன்.

(சிவபுராணம். வாயுசங்கிதை. உத். அத். 12. சு. 21.)

"சிவாகமோக்தம் யத்ஜ்ஞாநம் தத்அத்ராஜ்ஞாநமுச்யதே"

(இ-ள்.) சிவாகமத்தில் எந்த ஞானம் கூறப்பட்டதோ அது இவண் ஞானம் எனப்படுகின்றது.

(வாயுசம். உத். அத்8.3சு8.).

அவற்றுக்குவழி நூலாக இப்பொழுது வழங்கிவருவன திருமந்திராகமமும் தமிழ்ச்சிவாகமத்தின் மொழிபெயர்ப்பாகிய வடமொழிச் சிவாகமங்களும் ஆம். 6

---

6. "தந்திரமொன்பது சார்வு மூவாயிரஞ்
சுந்தரவாகமச் சொன்மொழிந்தானே."

(திருமந்திரம் பாயிரம்)

"சாதுப்பிருஷ்டம்ஹி யுஸ்மாபிஸ் சுருணுத்வம்
ஸம் சிதவ்ரதா காமிகாக்யாந் மஹாதந்திரா
துத்ருதம் ஸாஸ்த்ரமுத்தமம்."

(இ-ள்.) அரிய விரதத்தையுடையவர்களே, உங்களால் நன்றாகக் கேட்கப்பட்டது காமிகம் என்ற பெயருடைய மகாதந்திரத்தினின்றும் எடுக்கப்பட்ட உத்தமமான இந்தச் சாத்திரத்தைக் கேட்பீர்களாக. (காமிகாகமம்.)

வடமொழிக் காமிகாகமந் தந்திராவதாரப் படலத்தில் இருபத்தெட்டு ஆகமங்களின் பாக்களின் றொகை கூறப்பட்டுள்ளன. அத்தொகையொன்றும் வடமொழி யாகமங்களின் பாக்கணக்கோடு பொருந்தாமையால் அத்தொகை தமிழ் ஆகமங்களின் பாத்தொகை யென்றும், அவற்றினின்று வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்ட இப்போதுள்ள வடமொழி ஆகமங்கள் சுருங்கியவை யாதலால் முற்றும் எண் வேற்றுமை யுளதென்றும் கருதத்தக்கதாகின்றது.

வடமொழிக் காமிகம் தந்திராவதாரப் படலத்திற் கூறப்பட்ட காமிகாகமத்தின் பாத்தொகை பாரார்த்தம் (ஆயிரங்கோடி கோடாகோடி) என்று குறிக்கப்பட்டுளது. இப்போது வடமொழியிலுள்ளது

பூர்வகாமிகம் படலம் 75-க்கு பா—5166.
உத்தரகாமிகம் படலம் 98-க்கு பா—6477.

ஆக 11643

சுப்பிரபேதாகமத்துக்குக் கூறப்பட்ட பாத்தொகை மூன்று கோடி. இப்போது வடமொழியிலுள்ளது படலம் 74-க்கு பா—4665½.

சிவனாருளிய தமிழ்மறை யாகமங்கள் முதல் இரண்டாவது கடல் கோள்களில் மறைந்தன. 7

---

6. இப்படியே எல்லா ஆகமங்களிலும் வேற்றுமை யுண்மையால் காமிகம் தந்திராவதாரப் படலத்திற் கூறப்பட்டவை வடமொழியாகமங்களன்றென்பது தெளிவு.

சிவாலயத் திருவிழாக்களில் திக்குப்பலியிடும் பொழுது தமிழ்ப் பண்கள் ஓத ஆகமங்களிற் கூறப்படலும் வடசொல்லாகமங்கள் தமிழினின்று மொழிபெயர்க்கப் பட்டமையை யுணர்த்துகின்றது.

7. "ஏரணமுருவம் யோகமிசை கணக்கிரதஞ்சாலந்
தாரணமறமேசந்தந் தம்பநீர் நிலமுலோகம்
ஆரணம் பொருளென்றின்னமான நூல்யாவும்வாரி
வாரணங்கொண்டதந்தோ வழிவழிப்பெயருமாள"
(பழம்பாட்டு)

"பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"

என்று சிலப்பதிகாரம் காடுகாண் காதையில் முதலூழிக் கடல்கோள் குறிக்கப்பட்டுளது.

முதற்கழக காலம் இற்றைக்கு 16000 ஆண்டுகளாகின்றன. அது 4440 ஆண்டு தமிழகத்தில் தென்மதுரையில் வீற்றிருந்து முதற்கடல் கோளிற்பட்டது. அதன்பின் கவாடபுரத்தில் இடைக்கழகம் தோன்றி 3750 ஆண்டுகளிருந்து இரண்டாவது கடல்கோளில் பட்டது. பின்னர் இப்போதுள்ள மதுரையில் மூன்றாவது கழகம் 1850 ஆண்டுகளிருந்து பாண்டிய அரசாட்சியோடு ஒழிந்தது.

கடைச்சங்க மிரீஇனர் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்மர். கடைக்கழக இறுதிக்காலம் கி. பி. 140 என்ப.

(இறையனாரகப்பொருளுரையிற்கண்டது)

தமிழ் மறையிலன்பு செலுத்ாதவரைக் காணலையும், அவரோடு பேசலையும் விலக்கலோடு, கொலைவேள்விகளை மிகுத்துக்கூறும் ஆரிய மறைகளையும் திருமுறைகள் தணித்துக் கூறுகின்றன. 8

"தில்லைச்சொக்க ரம்பலவரென்னும் சுருதியைக் கருதமாட்டா வெக்கரை" என்று சொற்களைச் சுட்டித்தமிழ் வேதத்தைக் குறிப்பது தமிழ்மறை யுண்மையை வற்புறுத்துகின்றது.

---

7. "நூலாநாலா யிரநானூற்று நாற்பத்தொன்பான்
பாலா நானூற்று நாற்பத்தொன்பான்-மேலாநாற்
பத்தொன்பான் சங்கமறு பத்துநாலாடலுக்குங்
கத்தன் மதுரையிற் சொக்கன்"

(காளமேகம் வெண்பா.)

ஆதலால் முச்சங்கங்களில் இயற்றப்பெற்ற தமிழ்நூல்கள் 4947 என்ப.

8. "செக்கரொத் திரவிநூறாயிரத்திரளொப்பாந்தில்லைச்
சொக்கரம் பலவரென்னுஞ் சுருதியைக் கருதமாட்டா
வெக்கரைக்குண்டமிண்ட வெத்தரைப்புத்தராதிப்
பொக்கரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே"

"கச்சரைக்கல்லாப்பொல்லாக்கயவரைப்பசுநூல்கற்கும்
பிச்சரைக்காணுகண்வாய் பேசாதப்பேய்களோடே"

"அசிக்கவாரியங்களோது மாதரைப் பேதவாதப்
பிசுக்கரைககாணுகண்வாய் பேசாதப்பேய்களோடே"

(திருவிசைப்பா)

"விளக்கங்கிருப்பமின்மினி கவரும்
அளப்பருஞ் சிறப்பிலாதர்போலவும்
கச்சங்கொண்டு கடுந்தொழின்முடியாக

அமரசிம்மன்காலம் கி. பி. 500. அதுவரை ஆரிய மறைகள் மூன்றேயிருந்தன. 9

---

கொச்சைத் தேவரைத் தேவரென்றெண்ணிப்
பிச்சரைப்போல வோராரியப்
புத்தகப்பேய்கொண்டு புலம்புற்று
வட்டணைபேசுவர் மானுடம்போன்று"

(கோபப்பிரசாதம்.)

9. அமரகோசம், வாக்வர்க்கம், சுலோகம்—160.

"ஸ்திரியாம் ருக் ஸாம யஜுஷீ
இதிவேதாஸ்த்ரய ஸ்த்ரயீ"

(இ-ள்.) இருக்கு, ஸாமம், யசுர் என்ற வேதங்கள் மூன்றும் த்ரயீ (மூன்றி) எனப்படுகின்றன.

**ஆன்றோர்மொழி.**

"தந்வந்திரி க்ஷபணகோ அமரசிம்ஹசங்கு
வேதாளபட்டகர்ப்பர காளிதாசா:
க்யாதோவராக மிஹிரேந்ருபதே: சபாயாம்
ரத்நாநிவை வரருசிர்நவவிக்ரமஸ்ய"

(இ-ள்.) தந்வந்திரி, க்ஷபணகன், அமரசிம்மன், சங்கு, வேதாளபட்டன், கடகர்ப்பரன், காளிதாசன், வராகமிகிரன், வரருசி என்றவர் விக்கிரம அரசனின் அவையின் ஒன்பது மணிகளாம்.

அவற்றில் பல விலங்குகளைக் கொன்று பல தேவர்களுக்கு ஊட்டி வணங்கும் வேள்விசெய் முறைகளும். 10

---

A History of civilisation in Aucient India
by Romesh Chundra Duth C. I E.

பழைய இந்தியாவின் சீர்த்தேற்றம். முகவுரை.

| | |
|---|---|
| உஜ்ஜினி விக்கிரமாதித்யன் காலம். கி. பி | 500—550 |
| காளிதாசன், அமரசிம்மன், வராகமிகிரர், வரருசி முதலியவர் காலம் கி. பி. | 500—550 |
| சிந்துநதிப்படுகையில் ஆரியர் குடியேறியது கி. மு. | 2000—1400 |
| இருக்குவேத மந்திரங்களியற்றப்பட்ட காலம் கி. மு. | 2000—1400 |
| கங்கைப்படுகையில் ஆரியர்குடியேறியது ,, | 1400—1000 |
| உபநிடதமியற்றப்பட்டகாலம் ,, | 1100—1000 |
| ஆரியர் இந்தியா முழுமையும் வென்றது ,, | 1000—320 |
| பாணினி காலம் ,, | 800 |
| கௌதம புத்தர் காலம் ,, | 557—477 |
| சந்திரகுப்தன் (மகதநாட்டரயன்) ,, | 320—290 |
| அசோகன் (மகதநாட்டரயன்) ,, | 260—222 |
| ஆந்திரர் ஆட்சி (மகதநாட்டில்) ,, | 26 கி. பி. 430 |
| சங்கராச்சாரியர் காலம் கி. பி. | 788—850 |

10. ப. இ. சீ. C. S. I. India

We have frequent allusions to the sacrifice and to the cooking of cows buffaloes and bulls (61. 12, 2. 7. 5, 5. 29–7 & 8 6-17-11, 6-16-47, 6-28-4, 10-27-2 10-28-3 &c.

பரிவேள்வி கைமை வேள்வி, மக்கள் வேள்வி, (அசுவ மேதயாகம், பௌண்டரீக யாகம், நரமேத யாகம்) முதலிய வேள்விகளும் 10.

---

10 (In 10-89-14 there is mention of a slaughter house, where cows were killed and in 10-91-14. there is an allusion to the sacrifice of horses, bulls and rams.

வேள்விகளைப் பற்றியும் பசுக்கள், எருமைகள், எருதுகளைச் சமைத்தலைப்பற்றியுமுள்ள குறிப்புகளை நாம் அடிக்கடி காண்கின்றோம் அவை இருக்கு 1-61-12, 2-7-5, 5-29-7 & 8, 6-17-11, 6-16-47. 6-28-4, 10-27-2, 10-28-3 முதலியன.

10-89-14ல் பசுக்கள் கொல்லப்படுகிற கொலையிடம் கூறப்படுகின்றது. அன்றியும் 10-91-14ல் குதிரைகள், எருதுகள், ஆடுகள், இவற்றின் வேள்வி குறிக்கப்படுகின்றது

இருக்கு 1-100-18. பலரால் வந்திக்கப்பட்டவரும் விரைவான தோழர்களோடு கூடியவரும் ஆன இந்திரனே. இந் நிலத்தில் குடியிருந்த தசியூக்களையும், சிம்யூசர்களையும் உமது இடியால் அழித்தீர். அதன்பின் வெண்ணிறமுள்ள (ஆரிய) நண்பர்களுக்குப் புலங்களைப் பகிர்ந்து கொடுத்தீர்.

இருக்கு 10-22-8. நாங்கள் எல்லாப் பக்கங்களிலும் தசியூ இனத்தாரால் சூழப்பட்டிருக்கின்றோம். அவர்கள் வேள்விகள் செய்வதில்லை. அவர்கள் ஒன்றையும் நம்புவதில்லை. அவர்கள் கிரியைகள் வேறுபட்டன; அவர்கள் மனிதரல்லர். பகைவரை அழிக்கின்றவரே. அவர்களைக் கொல்வீராக. தசியூக்கள் குலத்தை அழிப்பீராக.

இருக்கு 1-62-13. இந்திரனே உமக்கு கௌதமரின் சந்ததியாராகிய கோதமர்கள் இந்த நூதனமான சம்ஹிதையை விஞ்ஞேதமாகச் செய்தார்கள்.

ஆரியர்க்கும் திருவிடர்க்கும் நிகழ்ந்த போர்களும் பிற காதைகளும் கூறப்பட்டுள்ளன. 10.

---

10. இருக்கு 10-54-6. சம்ஹிதைகளைச் செய்யும் பிரஹதுக்தர் என்பவரால் இந்திரனுக்கு உவக்கத்தக்க மகத்துவமுள்ள சங்கிதை செய்யப்பட்டது.

இருக்கு 1-7-16. இடியினை ஆயுதமாகக் கொண்டு தனது வல்லபத்தில் நம்பிக்கையுடைய இந்திரன் தாசர்களின் பட்டணங்களை அழித்துக்கொண்டுபோனார். அறிவிற் சிறந்த இந்திரனே, இடிக்கரசே, தாசர்கள்மீது உமது அம்புகளைச் செலுத்தும். ஆரியர்களின் வீரத்தையும் புகழையும் விருத்தியாக்கும்.

இருக்கு. 2-6-15. வரு. இந்திரன் அசுரர்களை எதிர்த்துத் தாபிதியர்களைக் கொண்டுபோய் விட்டதுமன்றி, அவர்கள் ஆயுதங்களை யெல்லாம் நெருப்பிற் கிரையாக்கி அவர்கள் ஆனிரையாலும், அசுவங்களாலும், இரதங்களாலும், அரசகுமாரனைச் செல்வவந்தராக்கினார்.

இருக்கு. 4-7-3, வரு. தாசர்களாகிய ஷம்பரர்களது நுழைதற்கரிய 100 பட்டினங்களை நீர் அழித்தீர்.

இருக்கு. 8-2-19. வரு. நீர் ஆரியர் பொருட்டாகத் தாசர்களை ஓட்டினீர்.

இருக்கு. 1-130-8. இந்திரன் தன்னை வணங்கும் ஆரியர்களைச் சண்டைகளில் காக்கின்றனன். அவன் அளவற்ற சமயங்களில் ஆரியர்களைக் காக்கின்றனன். எல்லாச் சண்டைகளிலும் காக்கின்றனன். ஆரிய மனிதர்களின் பயனுக்காக வேள்விகள் செய்யாதவர்களை அவர் கீழ்ப்படுத்துகிறார், அவர் கருநிறமுடைய பகைவனின் தோலையுரிக்கிறார். அவனைக் கொல்லுகிறார். அவனைச் சாம்பலாக்குகின்றார்.

பின்னர் அவ்வேள்விகளும் செய்வினைகளும் (ஆபிசாரங்களும்) கூறும் அதர்வவேதம் இயற்றப்பட்டது. 10.

---

10 இருக்கு. 2–10–6, 7. விருத்திரனைக் கொன்றவரும் பட்டணங்களைத் தகர்த்தவரும் ஆகிய ஓ இந்திரனே! நீர் கரிய தாசர்களின்படைகளை அழித்தீர். பூமியையும் நீரையும் மனுவின் குலத்தாருக்கு ஆக்கினீர். வேள்விசெய்வோர் விருப்பங்களை நிறைவேற்றுவீராக.

இருக்கு, 6-47-20. ஓ தெய்வங்களே! நாங்கள் யாத்திரைசெய்து வழிதவறி ஆடுமாடுகள்மேய்தற்குதவாதபூமிக்குவந்து சேர்ந்தோம். தசியூக்களுக்குமட்டும் ஆதரவாக விரிவான இடமிருக்கின்றது. ஓ பிரகற்பதியே ஆடுமாடுகளைத் தேடியடைய எங்களை நடத்துவீராக. ஓ இந்திரா! உம்மை வணங்குகின்ற வழியைவிட்டு விலகிய எங்களுக்கு வழிகாட்டுவீராக.

இருக்கு. 8-96-13. விரைவான கருப்பன் (கிருட்டினன்) அனுஸ்மதி ஆற்றின் கரையில் பதினாயிரம் படையுடன் குடியிருந்தனன். இந்திரன் தன்னறிவால் உரத்துக்கூவும் அத்தலைவனை அறிந்தனன். அவன் ஆரியரின் நன்மைக்காக (கருப்பனின்) கொள்ளையடிக்குஞ் சேனையை அழித்தனன்.

இருக்கு. 9-112-3. காண்பாயாக ஓ சோமா! நான் வேதமந்திரங்களை யியற்றுகிறவன், என் தகப்பன் வைத்தியன். என்தாய் திரிகையில் தானியம் திரிக்கிருள். பசுக்கள் தீனிக்காக மேய்ச்சற் புலங்களில் திரிகின்றமைபோல பணத்துக்காக நாங்கௗெல்லவரும் பல தொழில் புரிகின்ளேம். இந்திரனுக்காக நீ பெருகுவாயாக.

தமிழ்நான் மறைகள் 1-2-வது கடல்கோள்களிலொழிந்தன ஆதலால் முந்தியகாலத்து நான்மறை (நால்வேதம்) எனப் படுவன தமிழ்மறைகளையே சுட்டுகின்றனவெனக்கருதத் தக்கதாகின்றது. 11.

---

11. "முன்னொரு காலத்தில் மூவுலகந்தன்னில்
வந்திடுமுயிர் செய்தவல் வினையதனாலே
அந்தமின் மறையெல்லா மடிதலைதடுமாறிச்
சிந்திடமுனி வோருந் தேவருமருளுற்றார்."

(கந்தபுராணம் பாயிரப்படலம்)

தொல்காப்பியத்துக்கு அகத்தியர் மாணாக்கர் பனம் பாரனாரியற்றிய சிறப்புப்பாயிரத்தில் "நான்மறை முற்றிய அதங்கோட்டாசான்" என்றபகுதிக்கு நச்சினார்க்கினியரெழு திய உரையில் தொல்காப்பிய மியற்றப்பட்டதன் பிற்காலத் தில் இருக்கு முதலிய மறைநான்கும் வகுக்கப்பட்டதாய்க் கூறப்படுகின்றது.

கி. பி. முதலாவது நூற்றாண்டிற் றோன்றியிருந்த திரு வாதவூரடிகள் திருவாய்மலர்ந்த திருவாசகம் போற்றித் திருவகவலில் "மூவாநான்மறை முதல்வாபோற்றி" என்று கூறப்படும்நான்மறை தமிழ்மறையேஎன்றுகுறிக்கத்தக்கது

புறநானூற்றில், முரஞ்சியூர், முடிநாகராயர், சேரமான் பெருஞ் சோற்றுதியன் சேரலாதனைப் பாடிய. "நாஅல் வேதநெறி திரியினும்" என்றபா பாரதப்போர்க்காலத்தது.

11. சுக்லயசுர்வேதம் சதபதப் ராமணம்காண்டம் 1 அத். 8. பிராம்மணம் 1ல்

மனு தனக்குக் கைகழுவக் கொணர்ந்த நீரிலிருந்தொரு மீன் தோன்றிக் கடல்கோள் வருவதை முற்கூறக்கேட்டு அதன்சொற்படி யுண்டான நீர்ப்பெருக்கில் கப்பலூர்ந்திருந்துய்ந்ததாய்க் கூறப்படுகின்றது. அதற்கு உபப்பிரமாணமாக பாகவதம் 8-வது ஸ்கந்தம் 24-வது அத்தியாயத்தில் திராவிட தேசத்தரசனாகிய சத்யவிரதனென்ற வைவசுவதமனு விண்டுவின் மச்யாவதாரமாகிய மீன்குஞ்சு சொன்னபடி கடல்கோளில் கப்பலிலிருந்துய்ந்து பின்னர் நாடாண்டமை கூறப்படுகின்றது. இது தமிழ்க்கழகங்களின் வரலாற்றில் இரண்டாவது கடல்கோளில் கடல்கொள்ளப் பட்டுப்போந்திருந்த முடத்திருமாற பாண்டியனைகுறிப்பது தெளிவு. ஆதலால் முதற்கழகத்திருந்த தமிழ்மறை யாகமம், போதம் முதலியன பதினாயிரம் ஆண்டுகளுக்கு நெடுநாள் முந்தியனவாகின்றன. இரண்டாவது கடல்கோள் நிகழ்ந்த பின்னரே இருக்குவேதம் தோன்றியதென்றும் கருதத்தக்கதாகின்றது.

பாகவத மகாபுராணம். ஸ்கந்தம் 8. அத். 24. சு. 13.

"சத்யவ்ரதோஞ்ஜலிகதாம் ஸஹதோயேநபாரத
உத்ஸஸர்ஜநதீதோயே சபரீம்த்ரவிடேச்வர:"

(இ-ள்) திராவிட தேயத்தரயனான சத்யவிரதன் தன் உள்ளங்கை நீரிலிருந்த மீன்குஞ்சை ஆற்றின் நீரில் விடுத்தனன்.

"எத்வைமநுரபவத்ததபேஜஸம்"

(இ-ள்.) மனு கூறியதெல்லாம் மருந்து, என்று வேதங் கூறல் மநு, வேதத்துக்கு முற்பட்டவரென்னலை யுணர்த்துகின்றது.

ஆரியமறைகள் பல இருடிகளாற் கூறப்பட்ட பல பகுதிகளையுடையன. அவ்விருடிகள் பெயர்கள் அப்பகுதிகளின் தலைப்பிலும் அப்பகுதி நூலினுங் குறிக்கப்பட்டுள்ளன: அவற்றில் அறம், பொருள், இன்பம், வீடு கூறப்பட்டில்லை. பெரும்பாலும் வேள்விகளே கூறப்பட்டுள்ளன. அவை அபரவித்தை (கன்மகாண்டம்) எனப்படும் பூர்வபக்கங்கள். ஞானங்கூறும் உபநிடதங்கள் (ஞானகாண்டம்) பின்னர்ப் பலவிருடிகளாற் கூறப்பட்டன. அவைகளும் முடிபல்லனவென்பது சைவநூற்றுணிபு 12.

---

11 தைத்திரியயஜுர்ப்பிராமணம் 3வது அட்டகம், 9வது கந்தம் அநுவாகம் 6–27, அசுவமேதப் பிரகரணம்.

" அம்பே அம்பால்யம்பிக இதிபத்நீ முதாநயதி "

(இ-ள்.) அம்பா, அம்பாள், அம்பிகை என்ற பத்நிகளைப் புகழ்ந்தனன்.

இம்முப்பெண்கள் பாரதகாலத்திலிருந்ததாய்ப் பாரதத்தில் கூறப்படுகின்றனர்.

ஆரிய வேதமியற்றிய விருடிகள்.

12, மரீசி, அத்திரி, ஆங்கிரசு, புலத்தியன், புலகன், கிருது. பிரசேதனன், வசிட்டன், பிருகு, முதலிய பிரமவிருடிகளும்,

மந்தாத்திரி, சிவி, வசுமனுன், பிரதர்த்தனன், விசுவாமித்திரன், மதுசந்தனன், ரிஷபன், ரேணு, அம்பரிஷன், பரதன், மேதாத்திரி, நாபகன், இரகுகணன், வக்ஷப்பிரியன் புரூரவன், வேனன், சுதாசன், கிருத்சமதன், தேவாபி, சந்தாணு முதலிய இராஜவிருடிகளும்,

கவுஷஜலுஷன் முதலிய தாசவிருடிகளும், கக்ஷீவது முதலிய சங்கரசாதியிருடிகளும், சசி, சிரத்தை, கோரவி, வாக், லோபாமுத்திரை முதலிய பெண்களும் வேதமந்திரங்களை யாக்கியோராவர்.

சாந்தோக்யோப நிடதம் பிரபா—5 காண்டம் 3–7.

"யதேயம்நப்ராக் இதிஹோவாசவத்த: புராவித்யாப்ராம்மணாங்கச்சதி"

(பாஞ்சால நாடாண்டிருந்த தமிழரசனுகிய பிரவாக நசைவலி, கௌதமமுனிவரைப் பார்த்து)

உனக்கு முன்னர் பிராமணர்கள் இந்த வித்தையை (ஞானத்தை) அடையவில்லை என்று கூறினன்.

இதனுலும் முண்டகோபநிடத முதலிய வற்றாலும் முற்காலத்தில் பிராம்மணர் ஞானநூற்பயிற்சி யடைந்திலரென்றும் கருதத்தக்கதாகின்றது.

12. முண்டகோபநிஷத் 1–2–7.

" ப்லவாஹ்யேதே அத்ருடாயஜ்ஞரூபா:
அஷ்டாதசோக்த: வரம்யேஷுகர்ம
ஏதச்சரேயோயெபி நந்திமூடாஜரா
ம்ருத்யுந்தேபுநரேவாபியந்தி "

(இ-ள். பதினெண் பெயர்களாற் செய்யத்தக்கதாழ்ந்த வேள்விக்கர்மம் செய்பவர்கள் கெட்டுப்போனதோணிபோல் பிறவிக்கடலைக்கடக்கவேலாது. இக்கருமத்தைவீடுபேற்றுககுக் காரணமாக எந்த மூடர் போற்றுகின்றனரோ அவர் கிழத்தனமும் சாவும் மீண்டும் மீண்டும் அடைகின்றனர்.

முண்டகம். 1-2-8.

" அவித்யாயாம் பஹுதாவர்த்தமாநா: வயம்க்ருதார்த்தா இத்யபிமந்யந்திபாலா:
யத்கர்மிணோ நப்ரவேதயந்திராகாத்
தேநாதுரா: க்ஷீணலோகாச்யவந்தே "

12 (இ-ள்.) அஞ்ஞானத்தில் அநேகவிதமாய் இருக்கிறவர்களும், நாம் பயனையடைந்தவர்கள் என்று நினைத்துக்கொள்கிறவர்களும் ஆகிய அஞ்ஞானிகள் எதனால் வேள்வி முதலிய கருமஞ்செய்கிறவர்களாய் கன்மபலத்தின் இச்சையால் தத்துவத்தை அறிகிறதில்லையோ, அதனால் துக்கமடைந்தவர்களாய் புண்யங்கழிந்து அவற்றினின்று நழுவுகிறார்கள்.

முண்டகம். 1-2-10.

" இஷ்டாபூர்த்தம் மந்யமாநாவரிஷ்டம்நாந்ய
ச்ரேயோவேதயந்தேப்ரமூடா:
நாகஸ்யப்ருஷ்டேதேசுக்ருதேநாபூத்வா
இமம்லோகம் ஈனதரம்சாவிசந்தி "

(இ—ள்.) எவர்யாககர்மங்களையும், சுமார்த்த கர்மத்தையும், சிறந்தனவென்று நினைத்து, வேறு புருடார்த்தத்தையறிகின்றிலரோ. அந்தச் சிறந்த மூடர்கள், சுவர்க்கத்தின் மேல்புறமிருக்கிற போக லோகத்தில் (கன்மபலத்தை) அநுபவித்து இந்த லோகத்தையும், நரகாதி லோகத்தையும் அடைகின்றனர்.

முண்டகம். 1-2-12.

" பரீக்ஷ்ய லோகாந்கர்மசிதாந், ப்ராம்மணோநிர்
வேதமாயாந்நாஸ்த்யக்ருதக்ருதேந
தத்விக்ஞாநார்த்தம்ஸகுருமேவாபிகச்சேத்
ஸமித்பாணிச்ரோத்ரியம்ப்ரம்ஹநிஷ்டம். "

(இ-ள்.) எந்த அந்தணன் கன்மங்களாலாகிய உலகங்களை விசாரித்து, நித்தியனாகிய இறைவனை கன்மத்தினாலடைய முடியாதென்றறிகின்றனனோ அவன் அப்பொருளை அறியும்பொருட்டு வேதாந்த முணர்ந்தவனும் பிரம நிட்டையுடையவனுமாயிருக்கிற ஆசிரியனை கையிற் சமித்துடையனாய் அடையக்கடவன்.

உயிர்கள் தத்தம் பாகத்துக்குத் தக்க சமயம்பற்றி யொழுகும்உணர்வுடையராயிருத்தலின் எவர்எம்மதம்பற்றி யொழுகினும்அவர்க்கு அவ்வதற்குறிய பலனைஇறைவனொருவனே தந்துயர்த்தி உய்விக்கின்றனன் என்பது சிவநெறியின் (சைவசித்தாந்தத்தின்) முடிவு. 13.

---

13. "புறச்சமய நெறிநின்று மகச்சமயம்புக்கும்
புகன்மிருதிவழியுழன்றும்புகலுமாச்சிரம
வறத்துறைகளவையடைந்து மருந்தவங்கள்புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்துமாரணங்கள்படித்தும்
சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேதச்
சிரப்பொருளைமிகத் தெளிந்துஞ்சென்றாற்சைவத்
திறத்தடைவரிதிற் சரியை கிரியாயோகஞ்
செலுத்தியபின்ஞானத்தாற்சிவனடியைச்சேர்வர்"
(சிவஞானசித்தியார் சுபக்கம் சூ. 8· பா. 11.)

"வேத மோதிலென் வேள்விகள் செய்யிலென்
நீதிநூல் பல நித்தம் பயிற்றிலென்
ஓதி யங்கமோ ராறு முணரிலென்
ஈசனை யுள்குவார்க்கன்றி யில்லையே"
(நாவுக்கரசர்-பாவநாசத்திருக்குறுந்தொகை 4)

"அப்பனை நந்தியை யாராவமுதினை
யொப்பிலி வள்ளலை யூழி முதல்வனை
யெப்பரிசாயினு மேத்துமினேத்தினால்
அப்பரி சீச னருள்பெற லாமே"
(திருமந்திரம்.)

"தமருவந்த தெவ்வுருவவ் வுருவந்தானாய்த்
தமருவந்ததெப் பேரப்பேர்—தமருவந்த
தெவ்வண்ணஞ்சிந்திப் பதியையாதிருப்பரேல்
அவ்வண்ணமகிழ்வோனும்"
(திருவாய்மொழி).

இருக்கு முதலிய மறைகளின்படி பல இருடிகளால் கதிர், இந்திரன், வருணன், அக்கினி, மித்திரன், குபேரன் முதலிய சில்லரைத் தெய்வங்களை இறைவனென வணங்கல் கீழ்நெறி (அபரவித்தை) யாகிய பூர்வபக்கமும், அனைத்தை யும் இறைவடிவாகக் கண்டு சிவத்தோ டிரண்டறக் கலந் தின்பந்துய்க்கும் மீவழிபாடு மேல்நெறி (பரவித்தை) சித் தாந்தமும் ஆம். கொலையில்லாத சிவவேள்விகள் சித்தாந் தமாகிய சிவாகமங்களிற் கூறப்படுகின்றன. 14.

உயிர்,உயிர்க்குயிர் இன்றென்னும் தேரரும்(புத்தரும்,) கன்மத்துக்குரிய பயன்றரு மிறைகொள்ளாத அமணரும் நாத்திகர். அவரினும் தெய்வங்கொண்டு வேள்வியோம்பு வோர் மிகச்சிறந்த பரிபாகிகளாதலானும், 15.

---

14. "பத்யர்த்த தர்சகம்ஜ்ஞானம் காமிகாதிபரம்ப்வேத் வேதாத்யம் அபரம்ஜ்ஞானம் பசுபாசார்த்ததர்சகம்"

(இ—ள்.) பதிப்பொருளை யுணர்த்துகின்ற காமிக முத லியன பரவித்தை. பசுபாசங்களை யுணர்த்துகின்ற வேத முதலியன அபரவித்தையாம். (காமிகாகமம்)

"தத்ராபராரிக்வேதோ யஜுர்வேதஸ்ஸாமவேதோ தர்வவேதசிக்ஷாகல் போவ்யாகரணம் நிருக்தம் சந்தோஜ்யோதிஷமிதி—அதபராயயாததக்ஷரமதிகம்யதே"

(இ-ள்.) அவற்றுள் அபரவித்தைகள் இருக்கு வேதம், யசுர் வேதம், சாமவேதம், அதர்வவேதம், சிக்ஷை, கல்பம், வியா கரணம், நிருத்தம், சந்தசு, ஜோதிடம் என்பன. எதனுல் அந்த அக்ஷரமாகிய பிரமம் அறியப்படுகின்றதோ அதுபரா வித்தை.

(முண்டகோப நிடதம் 1-5)

15. " அருக்கன் பாதம் வணங்குவராந்தியில்
அருக்கனுவான ரனுருவல்லனே
இருக்குநான் மறை ஈசனையேதொழும்
கருத்தினை நினையார் கன்மனவரே."
(திருநாவுக்கரசர்—ஆதிபுராணத்திருக்குறுந்தொகை)

" விரிவிலாவறிவினார்கள் வேறொருசமயஞ்செய்தே
எரிவினாற்சொன்னாரேனு மெம்பிராற்கேற்றதாகும் "
(திருநாவு—திருநேரிசை) 9.

" மந்திபோற்றிரிந்தாரியத்தொடு செந்தமிழ்ப்பயனறிகிலா
வந்தகர்க்கெளியேனலேன் றிருவாலவாயரனிற்கவே."

" வேதவேள்வியை நிந்தனைசெய்துழல்
ஆதமில்லியமணொடுதேரரை
வாதில்வென்றழிக்கத்திருவுளமே
பார்திமாதுடனாயபரமனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே."
(சம்பந்தர் —திருவாலவாய்.)

" சாத்திரம்பலபேசுஞ்சழக்கர்காள்
கோத்திரமுங்குலமுங்கொண்டென்செய்வீர்
பாத்திரஞ்சிவமென்றுபணிதிரேல்
மாத்திரைக்குளருளுமாற்பேறரே."
(திரு—நா.)

" நீற்றுமேனியராயினர்மேலுற்ற
காற்றுக்கொள்ளவும்நில்லாவமணரைத்
தேற்றிவாதுசெயத்திருவுள்ளமே
ஆற்றவாளரகத்குமருளினாய்."
(சம்—தேவாரம்.)

அபரவித்தைகளாகிய இருக்கு முதலிய நான்மறைக ளில்சிலவிடங்களில் சிவன்கூறப்படலானும், கொலே வேள்வி களிலும் கடையில் சிவனைக்குறித்துச் செய்யும் "சுவிஷ்ட கிருத்" ஓமம்கூறப்படலானும், எசுர்மறையிலுள்ள ஸ்ரீருத் திரம் என்ற பகுதியில் சிவவணக்கம் சிறந்து கூறப்படலா னும், ஆரிய இருடிகளாற் கூறப்பட்ட உபநிடதங்களில் சிவ வழிபாடுகூறப்படலானும், ஆரியர்சிவவழிபாடியற்றலானும், அவர் சிவதீக்கைபெற்று மகா சைவரென்ற பெயரடைதலா னும், எல்லவரையும் ஈடேற்ற விருப்பமும் பேரருளுமுடைய சைவசமயாசாரியர் இருக்குமுதலிய மறைகளை கீழ்வித்தை யாக அங்கீகரித்தருளினர். 15.

---

15. எசுர்வேதத்தில் "யஸ்மைநமஸ்தச்சிர:," எவனுக்கு வந்தனமோ அவன்தலை என்று துவக்கி கடவுளை முதலேவடி வாக எண்ணி "த்வம் பூதாநாம் அதிபதிரசி, த்வம் பூதா நாம் சிரேஷ்டோசி, நமோநமச் சர்வந்தேநம:" நீ பூதங்க ளுக்குத் தலைவனுயிருக்கின்றாய். நீ உயிர்களுக் கிறைவஞ யிருக்கின்றாய் வணக்கம் வணக்கம். எல்லா வணக்கமும் உனக்கே என்று கூறப்படுகின்றது.

### சுவேதா சுவதர உபநிடதம்.

"யதாதமஸ்தந்நதிவா நராத்ரிர்நசந்நசாசத்
சிவஏவகேவல: ததக்ஷரம் தத்ஸவிதுர்வரேண்யம்"

(இ-ள்.) எப்போது சங்கார காலமாகிய இருட்டோ அப் பொழுது பகலில்லை, இரவில்லை, சத்தில்லை, அசத்தில்லை, சிவனே தனித்துளன். அவன் அக்ஷரன், அவன் கதிரவனிற் பரம்பொருள்.

"சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானளத் தருவரேனும்

உண்மையில் இருக்கு முதலிய அபரவித்தை(கீழ்மறை கள், கொலை வேள்வி புரியும் ஆரியத்துவிஜர்க்கேயன்றி எல்லவர்க்கு முரியனவுமன்று. அவை கீழ்வழிபாடாயினும் மேல்வழிபாட்டுக்கு வழி (சாதனம்) ஆதலின் அவைகள் அவற்றுக்குரிய பரிபாகிகள் கொள்ளத்தக்கனவேயாம். ஆதலால் அனைவர்க்கும் பொதுமறையாகிய சித்தாநதமே (முடிவுரை) உயர்மறையாகக் கொள்ளத்தக்கதாம். 16.

---

மங்குவாரவர் செல்வமதிப்போமல்லே
  மாதேவர்க்கேகாநதரல்லராகி
லங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயரா
  யாவுரித்துத்தின் றுழலும் புலையரேனுங்
கங்கைவார் சடைககரந்தார்க் கன்பராகி
  லவர்கணடீர் யாம்வணங்குங் கடவுளாரே."

(திருநாவு—திருத்தாண்டகம்.)

15. "அபிவாயச் சண்டாள சிவ இதிவா சம்வதேத் தேநஸஹசம்வதேத்தேநஸஹசம்வசேத்தேநஸஹபுஞ்ஜீத"

(இ-ள்.) சண்டாளனாயினும் சிவனென்ற சொல்லைச் சொல்வானானால் அவனோடு பேசுக; அவனோடு இருப்பாயாக; அவனோடு உண்பாயாக.

"குலந்தாங்குசாதிகள் நாலினுங் கீழிழிந்த எத்தனை
நலந்தானிலாதகொடிய சண்டாள சண்டாளர்களாகிடினும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணர்க்காளா
கலந்தாரடியார்க ளடியாரெம்மடிகளே." [யென்றுமுட்

(திருவாய்மொழி)

முன்னர் மாவேடு (மகாதந்திரம்) என்ற பெயரோடு தமிழில் வழங்கிவந்த சைவநூல் பின்னர் வடமொழியில் சிவாகமங்களாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. வடமொழிக்காமிகாகமம் தந்திராவதாரபடலததில் ஆகமங்களின் பாக்கள் குறிக்கப்பட்ட கணக்கு முற்றுமொவ்வாமை அக் கணக்கு வடமொழி யாகமத்தினதன் றென்றுணர்த்தும். வடமொழி யாகமங்களிலும் உபநிடதங்களிலும் கீழ்ஞானம் என்று குறிக்கப்பட்டுள்ள வடமொழி வேதமந்திரங்களை ஆகமங்களைவடமொழியிலெழுதியவர் இடையிடையேசெருகியதுமன்றி சிவாகமங்களில் தங்கள் கொள்கைகள் பலவற்றையும் புகுத்திருக்கின்றனர்.

தமிழ் வேதாகமங்கள் முதல் இரண்டாவது கடல்கோள்களில் கொள்ளப்பட்டமையால் அவற்றின் பொருள்களை யுலகுக்களிக்கும் பொருட்டு சமயாசாரியர் நால்வர் வெளியிட்ட தமிழ்மறைகள் தேவார திருவாசகங்கள் அவை திருவருள் வழிநின் றியற்றப்பட்டன வென்பதைச் சித்துகளோடு வெளிப்பட்டமை யுணர்ததுகின்றது. வடமறை கீழ்ஞானத்தையும், தமிழ்மறை மேல் ஞானமாகிய சித்தாந்தத்தையு முணர்த்துகின்றன. 17.

---

16. " திருநெறியாவது சித்தசித்தன்றிப்
பெருநெறியாய பிரானை நினைந்து
குருநெறியாஞ் சிவமாநெறிகூடு
மொருநெறி யொன்றாக வேதாந்தமோதுமே."

" இமையவர்தம்மையுமெம்மையுமுன்ன
மமையவகுததவ னாதிபுராணன்
சமையங்களாறுந தன்றாளிணைநாட
வமையங் குழல்கின்ற வாதிப்பிரானே."

அன்றியும் 1. மருத்துவமறை, 2. பொருண்மறை, 3. வின்மறை, 4. நரம்பின்மறை, (ஆயுள்வேதம், அருத்த வேதம், தனுர்வேதம், காந்தருவ வேதம்) என்ற மறைகள் நான்கும் தமிழிலிருந்து மறைந்தனவென்று நூல்களாற் புலப்படுகின்றது. வடமொழியில் அவ்வேதங்கள் காணப் படவில்லை. 18.

---

"ஆனசமயமது விதுநன்றெனு
மாயமனிதர் மயக்கமதுவொழி
கானங்கடந்த கடவுளை நாடுமின்
ஊனங்கடந்த வுருவதுவாமே."
(திருமந்திரம்.)

17. "அருமறையைச் சிச்சிலி பண்டருந்தத்தேடு
மதுபோலன்றிதுவென்று முளதாமுண்மைப்
பரபதமுந்தற்பதமும பரனேயன்றிப்
பலரில்லையென்றெழுதும் பனுவல்பாரி
னெரியினிடைவேவாதாற் றெதிரேயோடு
மென்புக்குமுயிர்கொடுக்கு மிகுநஞ்சாற்றுங்
கரியைவளைவிக்குங் கன்மிதக்கப்பண்ணுங்
கராமதலைகரையிலுறக் காற்றுங்காணே."
(உமாபதி சிவாச்சாரியர் திருமறைகண்ட புராணம்.)

"உழக்குமறை நாலினு முயர்ந்துலகமோதும்
வழக்கினு மதிக்கவினினும் மரபினாடி
நிழற்பொலி கணிச்சியணி நெற்றியுமிழ்செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ்தந்தான்."
(கம்பராமாயணம். அகத்தியப்படலம்.)

"நிறைமொழிமாந்த ராணையிற்கிளந்த
மறைமொழிதானே மந்திரமென்ப."
(தொல்காப்பியம் செய்யுளியல் 178)

17. "என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத்தமிழ்செய்யுமாறே" (திருமந்திரம்)
"சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற்றேனே"
(திருமந்திரம்.)

" சித்தர் சிவலோக மிங்கே தெரிசித்தோர்
சுத்தமும் சுத்தமனமுந் தமிழ்கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர் தமுத்தி முதன் முப்பத்தாறே."
(திருமந்திரம்)

சனகற்கும் அகத்ய புலத்யசனற்
குமரர்க்கும் அனுக்ரக மெய்ப்பலகைச்
சதுபத்து நவப்புலவர்க்கும்—விபத்தியில்ஞான
படலத்துறு லக்கண லக்ய தமிழ்த்
த்ரயமத்திலகப் பொருள்விர்த்தியினைப்
பழுதற்றுணர் வித்தருள் வித்தகசற்—குருநாதா."
(திருப்புகழ் 151)

" சகலவேத சாமுத்ரியங்கள்
சமயமாறு லோகத்ரயங்கள்
தருமநீதிசேர் தத்துவங்கள்—தவயோகம்.
தவறிலாமலாளப்பிறந்த
தமிழ்செய்மாறர் கூன்வெப்பொடன்று
தவிரவாலவாயிற் சிறந்தபெருமாளே."
(திருப்புகழ் 533)

18. "அளவிறந்துயிர்த்தலும்—ஒற்றிசைநீடலும்
உளவெனமொழிப—விசையொடுசிவணிய
நரம்பின்மறையவென்மனார் புலவர்."
(தொல்காப்பியம் நூன்மரபு. 33)

## அருள்பதிந்தவன்பர்.

இனி அறமும் அறிவும் மேலிட்ட பக்குவிகளான ஒரு மலர் இருமலர் மும்மலர்களுக்கு முறையே முதல்வன் உண்ணின்றும் முன்னின்றும் ஆசிரியரை ஒட்டிநின்றும் பதிபசு பாச உண்மைகளை விளக்கிச் சிவத்தோ டிறண்டறக்கலந்து நின்று பேரின்பந்துய்க்கப் புரிதன்முறை. அங்ஙனம் ஒரு மலர்க்குள்ளத துணர்த்துமுறை நூல்களாலுணரத் தக்கதன்று. இருமலமுடைய பக்குவிக் கிறைவனுரைக்கு மெய் மொழிகளே சூழ்மொழி (உபதேசமொழி) களாம். அவ் வாறிறைவ னுணர்த்த வுணர்ந்த உண்மையை நந்தியங் கடவுள் உலகில் மும்மலருட் பக்குவிகட்குஆசிரியன் இறைவனருள் வழிநின்றுணர்த்தும் பொருட்டு முனிவர் குழுவில் பன்னிரு சூத்திரங்களாக வெளியிட்டருளினர். சிவத்தைப் போந்தடையும்நெறி கூறலால் அந்நூற்கு போதம் என்று பெயரிடப்பட்டது. 19.

போது + அம் ≏ போதம். போது ≏ செல் = அடை

---

19. " செப்புஞ் சிவாகம மென்னுமப் பேர்பெற்று
வப்படிநல்கு மருணந்தி தாள்பெற்று
தப்பிலாமன் றிற் றனிக்கூத்துக்கண்டபின்
ஒப்பிலெழுகோடி யுகமிருந்தேனே."

(திருமந்திரம்.)

" பெரும்பெயர்க் கடவுளிற்கண்டு கண்ணிருடீர்ந்
தருந்துயர்க் குரம்பையி னன்மா நாடி
மயர்வறநந்தி முனிகணத்தளித்த
உயர்சிவ ஞானபோத முரைத்தோன்
பொய்கண்டகன்ற மெய்கண்டதேவன்."

(சிவஞானபோதச் சிறப்புப்பாயிரம்)

இதற்குச் சிவஞானபோதம் என்ற சிறப்புப் பெயரு முளது. போதம்=ஞானம் என்ற பொருள்கொள்ளில் ஞானம் இரட்டித்துப் பொருந்தாமையோர்க. சிவஞான போதத்துக்குவழிநூல் சார்புநூல்கள் திருவுந்தியார், திருக் களிற்றுப்படியார், சிவஞானபோத வெண்பா, சிவஞானசித் தியார், இருபாவிருபது, உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம் திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம, சங் கற்பநிராகரணம் என்ப.

நந்தி சிவனாரிடம் தாம் கேட்ட பொருளைச் சூத்திர மாகக் கூறினும் காண்டலளவையில் நம்பிக்கையுள்ள மாண வரும் பற்றுதலோடு கேட்டுப் பயனடையும் பொருட்டு "என்மனார் புலவர்" என்று ஆழ்ந்த ஆராய்சசியுடைய புல வர் இவ்வாறு கூறுகின்றனர் என்று விளககியருளினர். தமி ழினின்று வடசொல்லில் சுலோகமாக மொழிபெயர்த்தவர் 12-வது சுலோக ஈற்றில் "ஏவம் வித்யாத் சிவஜ்ஞானபோ தே சைவார்த்த நிர்ணயம்" சிவஞானபோதமென்ற நூலில் சைவப்பொருளின் முடிவை இவ்வாறு அறிவாயாக என்று தாமுரைத்த 12 சுலோகங்கள் சிவஞான போதமன்று; அதன் பொருளைக்கூறுவது என்று நன்குணர்த்தினமையால்

---

"எந்தைசனற்குமரனேத்தித் தொழவியலாய்
நந்தியுரைத்தருளு ஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான்மெய்கண்டான் தாரணியோர் தாமுணர
வேதுதிருட்டாந்தத்தாலின்று"

(சிவஞானபோதம் கடைப்பாயிரம்)

"வந்திப்பது நந்திநாமமென் வாய்மையாற்
புந்திக்குள் நிற்பது நந்திபொற்போதமே."

(திருமந்திரம்.)

சூத்திரமாக நந்தி யுரைத்தருளிய ஞான நூல் போதமுதனூலேயாமென்பது தெளிவு. அதன் வழிநூல் ஔவைஞானக் குறளுமென்பாருமுளர். ஆதலால் தமிழில் அறம் பொருள் இன்பம் வீடுகளை யுணர்த்த திருக்குறள் பொதுமறையும், சைவசமயத்துக்கு ஒழுக்கம், நற்செயல், யோகம் ஞானங்களையுணர்த்த தேவார திருவாசகமாகிய மறைகளும், திருமந்திரமாகிய ஆக்மமும், அருள்பதிந்த அன்பர்க்குரியபோத முதனூலும் அதன்வழிநூல் சார்புநூல்களும் கொள்ளத் தக்கனவாயுள்ளன. 20.

**94 வினா.**

சிவநெறிக்கு (சைவசமயத்துக்கு) முதற்குரவர் யாவர்?

**ஆ. உரை.**

உலகமனைத்தையும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களை மூவகை உயிர்களின் மலங்கள் ஒழிந்து ஈற்றில் பேரின்ப மெய்தி யுய்யப் புரிந்தருள உயர்தனிக்குரவனாகிய சிவப்பெரும் பொருள் ஒரு மலர்க்குண்ணின்றுணர்த்தியும், இருமலர்க்கு உமைதுணைவனாய்க் கறைமிடறு முக்கண்ணுமுடையனாய்

---

20. போதமிகுத்தோர் தொகுத்த பேதமைக்கே
 பொருந்தினோரிவர்க்கன்றிக்குதிப்பாற்செல்ல
வேதுநெறியெனுமவர்கட்கறியமுன்னா
 ளிறைவனருணந்திதனக்கியம்பநந்தி
கோதிலருட்சனற் குமாரர்க்குக்கூறக்
 குவலயத்தி லவ்வழியெங்குருநாதன்கொண்டு
தீதகலவெமக்களித்த ஞானநூலைத்
 தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தியென்றே.

(சிவஞானசித்தியார் பரபக்கம்)

முன்றோன்றிச் சூழ்தந்தும், மும்மலர்க்கு உழுவலுடைய உலகாசிரியனை யொட்டி நின்றுணர்த்தியும் அருளுவன். அம்முறையில் நந்திக்குச் சிவனுருரைத்தருளிய பொருளை முதற்குரவராகிய நந்தி பன்னிரு சூத்திரங்களாக்கி அதற்குப் போதம் எனப் பெயர்தந்து 1 சனற்குமார முனிவர்க்குரைத்தருளினர். அவர் தம்மாணுக்கர் 2. சத்தியஞான தரிசனிக்கும், அவர் தம்மாணுக்கர் 3. பரஞ்சோதி முனிவர்க்கும், அவர் தம்மாணுக்கர் 4. மெய்கண்டதேவர்க்கும் அவர் தம்மாணுக்கர் 5. அருணந்தி தேவர்க்கும், அவர் தம் மாணுக்கர் 6. மறைஞான சம்பந்தர்க்கும், அவர் தம் மாணுக்கர் 7. கொற்றவன்குடி உமாபதி தேவநாயனார்க்கும் உரைத்தருளினர். அவர் சந்தான குரவர் (வழிவரு குரவர்) எனப்படுவர். 1.

---

1 "சைவப் பெருமைத் தனிநாயகனந்தி
யுய்யவகுத்த குருநெறியொன்றுண்டு
தெய்வச்சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்துளார்க்கு வகுத்து வைத்தானே"

"விளங்கிற் பரமாகு மெய்ஞ்ஞானச்சோதி
யளப்பில் பெருமைய னைந்த நந்தி
துளக்கறு மாநந்தக் கூத்தன்சொற்போந்து
வளப்பிற்கயிலை வழியில்வந்தேனே"

"போதந்தருமெங்கள் புண்ணிய நந்தியைப்
போதந்தனில் வைத்துப் புண்ணியராயுளார்
நாதன் நடந்தர நயனங்களிகூர
வேதந் துதித்திடப் போயடைந்தார் விண்ணே."

(திருமந்திரம்.)

ஆதலால் உலகனைத்திலுமுள்ள உயிரடங்கற்கும் உயர் தனிக்குரவர் சிவனார். அவரிடம் சூழ்பெற்றுக் கயிலைவழியில்வந்த நந்திப்புத்தேள் மண்ணுலகிற்கு முதற்குரவர். அவர் உலகுய்ய வகுத்த சிவநெறி ஒரு நாட்டினர், ஓரினத்தர், ஒரு சமயத்தர், ஒரு மொழியினர்க்கே வுரியதாகாது, உலகிலெல்லாமக்களுக்கும் புறப்புறச் சமயம், புறச்சமயம் அகப்புறச் சமயம், அகச்சமயம் என்ற வேறுபாடின்றிப் பொதுவாய் அவ்வவர் வினைக்குத்தக்க பலனையளித்தாளும் எல்லா வுயர்பெயர்களுக்குமுரிய பெரும்பொருளை வணங்கியுய்யும் வழிகூறும் நெறியாம். ஆகலின் அந்நெறிக்கு முதலாசிரியராகிய நந்தியங்கடவுளே முதற்குரவராமென்க. 1

95. **விஞ.**

சிவசமயக் குரவராவார் யாவர்?

**ஆ. உரை.**

சிவசமயமுதற்குரவராகிய நந்தியங்கடவுள் மாணுக்கர் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், சிவயோகமுனி, பாம்புமுனி, புலிக்கால்முனி, திருமூலர் என எண்மராவர். அவரிற் சனற்குமாரர் வழிவந்த சந்தானகுரவர் முற்கூறப்பட்டனர். மற்றையர் வழிவந்த முனிவர் பலர். அன்னவரியற்றிய தமிழ்நூல்களும் பல. திருமூலர் மாணுக்கர் இந்திரமுனி, சோமமுனி, பிரமமுனி, உருத்திரமுனி, கந்துருமுனி, காலாங்கிமுனி, கஞ்சமலைமுனி, என எழுவர் இவ்வாறு நந்தி வழிவந்தவாசிரியர் பலர். அவர் வழிகளை விரிக்கிற் பெருகும்.

---

1. "அப்பனை நந்தியை யாராவமுதினை
யொப்பிலிவள்ளலை யூழிமுதல்வனை
யெப்பரிசாயினு மேத்துமினேத்திஞல்
அப்பரிசீச னருள் பெறலாமே.'

(திருமந்திரம்)

இற்றைக்கு 2000 ஆண்டுகட்கு முன்றொடங்கி இந் நாட்டில் தெய்வநம்பிக்கை குறைந்து ஜீவான்மா (உயிர்) பரமான்மா (உயிர்க்குயிர்) இன்றென்னும் புத்தர் முதலியநாத்திகர் மிகுத்து உயிர்கள் நன்னெறியடையாது கெடுக்கும் தீக்கோட்பெருக்குகளுண்டானதால் அவற்றையொழித்து நன்னெறி காட்டும் பொருட்டு சமய குரவர் நால்வர் தோன்றித் திருவருளால் இரும்பூதுகள் பலசெய்து இறைவனுண்ணின்றுணர்த்தியவாறு தேவார திருவாசகங்களாகிய தமிழ்மறைகளியற்றி யெங்கும் பரப்பிச் சிவநெறி தழைத்தோங்கப் புரிந்தனர். ஆதலால் அந்நால்வரும் சிவசமயக்குரவராயினர் என்க,

96. **வினா.**

சிவமயவாசிரியர் தோன்றிய காலம் எப்பொழுது?

**ஆ. உரை.**

உலகில் பலசமயங்களிருக்கின்றன. அவற்றில் கடவுளென வொருபெரும் பொருளில்லை; மக்கள் உண்டு துய்த்தலே யின்பம் என்றும், தெய்வத்துக்கு உணவு, ஊன், சுரை, மணி, உடை, பொருள் தந்துபோற்றில் அத்தெய்வம் வேண்டும் வரம் தந்தருளும் என்றும், கள், சுரைகளைப் பணிமாறியுண்டு களித்தலே முத்தியின்பம் என்றும், பிறவுயிர்களைப் பலியிட்டு வேட்கில் இம்மையில் எண்ணிய செல்வத்தைத்தந்து மறுமையில் தெய்வலோகத்தில் இன்பமுந்தரும் என்றும், உயிர்கள் தம் பாவங்களுக்காகப் பிறவுயிரைத் தெய்வத்துக்குப் பலியிட்டுப் பாவமன்னிப்பைப் பெறுகின்றனர் என்றும், தெய்வப்புதல்வன் உலக மக்களின் பாவத்துக்காக தான் பலியானதால் அவரை

நம்பியவர் பாவமன்னிப்பெய்தி பொன்னுலகம் புகுவ ரென்றும், அரிவையரின்பேவீடென்றும், உருவமுதலிய ஐந்து கந்தங்கெடல் வீடென்றும், முக்குணமடங்கல் வீடென்றும், வினைகெடலே வீடென்றும், மும்மலங்கள் கெடலே வீடென்றும், உடலழியாதிருப்பதே வீடென் றும், அனைத்தையும் பகுத்தறிவதே வீடென்றும், உயிர் கெட்டொழிவதே வீடென்றும், அணுமாமுன்னைய எண் பேறு பெறுவதே வீடென்றும், கல்லைப்போற்கிடப்பதே வீடென்றும் கூறுவாருமுளர்.

கடையில் நடுத்தீர்ப்புப்பெற்று ஒழியாவீடல்லது ஒழியா நரகம்பெறல் முடிவென்றும், உலகுயிரின்று, தானே பெரும்பொருளென்றும், அங்ஙனமறிதல் வீடென்றும், கட வுள் படைத்த வுறுப்பிலொன்றை யறுத்தலே தூய்மை யென்றும் இன்னும் பலவாறும் கூறுகின்றனர்.

உலகு, உயிர், இறை என்ற முப்பொருளுள்ளன; உலகறிவிலது, உயிர்கள் சிற்றறிவின; இறைவன் முற்றறி ஞன். பாடசாலை மாணுக்கர்போல உயிர்கள் வினைக்குரிய வாறு அறிவுடையராய் வெவ்வேறு சமயங்களைப்பற்றி யொழுகுகின்றனர். ஆதலால் ஒருசமயம் மேல், ஒருசமயம் கீழ் என்று குறித்தற்கின்று. உயிர் மும்மலமும் நீங்கி அருளைப்பெற்றுப் பேரின்பந்துய்த்தலே உயர் வீடு பேறு என்ற உண்மையை உணர்த்தும் வழிக்குச் சிவநெறி என்று பெயர் வழங்குகின்றது. இது முடிந்த முடிவாகிய உண்மை. உண்மை யெப்போதுமுள்ளது. அது பலகால் வெளிப்பட் டும், பலகால் வெளிப்படாமலுமிருக்கும். உலகமுதலற் றென்றுமுளது. பல சிவன்கோவில்கள் பூமிமட்டத்துக்குக் கீழ் வெட்டியெடுக்கப்பட்ட செய்திகளையொட்டிப் பார்க்கில்

அவை 50000, 80000, 100000, ஆண்டுகளுக்கு முற்பட்டிருப்பதாய்க் கருதப்படுகின்றது. இப்போதுள்ள தமிழ்க் கழகச்செய்திகளையும், மெசப்பட்டோமியர் எருதூர் (Ur of Erudu), கழநியூர் (Ur of Kalni) சாலடியரூர் (Ur of Chaladia) களிலாண்ட சுமேரியரென்னும் தமிழர் செய்திகளையும், தமிழ்க்கழகங்களின் வரலாறுகளையும் கருதி நோக்கில் சிவனார் நந்திக்கு பதினாறாயிரம் ஆண்டுகட்கு முன்னரே போதப்பொருளை அருளினர். அதை நந்தி சூத்திரமாகச் சனகாதிகளுக்குரைத்தனரென்றும்வெளியாகின்றது ஆதலால் இம்மண்ணுலகுக்கு முதற்குரவர் நந்தியெம்பெருமான் அதைத் திருமந்திரத்தில்.

"சைவப்பெருமைத் தனிநாயகனந்தி
யுய்யவகுத்தகுரு நெறியொன்றுண்டு
தெய்வச்சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்துளார்க்கு வகுத்துவைத்தானே"

என்று திருமூலதேவர் விளக்கியருளினர்.

பூவுண்டையின் நடுக்கோடடுத்திருந்த நிலப்பரப்பில் பதினாறாயிரம் ஆண்டுகட்கு முன் நிலவிய தமிழகத்தில் முதற்கழகம் வீற்றிருந்த தென்மதுரை (Lemuria. Submerged land.) கடல்கொள்ளப்பட்ட பொழுது தப்பியோடிய பழந்தமிழ் மக்கள் மேற்கே ஆப்பிரிக்காவிலுள்ள ஏரின், ஈஜிப்ட், வடக்கிலுள்ள பெலுஜிஸ்டான், ஆப்கான்ஸ்டான், பெர்சியா, அரேபியா, டர்க்கிஸ்டான், அசீரியா, மெசபட்டோமியா, பாலஸ்டன், இட்டாலி, ஸ்காண்டிநேவியன், கிழக்கிலுள்ள அசாம், பர்மா, சைனா, தென்கிழக்குள்ள ஆஸ்டிரேலியா முதலியவிடங்களுக்கும், டைகிரிஸ்யூவிரிட்டிஸ் ஆற்றுக்கரையூர்களிலும் சென்று குடியேறினர்.

பிறகு அவ்விடங்களிலிருந்து ஐரோட்பாவைச் சார்ந்த அங்கேரியா, இட்டலியைச் சார்ந்த இட்ரஸ்கன், பின்லான்ட், டஸ்கனி, ரோம், காமஸ்கட்கா, அமெரிக்காவிலுள்ள பெரு, சில்லி முதலிய விடங்களிலும் பழந்தமிழர் தங்கிப் பெருகிப் பலமொழிகள் படைத்துப்பேசிட் பல இனத்தாராயினர். மேற்குறித்த விடங்களிற் பேசும் மொழிகளில் தமிழ்ச்சொற்கள் கலந்திருப்பதும் அவ்விடங்களில் தமிழர் பழக்க வழக்கங்களும் காதைகளும் காணப்படலும் தமிழர் பழமையை விளக்குகின்றது.

குணங்குறியற்ற சிவம் சத்தியோடுகூடிப்படைப்பாதி ஐந்தொழில்புரிகின்றதென் றுணர்த்தும் சிவக்குறி(சிவலிங்கம்) யை முன்னிட்டுப் பெரும்பொருளை வணங்கும் வணக்கம் சிவநெறிதோன்றிய காலம் முதல் நிகழ்கின்றது. சிவக்குறியை வணங்கும் சிறந்த சிவன்கோவில்கள் தென்னிந்தியாவில் 1008 இருக்கின்றன. பிறசிவன்கோவில்கள்பல்லாயிரக்கணக்கிலிருக்கின்றன. வட இந்தியாவிலும் இலங்கையிலும் அவை பல ஆயிரக்கணக்கிலிருக்கின்றன.

சுமேரியர் என்ற தமிழர் மெசபட்டோமியாவில் கி. மு. 12000 ஆண்டுகட்குமுன் எருதூர் (Ur. of. Erudu) ஆட்சியும் அதன்பின் கழநியூர் (Ur. of Kalni) அதனபின் சாலடியரூர் (Ur. of Chaladia) அதன்பின் அங்காடியூர் (Ur. of Accadians) அதன்பின் பாபிலோன் ஆட்சிகள் நிகழ்ந்தன. அப்பாபிலோன் பட்டணத்தில் 1200அடி உயரமுள்ள சிவக்குறியும், ஹைட்ரோபோல்ஸ் பட்டினத்தில் 600 அடி உயரமுள்ள சிவக்குறியும், மெக்காவில் ஸகடீக்கேஸ்வரப் பெயருள்ள சிவக்குறியும் ஸம்ஸம் என்னும் கிணற்றில் ஒரு

சிவக்குறியும், ப்ராஜிஸ்(Frejus)நாட்டில் பலசிவக்குறிகளும் பிள்ளையார் வடிவங்களும், காரிப்த் நகரில் பார்வதியம்மை யின் கோவிலும், ஊிளாஸ்கோவில் பொற்றகட்டாற் போர்க் கப்பட்ட ஒரு சிவக்குறியும், பிரிஜியன் நாட்டில் ஏடன் என்னும் சிவக்குறியும், விநியா, யகோதி, சித்ரால், காபூர், பலக், புகார் முதலிய விடங்களில் பல சிவக்குறிகளும் உள்ளன. அங்குள்ளவர்கள் பஞ்சாக்ஷா, பஞ்சவீர என்ற பெயரால் அழைத்தும், வணங்கியும் வருகின்றனர். வேறு பலநாடுகளிலும் சைவாசிரியரால் கோடிக்கணக்கான சிவக் குறிகள்நாட்டப்பட்டிருக்கின்றன. ஆசியாடர்க்கியில்(Sivas) சிவ என்ற பெயருடைய பட்டினமுமிருக்கின்றது.

வட ஆப்பிரிக்கா கண்டத்துள்ள ஈஜிப்ட் தேசத்தின் மெம்பீஸ் நகரததில் நந்திவாகனன், திரிசூலன், சாம்பவாக்ரன், சரும்பாம்பரதாரி என்னும் சிவவடிவம் உள்ளது.

இவ்வனைத்தையும் கருதில் தென்மதுரையில் முதற் கழகம் தோன்றுமுன்னரும் வீற்றிருந்த காலத்தும் அதன் பின்னும் பல நாடுகளில் தமிழர் குடியேறித் தமிழர் பழக்க வழக்கங்களும் சிவசமயமும் இவ்வுலகெங்கும் பலவிடங் களில் பரவிச்சிவவணக்கமும் பரவியிருந்ததாய் நன்கு வெளிப்படுகின்றது. ஆதலால் சிவசமயவாசிரியர் இக்கற்பத் தில் 16,000 ஆண்டுகட்கு முன்னர்த்தோன்றி யிதுகாறும் விளங்கிவருகின்றனர்.

இடையிடையே சிவநெறிவிளக்க வேண்டிய காலங்க ளில் சிவனருளால் பலவாசிரியரைச் சிவனார்தோற்றுவிக் கின்றனர். ஆதலால் மெய்கண்டார், சமயகுரவர், நற்கீரர்,

அகத்தியர், காலங்களைச் சிவநெறி தோன்றிய காலமென்று குறித்தல் சால்பாகா தென்க.

97. வினா.

சிவன் என்ற சொல் தமிழா? வடமொழியா?

ஆ. உரை.

எங்கும்பொருந்தி (சிவணி)யிருத்தலால் கடவுள் சிவன் என்ற பெயராலழைக்கப்படுகின்றனன். இது காரணப்பெயர் இனி நமசிவய என்ற விரையெழுத்துகள் மண், நீர், தீ, கால், விண்களைக் கலந்தியக்கி நிற்கின்ற இறைவற் கிறையாய்க் கலந்து நிற்பவனைச் சுட்டி நிற்குந் திருமந்திரம் ஆம். ந = மண்—பெருமன், படைத்தல், ம = நீர்—விண்டு, காத்தல், சி = தீ = உருத்திறன், அழித் தல், வ = கால்—பெருங்கடவுள்—மறைத்தல், ய = விண்—நமசிவயன் சத்தாம்—சிவன், அருளல் என்ற ஐந்தொழில் புரிசத்தன். இதை மந்திரமாய் எண்ணும்பொழுது நமசிவய என்று, சூழ்மொழியை வெளிப்படையாய்க் கூறும்பொழுது நமச்சிவய் என்றும், நமச்சிவாய என்றும் அவன்திருப் பெயர் கூறப்படுகின்றது. தேவாரம் "நாதன் நாமம் நமச் சிவாயவே"

சி = சிவன், வ = அருள் (சத்தி), ய = ஆவி, ந = மறைப்பு ம = மலம், நமசிவயநடுவனை மாறலால் சிவயநம, யநமசிவ, மசிவயந, வயநமசி என்றும். இவ்வாறு நூற்றிருபத்தைந்து ஐந்தெழுத்து மாறல்களும் அதை எண்ணலால் சித்திவேற் றுமையுமுண்டாகின்றது. மந்திரவிரையெழுத்தில் ய தன் சேர்க்கை மாறலால் சித்திவேற்றுமையுமுண்டாவதால்

அவையனைத்தும்ஐந்தெழுத்தென்ற பெயரே பெறுகின்றது; அவற்றில் சிவன்பொருட்டு வணக்கம் என்ற பொருள் கிடையாது.

நமசிவய (சிவயநம) தூலபஞ்சாக்கரம் (பருமைந்தெழுத்து)

ஓம் சிவாய சூக்கும பஞ்சாக்கரம் (நுண்ணைந்தெழுத்து) (நாலெழுத்து)

ஓம் நமசிவாய ஆறெழுத்து.

ஓம் ஆம் அவ்வும் (ஔவும்) சிவாயநம (எட்டெழுத்து)

சிவ காரணபஞ்சாக்கரம் = அதிசூக்கும பஞ்சாக்கரம்.

சி. முத்திபஞ்சாக்கரம் பெருவெழுத்து பேசாவெழுத்து, ஊமையெழுத்து.

வ. பிஞ்செழுத்து பேசுமெழுத்து என்று கூறப்படுகின்றன. ஆதலால் ஓம், ஆம், (அவ்வும் = ஔவும்) மெய்யெழுத்து நீக்கி ஓவ்வோரெழுத்தாகவே கணக்கிடப்படுவது போல நமச்சிவாய என்பதும் மெய்யெழுத்தொழித்து ஐந்தெழுத்தாகக் கணிக்கப்படுகின்றது.

உலகனைத்துக்கும் காரணமாகிய சத்தியோடு கூடிய சிவத்தைக்குறித்து நிற்கும்காரண பஞ்சாக்கரம் சிவ (சி = சத்தன் = இறைவன், வ = சத்தி = இறைவி,) அதற்குத் தமிழ்மொழியின் பகுதிப்பொருள் விரிக்கில் சிவண் என்ற பகுதி பொருநதல், கலத்தல் என்ற பொருளுடையதால் எங்கும் (எல்லாவற்றினும்) பொருந்தியிருப்பவன் சிவ (சிவன் = சிவம்) என்னப்படுகின்றனன் இப்பொருளியைபு வடமொழிப் பகுதிகளிலில்லை.

ஆதலால் சிவன் என்றசொல் தமிழ்ச்சொல்லேயாம். இனி சிவனைத் தனிப்படக்குறிக்கும் விரையெழுத்து சி. அது மிருகாரண பஞ்சாக்கரம். அது எல்லாமறையின் பொருள், இறைவனிருக்குமிடம் ஆம் என்ப.

மேற்கூறியவற்றில் சிவபரம்பொருளைக் குறிக்கும் ஓரெழுத்தும் ஈரெழுத்தும் நாலெழுத்தும் ஐந்தெழுத்தும், ஆறெழுத்தும், எட்டெழுத்தும் ஐந்தெழுத்தென்றே கூறப் படுதலால் ஐந்தெழுத்தென்பதற்கு ஐந்தொழிற்கிறைமைக் குறிக்கும் எழுத்தென்பதே பொருள் எனல் தெளிவு.

---

## கோடிக்கவி

"அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்து—நெஞ்சழுத்திப்
பேசுமெழுத்துடனே பேசாவெழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி".

சுவேதாசுவதரம் = 3-11 "சர்வகதச்சிவ: எங்கும் (பொருந்திய வன்) சிவன்.

## லிங்காபட்டீயம்.

1. சமை (சாந்தம்) அடைந்திருக்கிறவராதலால் சிவன் என்றும்,
2. இவரிடத்தில் சற்சனங்களுடைய மனங்களிருக்கின்றன (சேரதே) ஆதலால் சிவன் என்றும்,
3. (சீங்ச்வப்நே) சாதுக்களிடமனங்களில் சயனித்திருக்கிறவர் ஆதலால் சிவன் என்றும்,
4. (சிஞ்சிசானே) அரிஷ்டம் சினோதிதநூகரோதீதி சிவம் அரிஷ்டத்தை (கெடுதியை) அற்பமாகச் செய்கிறது சிவம் (மங்களம்) ஆதலால் சிவன் என்றும்,
5. சிவம் = சுபம் (மங்களம்) அத்தோடுகூடினவர், சுபங்களைக் கொடுக்கிறவர் ஆதலால் சிவன் என்றும்,

98. **மா. வினா.**

இந்நூலிற்கண்ட உண்மைகள் யாவை?

**ஆ. உரை.**

கடவுள், உயிர், உலகம் (பதி, பசு, பாசம்) என உள் பொருள்கள் மூன்று அவற்றுள் 1. கடவுள் படைத்தல்,

---

6. (சோதனாகரணே) துக்கம் முதலியவற்றை (ஸ்யதி) அழிக்கிறது அதனால் சிவன் என்றும்,

மகாபாரதத்தில்

7. (வசகாந்தவ்) வஸ் என்ற பகுதியிற் பிறந்த வச, வசி என்றாய் எழுத்து நிலைமாற்றம் பெற்று பின்னெழுத்து முன்னெழுத்தாய் சிவ என்றாயிற்று. வஸ்—பிரியத்தைச்செய். சிவன்-பிரியத்தைச் செய்கிறவன்.

இப்பகுதிகளொன்றும் சிவ என்ற சொல்லுக்குப் பொருந்தியதாயின்மையால் ஆரியர் இந்நாட்டுக்கு வருமுன்னரே தமிழர் வழங்கி வந்த கடவுள் கந்தழி, சடையன், ஆலமர் கடவுள், நந்தி, நீறணிந்தோன், கண்ணுதல், நம்பன் முதலியன போலச்சிவன் என்ற பெயரும் சிவ என்ற மந்திரமும் தமிழில் வழங்கிவந்தன. அவற்றை வடமொழி யென்றுகாட்ட முயன்றதாலே இத்தகைய இடர்ப்பாடு நிகழ்ந்தது.

முத்திபஞ்சாக்கரம்:— திருமந்திரம்.

நாயோட்டு மந்திர நான்மறை வேதம்
நாயோட்டு மந்திர நாதாந்த சோதி
நாயோட்டு மந்திர நாதனிருப்பிடம்
நாயோட்டு மந்திர நாமறியோமே.

"திருநாம மஞ்செழுத்துஞ் செப்பாராகில்" (திருத்தாண்டகம்)

வேதநான்கினு மெய்ப்பொருளாவது
நாதநாம நமச்சிவாயவே. (திருஞானசம், தேவா)

நமச்சிவாய என்ற நாதன் நாமமே நால்வேதத்தினும் மெய்ப்பொருளாயுள்ளது என்றபடி நமசிவாய மந்திரம் எசுர் வேதத்தில் கூறப்பட்டுள்ளதன்றி, இருக்கு சாமம் அதர்வம் என்ற வேதங்களிற் கூறப்பட்டில்லை. ஆதலால் இவண் கூறப்படுவன தமிழ்மறைகளன்றே என்க.

காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்என்ற ஐந்தொழிற் கிறைவனு மொருவன். 2. உயிர்கள் ஐந்தொழிற்பட் டெய்துந் தன்மையுடைய வளவிறந்தன. 3. பாசம் உலகடங்கற்கும் தோற்ற மொடுக்கங்கட்கு நிலைக்களமாய் உடல், கருவி, பொழில், துய்ப்புகளாம் மாயை. அது தூய்தாமாயை, தூய் தல் மாயை யென்றிரு திறப்படும்.

கடவுள் ஒருபெயர் வடிவங்களால் குறிக்கப்படத்தக்க வனல்லன். அவன் உலகிலுள்ள எல்லாநாட்டினரும், எல்லாச் சமயத்தவரும், எல்லாவினத்தவரும், எல்லாமொழியினரும் உயர்வு, பெருமை, வல்லமைபற்றிக் கூறும் எல்லாப்பெயர் களுக்கு முரியவொருவன். அவன் கைம்மாறு கருதாதிடை விடாது நமக்குப்புரியும் நன்றிகருதி அவன்பாலன்புசெய் தல் நம் கடமை. அவன் எங்கும் எல்லாவற்றினும் நிறைந் துண்மையால் எப்பொருளைக்காணினும் அவையனைத்தும் அவன்வடிவாகக்கருதி இடைவிடாதெண்ணி யன்பு புரித லும் ஒரு வணக்கமுறையாம். அங்ஙனம் புரியில் பிறர்பால் வேற்றுமை பகை யொழிந்து எவ்வுயிர்க்கும் தீங்கிழைத்தல் நீங்கி எல்லவர்க்கும் நலம்புரியவுளம் நிகழும். கடவுளன்புள் ளாரைச் சார்ந்து பழகில் அன்புமீதூர்தலால் அன்னவர் வேடத்தையும் கடவுளை வணங்கும் இடத்தையும் அவனெனக் கருதுமுள நிகழ்ச்சி தோன்றும். அதுமுதிரவே உலகம், அன்பன், பகைவன், நொதுமல் என்ற வேற்றுமை கெட் டுக்கண்டனவெலாங் கடவுளாகக் கண்டயரா வன்புசெலுத் தித் தானவனெனக்கண்டிரண்டறக் கலந்து வீடுபேறடைவர்.

நல்லறிவும் நல்லொழுக்கமுமன்றி இனம், சமயம், பொருள், மொழி முதலியன உயர்வுதாழ்வுகளுக்குக் காரண

மாகா. கல்விபயிலு மாணவர் அவர் கற்கும் வகுப்புக்குரிய படிப்பும் அறிவுமடைதல்போல உயிர்கள் தத்தம் வினை, செவ்வி (பருவங்)களுக்குரிய அறிவும் சமயமும் சார்வதால் சமயமொன்றும் பயனற்றதென்று விலக்கத்தக்கதன்று. எல்லாம் படியொழுங்கில் தாழ்வும் உயர்வும் கொள்ளத்தக்கனவாம். உலகில் எல்லாவுயிர்களிடத்தும், எல்லாமக்களிடத்தும், வேற்றுமையொழிந்து அன்பு, இரக்கம் முதலியன புரிந்து எப்பொழுதும் கடவுள்பால் அயராவன்பு செலுத்தும் ஒழுக்கமே மேற்படியாஞ்சமயம். அதுவே உயர்ந்தது என்பனவே இந்நூலிற்கண்ட உண்மைகளாம் என்க.

முற்றிற்று.

---

ஈசனெனக் கருதி யெல்லா வுயிர்களையும்
நேசத்தால் நீ நினைந்து கொள்
பழுத்தி னிரதம்போற் பரந்தெங்குநிற்கும்
வழுத்தினு லீச னிலை.
சிவனுருவந் தானாய்ச் செறிந்தடங்கி நிற்கில்
பவநாச மாகும் பரிந்து.
(ஔவை குறள்.)

இந்நூலிற் கடவுளுக்குக் கூறப்பட்ட பெயர்கள். 1. அந்தம், 2. ஆதி, 3. தமி, 4. சிவசத்து, 5. சத்து, 6. முதல், 7. அரன், 8. பதி, 9. இறை என்பன.

# சிவஞானபோதம்

## நிலைக்களம் (அதிகரணம்)


சூத்,—1. 1. அவனவளதுவெனுமவை மூவினைமையின்-வினாவிடை 1, 2, 3, 4.

2. தோற்றியதிதியே ஒடுங்கி மலத்துளதாம்— 5, 6, 7, 8, 9.

3. அந்தமாதியென்மனார் புலவர்— 10, 11, 12, 13, 14, 15.

சூத். 2. 1. அவையே தானேயாய்— 16.

2. ஆணையினிருவினையின்— 17, 18, 19.

3. போக்குவரவுபுரிய— 20, 21, 22.

4. நீக்கமின்றி நிற்குமன்றே— 23.

சூத். 3. 1. இலதென்றலின்— 24, 25.

2. எனதுடலென்றலின்— 26.

3. ஐம்புலனறிதலின்— 27.

4. ஒடுக்கமறிதலின்— 28.

5. கண்படின் உண்டிவினையின்மையின்— 29.

6. உணர்த்தவுணர்தலின்— 30.

7. மாயாவியந்திர தனுவினுள் ஆன்மாஉளது31

சூத். 4. 1. அந்தக்கரணமவற்றிலொன்றன்று— 32.

2. அவைசந்தித்தது சகசமலத்துணராது-33.

3. அமைச்சரசேய்ப்ப நின்றஞ்சவத்தைத்தே (ஆன்மா)— 34.

சூத். 5. 1. விளம்பியவுள்ளத்து மெய்வாய் கண்மூக்க ளந்தளந்தறியா—35.

2. ஆங்கவைபோலத்தாந்தமுணார்வின் றமியருள் காந்தங்கண்ட பசாசத்தவையே— 36, 37, 38.

சூத். 6. 1. உணருருவசத்தெனி லுணராதின்மை யின்—39.

2. இருதிறனல்லது சிவசத்தாமென விரண்டு வகையிலிசைக்குமன்னுலகே— 40.

சூத். 7. 1. யாவையுஞ்சூனியஞ்சத்தெதிராகலிற்சத்தே யறியாது— 41.

2. அசத்திலதறியாது— 41. (அ.)

3. இருதிறனறிவுள திரண்டலாவான்மா 42.

சூத். 8. 1. தவத்தினி லுணர்த்த— 43, 44, 45

2. தம்முதல் குருவுமாய்— 46, 47.

3. ஐம்புலவேடரினயர்ந்தனை வளர்ந்தென— 48, 49.

4. விட்டன்னியமின்மையினரன் கழல்செலுமே 50, 51.

சூத். 9. 1. ஊனக்கண் பாசமுணராப்பதியை ஞானக் கண்ணினிற்சிந்தைநாடி— 52, 53.

2. உராத்துனைத்தேர்த்தெனப்பாசமொருவத் தண்ணிழலாம்பதி— 54.

3. விதியெண்ணு மஞ்செழுத்தே— 54 (அ.)

சூத். 10. 1. அவனே தானேயாகியவந்நெறியேகனுகி-55
2. இறைபணிநிற்க மலமாயை தன்னுெடு வல்வினையின்றே—56, 57, 58, 59.

சூத். 11. 1. காணுங்கண்ணுக்குக் காட்டு முளம்போற் காணவுள்ளத்தைக் கண்டு காட்டலின் (காட்டிக்காண்டலின்)— 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 68, 69.
2. அயரா வன்பினரன்கழல்செலுமே— 70, 71, 72, 73, 74, 75, 76.

சூத். 12. 1. செம்மலர் நோன்றுள்சேரலொட்டாவம் மலங்கழீஇ— 77, 78, 79, 80, 81, 82.
2. அன்பரொடு மரீஇ— 83, 84, 85.
3. மாலறநேய மலிந்தவர் வேடமும்ஆலயந்தானும் அரனெனத் தொழுமே— 86, 87, 88 89, 90, 91, 92.

---

## புறனடை.

விஞவிடை— 93, 94, 95, 96. 97, 98.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 23 | வேதமராகமங்களின் | வேதமாகமங்களின் |
| 5 | 18 | மாயிருமியப் ... | மாயிருடேமியப் |
| 8 | 20 | சித்த ... | சித்தர் |
| 9 | 10 | ஞென்றன் ... | ஞென்றன் |
| 11 | 25 | புகன்மிருதி .... | புகன்மிருதி |
| 14 | 24 | யுராத்துணைத் .... | யுராத்துணைத் |
| 19 | 15 | தூல்களிலும் ... | நூல்களிலும் |
| 25 | 23 | ஒடுங்கியி .... | ஒடுங்கி |
| 26 | 18 | தழிக்கன்கின்றனன் | தழிக்கின்றனன் |
| ,, | 23 | நிற்லால் .... | நிற்றலால் |
| 30 | 15 | கூட்டுவன் ... | ஊட்டுவன் |
| 33 | 11 | யிலாத .... | யில்லாத |
| ,, | 14 | நிழல் ... | நிழல் ஒளியின்மை, அது ஒருபொருளன்று |
| ,, | 15 | தீவனைகளும் .... | தீவினைகளும் |
| ,, | 17 | சிதாபாசனுக்கும்... | சிதாபாசனுக்கும் (சித்தின் பொய்த்தோற்றத்துக்கும்) |
| ,, | 18 | நிற்பதொன்றுளவாக | நிற்பதொன்றுளதாக |
| ,, | 21 | உயிரறிவை-வெனில் | நான்பருத்தேன், கரியேன் என ஒற்றுமைபற்றி உயிர் உடலின்வேற்றுமைப் படாது வழங்குதலால் உடம்பே உயிராமெனில்? |
| ,, | 23 | மாயை...ன்மாவன்று | நான் கை, நான் காலென வழங்குவாரின்றி என் மனைவி, என் வீடு என்னல்போல எனதுடல், என்கை என வேற்றுமைப்பட வழங்கக் |

| பக்கம்வரி. | | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| | | | காண்டலின் உடல் உயிரன்று. உயிர் உடலின் வேறுபட்டதென்க. |
| 39 | 17 | எவை:— ... | எவை:-இல்லது யாது? |
| 40 | 2 | (மாறுவது) ... | (மாறுவது) எவற்றானும் அறியப்படாதது இல்லாதது (இல்பொருள்) ஆம். |
| ,, | 11 | அவ்விருதிறனுமில்லாதது ... | அவ்விருதிறனுமல்லாதது |
| ,, | 14 | அசத்துமன்று .... | அசித்துமன்று |
| ,, | 22 | மெனலாம் .... | மென்ப |
| ,, | ,, | அதுவேசத்து .... | அதுவேசத்து. சிவம் எங்கும் சிவணி (வியாபித்து) விளங்குவது. |
| ,, | 27 | சிவசத்து அசத்தை யறியுமா? அல்லது அசத்து (சடசத்து) சிவசத்தையறியுமா? எனில் | சிவசத்து அசத்தையறியுமா? எனில் |
| 41 | 7 | அறியாது ... | அறியாது(பகுத்தறியாது) |
| | 7க்கும் 8க்கும்இடையே | | (41 அ.) மாணாக்கன் வினா அசத்து(சடசத்து) சிவசத்தையறியுமா? |
| | 8 | கண்ணாடி .... | ஆ. உளா. கண்ணாடி — சிவசத்தையறியாது |
| 43 | 25 | தன்ணிடத்து ... | தன்னிடத்து |
| 47 | 2 | கதிரவளைக் .... | கதிரவனைக் |
| | 3வதுவரிக்குப்பின் | .... | (54) மாணாக்கன் வினா பதிஞானந் தோன்றிய |

| பக்கம் | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| | | | பொழுது உலகப்பற்றுகள் நீங்குவதெவ்வாறு ? ஆ. உரை. பதிஞானி உலகையும் அதிலுள்ள பற்றுப்பொருள்களையும் கானல்நீரினியல்பிற்றாய்க் கழிவதெனக்கருதிப் பற்றொழிந்து சிவஞானத்தில் நிலைக்கில் பற்றனைத்தும் நீங்கும். அப்பொழுது பதிபிறவித்துன்பாம் வெப்பை நீக்கும் தண்ணிய நிழலாம் என்க. |
| ,, | 4 | (54) மாணாக்கன்வினா | (54.அ) மாணாக்கன்வினா |
| 58 | 25 | விரைகளாயமைபடுகின்றன | விரைகளா யமைகின்றன |
| 68 | 22 | பிறனொருவனுககும் | பிறனொருவனுக்குக் |
| 81 | 6 | 19 வினா ... | 91 வினா |
| 82 | 16க்குப்பின் | ... | புறனடை. |
| 96 | 2 | புடையன .. | யுடையன |
| 97 | 6 | இதிஹோவாசவத்த: | த்வதத: |
| | 7 | கச்சதி ... | கச்சதி இதிஹோவாச ,, |
| | 17 | தசோக்த: ... | தசோக்தம |
| | 18 | ஏதச்சரேயோயெபி நந்தி .... | ஏதச்ரேயோயேபிநந்தந்தி |
| 114 | 27 | யூவிரிட்டிஸ் .... | யூபிரிட்டிஸ் |

உ

இதன் அடியிற்கண்ட இடங்களில், இப்புத்தகம் நேரிலும், தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதி 1-க்கு விலை ரூ 1—0—0.

10 பிரதிகள் வாங்குவோருக்கு
ஒரு புத்தகம் இனாம்.

---

சாமி, விருதை சிவஞான யோகிகள்,
கோவிற்பட்டி.

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை,
தூத்துக்குடி.

திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், கிளை நிலையம்,
6. பவளக்காரத் தெரு, சென்னை.

ஷை தலைமை நிலையம்,
கீழரதவீதி, திருநெல்வேலி